# நீறணி பவளக் குன்றம்

(ஒன்பதாம் திருமுறை ஆய்வு நூல்)

முனைவர் கி. சுப்பிரமணியன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# நீறணி பவளக் குன்றம்

## (ஒன்பதாம் திருமுறை ஆய்வுநூல்)

முனைவர் கி. சுப்பிரமணியன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை - 600 113

இராமலிங்கம் அபிராமி அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியவர்: ஆ.ரா. சிவக்குமாரன், சிங்கப்பூர்)
வரிசை எண் : 4

---

## BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title of the Book | : | Nira̲ṇi pavaḷak kuṉṟam<br>(oṉpatām tirumuṟai āyvu nūl) |
| Author | : | Dr. K. Subramaniyan<br>Tamil Professor<br>"Aathirai", 17, Saay Street<br>Palaniyappa Nagar, Ramanathapuram<br>Coimbatore-641 045 |
| General Editor | : | Dr. T. Mahalakshmi<br>Senior Research Fellow<br>Faculty of Tamil Literature and Manuscriptology<br>International Institute of Tamil Studies<br>Tharamani, Chennai-600 113 |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Chennai-600 113<br>Ph: 22542992 |
| Publication No. | : | 631 |
| Language | : | Tamil |
| Edition | : | First |
| Year of Publication | : | 2009 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | viii+104 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs. 35/- (Rupees Thirty five Only) |
| Printed by | : | United Bind Graphics<br>189-D, Royapettah High Road<br>Mylapore, Chennai - 600 004. |
| Subject | : | A Study of Saiva Canonical Hymns of 9th Thirumurai |


---

அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று.

பேரா. முனைவர் கரு. அழ. குணசேகரன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை-600 113

# அணிந்துரை

சோழர்களின் ஆட்சியில் தமிழ் இலக்கியம். சமயம், கலை, மருத்துவம், அரசியல், மக்களின் பண்பாடு போன்ற துறைகள் சிறப்புப் பெற்றுத் திகழ்ந்தன. சிறப்பாகக் கூறவேண்டுமென்றால் கி.பி. 10ஆம், 11ஆம் நூற்றாண்டுகள் தமிழகத்தை அரசாட்சி புரிந்த இராசராச சோழ மன்னனின் காலமும் அவரின் மகன் இராசேந்திரனின் ஆட்சிக் காலமுமாகும். தமிழர்களின் கலைப் பண்பாட்டுக் கூறுகள் கடல் கடந்து அந்நிய நாடுகளிலும் தடம் பதித்தன.

சிதம்பரத்தில் சிறைப்பட்டுக் கிடந்த திருமுறைகள் அனைத்தும் இராசராச சோழனின் ஆணையால் மீட்டெடுக்கப் பெற்று மக்களின் உள்ளங்களிலும், உதடுகளிலும் ஒலிக்கப் பெறும் பேற்றினை ஏற்படுத்தினான். மதம், வழிபாடு, அறம், தத்துவம், ஆகியவை பக்தி வழியே இலக்கியங்களாக வெளிப்பட்டன.

சைவ இலக்கியங்கள் பல்வேறு நூற்றாண்டுகளாக முகிழ்ந்தவற்றைத் தொகுத்துப் பன்னிரு திருமுறை என்று நம்பியாண்டார் நம்பி அவர்களால் நமக்கு அளிக்கப் பெற்றது.

பன்னிரு திருமுறையில் ஒன்பதாம் திருமுறையின் ஒரு பாடலின் ஒரு தொடரான **நீறணி பவளக் குன்றம்** என்ற தலைப்பு அறக்கட்டளைப் பொழிவின் தலைப்பாக எடுத்துக்கொள்ளப்பட்டு ஆய்வு நூலாக வெளிவருகிறது.

ஒன்பதாம் திருமுறையின் ஆசிரியர்கள் ஒன்பதின்மர். அவர்கள் திருமாளிகைத்தேவர், சேந்தனார், கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பிகாடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள், திருவாலியமுதனார், புருடோத்தம நம்பி, சேதிராயர் ஆவர்.

பத்துப்பாடல்கள் கொண்ட தொகுப்பைப் பதிகம் என்று அழைப்பர். சைவத் திருமுறைகள் பெரும்பான்மை பதிகங்களாகவே இடம்பெற்றுள்ளன. இவ்வொன்பதாம் திருமுறையில் 29 பதிகங்கள் உள்ளன. மொத்தம் 365 பாடல்கள் இடம்பெற்றுள்ளன.

இதனை,

> அடைவுறு மாளிகைத்தேவர் நான்கு, சேந்தர்
> அன்புறுபல் லாண்டொன்றோ டிசைப்பாமூன்று
> திடமுடைய கருவூரர் பத்து, வீறிற்
> சிறந்த காடவ ரிரண்டு, கண்டா வேணாடர்
> படி புகழொவ் வொன்று, திருவாலி நான்கு,
> பன்னு புருடோத்தமனா ரிரண்டு, சேதிராயர்
> உடையதிருக் கடைக்காப் பொன்றாக விருபத்தொன்பான்
> ஓது செய்யுள் முந்நூற் றறுபதினோ டைந்தே

என்ற பழம்பாடலே இதற்குச் சான்றாகும்.

ஆனால் நமக்குக் கிடைத்திருப்பவை 301 பாடல்களே ஆகும்.

சைவத் திருமுறைகள் இசைப்பாக்களாக இருப்பினும் 'திருவிசைப்பா' என்று பெயர் பெற்றிருப்பதே இதன் சிறப்பினை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

சைவத்திலுள்ள திருப்பல்லாண்டு இத்திருமுறையில்தான் அமைந்துள்ளது.

சைவ மரபில் திருமுறைக்கு ஒன்றாக ஒரு பாடல் பாடுவது மரபு. இதனைத் திருப்பதிகம் விண்ணப்பித்தல் என்று கல்வெட்டு கூறுகிறது. அவற்றை

1. தேவாரத்தில் 1 பாடல்
2. திருவாசகத்தில் 1 பாடல்
3. திருவிசைப்பாவில் 1 பாடல்
4. திருப்பல்லாண்டில் 1 பாடல்
5. பெரியபுராணத்தில் 1 பாடல்

என்று வழங்கியுள்ளமையால் இதனைப் பஞ்சபுராணம் என்று வழங்குவர். இப்பஞ்சபுராணத்தில் திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் இடம்பெற்றுள்ளன.

முருகனுக்கென்று ஒரு தனிப்பதிகம் பாடப்பெற்ற பெருமையும் இதற்குண்டு. அகப்பொருட்சுவை மிக்க பதிகங்கள் இத் திருமுறையில் விரவியுள்ளன.

> **சிவபரம்பொருள், குன்றம் போன்ற பெருமையுடையவன், பவளம்போல இளஞ்சிவப்பு நிறமுடையவன், அந்தப் பொன்னார் மேனிமீது வெண்ணீற்றைக் கீற்றுகளாகப் பூசியவன் என்ற சிந்தனையையும் உள்ளடக்கிய ஒரு தொடராய் 'நீறணி பவளக்குன்றம்' விளங்குகிறது. (ப.45)**

என்கிறார் நூலாசிரியர் முனைவர் கி. சுப்பிரமணியன் அவர்கள். இந்நூல் தெளிவுடனும், செறிவுடனும், ஒன்பதாம் திருமுறையைத் தொகுத்துச் சுட்டுகின்றது. பக்தி இலக்கிய வளர்ச்சியையும் நுண்மாண் நுழைபுலத்துடன் சுட்டிக் காட்டுகின்றது.

பக்தி இலக்கியத்திற்குத் தேவையான ஆய்வுகளை வகுத்துத் திரட்டிப் பதிவு செய்துள்ள இந்நூலாசிரியருக்கு எனது பாராட்டுக்கள்.

இந்த அறக்கட்டளையைத் தம் பெற்றோர் பெயரில் இந்நிறுவனத்தில் நிறுவிய சிங்கப்பூர் அன்பர் ஆ.ரா.சிவக்குமாரன் அவர்களுக்கும் என் நன்றி.

இவ்வறக்கட்டளைப் பொறுப்பாளராக இருந்துவரும் இந்நிறுவன முதுநிலை ஆராய்ச்சியாளர் முனைவர் தி. மகாலட்சுமிக்கு எனது பாராட்டுக்கள்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் நிறுவனத் தலைவரும் தமிழக அரசின் முதல்வருமான மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக்கடன்பட்டுள்ளது.

தமிழ்ப்பணிகளுக்கு ஆற்றுப்படுத்தி வரும் மாண்புமிகு தமிழக நிதியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்களுக்கு எம் நன்றி என்றும் உரியது.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழ் வளர்ச்சி, அறநிலையம் மற்றும் செய்தித் துறை அரசுச் செயலாளர் திரு க. முத்துசாமி இ.ஆ.ப. அவர்களுக்கும் நன்றி.

இச்சொற்பொழிவின் எழுத்துருவை மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும், இச்சொற்பொழிவு மற்றும் நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள் மற்றும் கணிப்பொறியாளர் திருமதி எ.ம. லட்சுமி ஆகியோருக்கும் எம் நன்றிகள் என்றுமுண்டு. இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த யுனைடெட் பைண்ட் கிராபிக்ஸ் அச்சகத்தாருக்கு எம் பாராட்டுகள்.

**இயக்குநர்**

# ஆசிரியர் குறிப்பு



இருகூர் கிருஷ்ணன் சுப்பிரமணியன் (ஐ.கே.எஸ்.) 10-06-1940இல் கோவையருகில் பிறந்தார். உள்ளூர்ப் பள்ளியில் படித்த பின்னர், கோவை அரசுக் கலைக் கல்லூரியில் 1962இல் இளநிலை அறிவியல் (பி.எஸ்ஸி-தாவரவியல்), கோவை பெரிய நாய்க்கன் பாளையம் ஸ்ரீ இராமகிருஷ்ணா வித்யாலயம் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் இளநிலைக் கற்பிப்போர் (பிடி.) 1964, பட்டங்கள் பெற்றார். 1964-67 முடிய மூன்றாண்டுகள் சென்னையில் தமிழ்க்கலைக் களஞ்சியத்தில் துணைப்பேராசிரியராகவும், 1967-72 முடிய ஐந்தாண்டுகள் சிற்றூர் ஒன்றில் அறிவியல் ஆசிரியராகவும் பணிபுரிந்தார். 1971இல் தமிழில் முதுகலைப் பட்டம் (எம்.ஏ.) பெற்று 1972 முதல் 1998 முடிய அரசுக் கலைக் கல்லூரிகளில் இணைப் பேராசிரியராக ஓய்வு பெற்றார். எட்டு ஆண்டுகள் கோவை கற்பகம் கலை அறிவியல் கல்லூரியில் பன்னிரு திருமுறை ஆய்வுமையப் பொறுப்பாளராகச் செயல்பட்டார்.

வள்ளலார் ஒரு மறுமலர்ச்சியாளர் என்னும் தலைப்பில் செய்த ஆய்வுக்காகச் சென்னைப் பல்கலைக்கழகம் 1985இல் முனைவர் பட்டம் நல்கியது. பின்னால் இந்த ஆய்வேடு "நீர்மேல் மலர்ந்த நெருப்பு" என்னும் பெயரில் நூலாக வெளிவந்துள்ளது. இராமலிங்கரையும் இராமகிருஷ்ணரையும் ஒப்பிட்டு மேலாய்வு செய்து "The Sun and the Moon" என்னும் ஆங்கில நூலை எழுதினார். பல்கலைக் கழக மானியக் குழுவின் திட்டத்தில் உருவான இந்நூல் பல அறிஞர்களின் பாராட்டுப் பெற்றது. திருமந்திரத்தில் 108 பாடல்களைத் தேர்ந்தெடுத்து எல்லாரும் புரியும் வண்ணம் எளிய உரை எழுதி "உள்ளம் பெருங்கோயில்" என்ற ஒரு நூலை வெளியிட்டார். படிப்போரை ஈர்க்கும் வண்ணம் பரவலாக அந்த நூல் சென்றடைந்தது. இவை தவிர, "சிவநெறியே சன்மார்க்கம்", "திருத்துழாய் மாலை", "கருடாழ்வார் துதி", "திருவாசகம் ஓர் அறிமுகம்", "சேரமான் பெருமாள்", "விராடன் துதி" என்ற நூல்களும் இவருடைய படைப்புத் திறனை வெளிப்படுத்தின.

# பொருளடக்கம்


| | பக்கப் |
|---|---|
| முன்னுரை | 1 |
| 1. ஒன்பதாம் திருமுறை - ஓர் அறிமுகம் | 4 |
| 2. இறைவன் | 14 |
| 3. அடியார்கள் | 23 |
| 4. இறைவனின் அருள்புரி தன்மை | 27 |
| 5. அடியார்கள் பெறும்போது...... | 32 |
| 6. இயற்கை வருணனை | 38 |
| 7. சொல்லாட்சி | 43 |
| 8. உவமைகள்/உருவகங்கள் | 54 |
| 9. அகத்துறைப் பாடல்கள் | 62 |
| 10. சமுதாயச் செய்திகள் | 73 |
| 11. தத்துவம் | 83 |
| 12. முதலும் முடிவும் | 97 |
| பிற்சேர்க்கை | 103 |
| துணை நூல்கள் | 104 |

# முன்னுரை

நீறணி பவளக் குன்றமே! நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே!
வேறணி புவன போகமே! யோக
வெள்ளமே! மேருவில் வீரா!
ஆறணி சடைஎம் அற்புதக் கூத்தா!
அம்பொன்செய் அம்பலத்து அரசே!
ஏறணி கொடிஎம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமாறு இசையே

தமிழ்ப் பக்தி இலக்கியம் வளமானது; 1500 ஆண்டுகளுக்கு மேற்பட்டும் நிலைத்து நிற்கும் வலிமையுடையது; இறைவன் பக்தி என்று மட்டுமல்லாமல் மக்களையும் அவர்கள் தம் வாழ்வையும் முன்னிறுத்தும் சமூகச் சிந்தனை கொண்டது.

ஐந்திணை என வகுத்த சங்க இலக்கிய நெறியைப் பின்பற்றி, முதற்பொருளான நிலம், பொழுது; கருப்பொருளான தெய்வம் உள்ளிட்ட பல; உரிப்பொருளான அன்பு என இவற்றைப் பதிவு செய்த பெருமையும் உடையது.

தமிழ்ப் பக்தி இலக்கியம் தமிழனின் பண்பாட்டுப் பெட்டகம்; நாகரிகத்தின் கண்ணாடி; தெய்வ அருளை நாடிய ஆன்மிகத் தேடலின் பதிவு. ஏறக்குறைய இருபத்தைந்தாயிரம் பாடல்களில் சைவமும் வைணவமும் இந்தப் பக்தி மரபைக் காலந்தோறும் காத்தும், தலைமுறைகள் தோறும் பரப்பியும் வந்துள்ளன. காலத்தை வென்று, எப்போதும் வாழும் பேறுபெற்ற பாடல்கள் இவை. 'என்றுமுள தென்தமிழ்' எனக் கம்பர் பெருமிதம் கொள்வதற்கான மூல வித்தைப் பக்தி இலக்கியத்துள் காணலாம். 'காண்பதற்குக் கண்' வேண்டும் கருத்தும் வேண்டும்.

அந்தப் பல்லாயிரம் பாடல்களில் ஒன்று தான் மேலுள்ளது. அதனுடைய முதல் வரியே இந்த நூலுக்கும் தலைப்பு ஆனது. நீறணி பவளக் குன்றம், புவன போகம், யோக வெள்ளம், தாமாகப் பீறிட்டு எழுந்தவை. தெய்வத் திருவடியில் நெஞ்சைக் கரைத்ததால் உடைந்து பொங்கிய உணர்ச்சி வெள்ளம் மூவர் தேவாரத்திலும் பிற திருமுறைகளிலும் இருப்பது போன்ற சொல்லமைதியை மீறிய உருவகங்கள் ஒன்பதாம் திருமுறையில் தெறித்து விழுந்துள்ளன.

கோவையில் எங்களுக்குத் தமிழுணர்வையும், உயிரையும் ஊட்டிய அருட்கலைக் கழகப் பேராசான் மறைத்திரு. ப.சு. மணியம் ஐயா அவர்களுக்குப் பின், திங்கள்தோறும் தமிழ்வகுப்பு எடுக்கும் பேறு திருவருளால் எனக்கு வாய்த்தது. அன்பர்கள் வேண்டிக் கொண்டனர். அந்தத் தூண்டுதலால் தங்கச் சுரங்கத்துக்குள் நுழைந்தேன்! பிரமித்தும் போனேன். அப்படி ஒரு புதையலை அதனுள் கண்டு மயங்கிநின்றேன். 'சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துவனே! என மனோன்மணீயத்தில் சுந்தரம்பிள்ளை பாடுவது மெய்தான். தமிழன்னையின் இலக்கிய, ஆன்மிக, தெய்வ நலம் சார்ந்த பேரழகு என்னை ஈர்த்தது. புவனம், போகம், யோகம் என்ற இவை எல்லாமே ஒன்பதாம் திருமுறையுள் நிரம்பி நிறைவடைந்த அறிவுக்காட்சியைப் பிறரும் துய்த்து மகிழ, இன்னும் அந்த வகுப்புகள் தொடர்கின்றன.

இந்தச் சூழலில் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் இருந்து 'இராமலிங்கம் அபிராமி' அறக்கட்டளைச் சொற்பொழிவு நிகழ்த்த வேண்டி அஞ்சல் வந்தது. 'நான் பெற்ற இன்பம் பெறும் இவ்வையகம்' என்னும் தமிழுணர்வுடன் ஒன்பதாம் திருமுறையை நெடிது நோக்கி இந்த ஆய்வு நூலை எழுதினேன். உங்கள் கையில் "நீறணி பவளக் குன்றமாக" அது உள்ளது.

பன்னிரு திருமுறைகள் என்பது சைவ உலகில் புகழ்ந்து சொல்லிக் கொண்டாலும், தேவாரம் திருவாசகம் பெரியபுராணம் என்ற முக்கோணங்களைத் தாண்டி ஆர்வலரும் பிற திருமுறைகளைப் பார்ப்பதில்லை; ஆய்வாளரும் ஆய்வுப் பொருளாகக் கொள்வதில்லை. இதுவரை வெளிவந்துள்ள நூல்களின் எண்ணிக்கையைப் பார்த்தாலே ஒன்பதாம், பதினோராம் திருமுறைகள் பற்றியவை மிகமிகக் குறைவு என்பது புலப்படும். பிறர் அதிகமாகக் கவனம் செலுத்தாத புலங்களில் அறிவு செல்ல வேண்டும். அதுவே பயன்தரும் ஒன்றாக இருக்கும்.

அந்த நோக்குடன் தான் இந்த நூல் எழுதப்பட்டது. திருவிசைப்பா, திருப்பல்லாண்டு என்ற இந்தத் திருமுறையை எளிமையாக அறிமுகம் செய்த பின்னர், பத்துத் தலைப்புகளில் ஓரளவு விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டதைப் படிப்போர் உள்ளே காணலாம். குறிப்பாக அடியார்கள், அவர்கள் பெறும்பேறு, இயற்கை வருணனை, சொல்லாட்சி குறிக்கத்தக்க பகுதிகள். இவையன்றி 'அகத்துறைப் பாடல்கள்' பகுதியில் மரபு வழிப்பட்ட கடவுளின்பத் தேட்டம் ஓவியமாகத் திருவிசைப்பாவில் ஒளிர்வதைக் காணலாம். தத்துவச் சிந்தனைகள், பக்தி இலக்கியத்தில் உள்ளன என்பதைக் காட்டும் நிறைவுக்குப்பின் முதலும் முடிவும் என்ற பகுதியில் இறைவனை மனம், மொழி, மெய் என்னும் நான்கின் அடிப்படையில் இருக்கும் நெறிகள் திருமுறையில் அமைந்துள்ள அழகு

புலப்படுத்தப்பட்டுள்ளது. 301 பாடல்களே கொண்ட சிறிய நூலேயாயினும், பெரும்பெரும் மானுடப் பண்பாட்டுக் கருத்துகளைத் தாங்கிய திருவிசைப்பா தமிழ்வழித் தெய்வச் சிந்தனையின் வீச்சில் மலர்ந்ததுவே என்பது படிப்போருக்குத் தெரியும். இயற்கை வருணனைப் பகுதியுள் விலங்குகள், பறவைகள், தாவரங்கள் என்ற இவை நிலஞ்சார்ந்த செல்வங்கள்: இவை பேணிக் காக்கப்பட வேண்டும் என்ற அவசரத்தையும் இந்த நூல் காட்டும். ஒன்பதாம் திருமுறையைப் புதியநோக்கில் ஆய்வு செய்த நூல்கள் இதற்குமுன் இந்த வடிவில் வந்தனவா எனத் தெரியவில்லை. ஒருவேளை இது தொடக்கமாகக் கூட இருக்கலாம். மு. அருணாசலம் மிகப்பெரும் இலக்கிய வரலாற்றுப் பேரறிஞர் அவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் 1974இல் இந்தத் திருமுறை பற்றி அறக்கட்டளைச் சொற்பொழிவு நிகழ்த்தியுள்ளார். இப்போது அடியேன் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 'இராமலிங்கம் அபிராமி' அறக்கட்டளை சார்பில் இந்த நூலைப் படைக்கிறேன். அது நான் பெற்ற பேறு. முழுப் பெருமையும் நிறுவனத்திற்கே உரியது.

கன்னட நாட்டில் வாழ்ந்த தமிழறிஞர் ஏ.கே. இராமானுஜம் தமிழ்ப் பக்தி இலக்கியங்களில் சிறுசிறு பகுதிகளை ஆங்கிலப்படுத்தி மேலை நாடுகளுக்கு அறிமுகப்படுத்தினார். அவற்றைப் படித்தும் அவற்றில் தோய்ந்தும் இன்பம் பெற்ற சில அமெரிக்க மாணவ வெள்ளையர்கள் 'எங்கள் வாழ்நாளுக்கு இவை மட்டுமே போதும்' எனச் சொல்லிச் சொல்லி மன உறுதி பெற்றார்கள். ஏனோ அருளாளர்களும் அருள்நூல்களும் பிறந்த மண்ணில் போற்றப் படுவதில்லை. கல்வி நிலையங்களிலும் புதுக்கவிதை வெள்ளத்திலும் பக்தி இலக்கியம் புறக்கணிக்கப்பட்டே கிடக்கிறது. இளைஞர் நெஞ்சில் இதன் மேன்மையைப் புகட்டுவது உயர்நிலையில் உள்ளோர் கடமை. அதுவே செய்யத்தக்க உரியபணி. தமிழ்ப் பண்பாட்டு நெறி சிதையாமல் பக்தி இலக்கியத்துள் இருக்கும் பாங்கை, தக்கவர்கள் தக்காரிடத்தில் ஓயாது சொல்ல வேண்டும். அதன் வழியில் ஒரு சிறு முயற்சி இந்நூல்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவன முன்னாள் முனைவர் ம. இராசேந்திரன் அவர்களுக்கும், இயக்குநர் முனைவர் கரு.அழ. குணசேகரன் அவர்களுக்கும் அறக்கட்டளைப் பொறுப்பாளர் முனைவர் தி. மகாலட்சுமி அவர்களுக்கும் என் நன்றி.

**வாழ்கசீர் அடியார் எல்லாம்!**

**கி. சுப்பிரமணியன்**

# ஒன்பதாம் திருமுறை - ஓர் அறிமுகம்

தமிழகத்தில் பழஞ்சமயங்கள் சைவம், வைணவம் ஆகிய இரண்டு. இவற்றின் வழிபடு தெய்வங்களாகிய சிவபெருமான்மீதும், திருமால்மீதும் காலந்தோறும் அருளாளர்கள் பாடிய பாமாலைகளை ஒரு முறைப்படுத்தித் தொகுத்துத் தமிழுலகிற்குத் தந்த பெருமைக் குரியவர்கள் நம்பியாண்டார் நம்பியும் நாதமுனிகளும் ஆவர். அவர்களுடைய திருவடிகளைத் தமிழ்ப் பக்தியுலகம் என்றும் போற்றவேண்டும்.

பன்னிரு திருமுறைகள் என்றும் நாலாயிரத் திவ்யப்பிரபந்தம் என்றும் பெயர்பெற்ற அந்தப் பாமாலைத் தொகுப்புகள் பல நூறு ஆண்டுகள் கழிந்தும் பக்தித் தமிழின் பெருமையை உலகிற்கு உணர்த்தி வருவதைக் கற்றோர் நன்குணர்வர். கி.பி. 10ஆம் நூற்றாண்டில் இந்தத் தொகுப்புப் பணி செவ்வனே நிறைவுற்றது. இது இருபத்தோராம் நூற்றாண்டு. 1100 ஆண்டுகள் இந்தச் சமய, பண்பாட்டு, பக்தி மரபு தொடர்ந்து வருகிறது என்பது போற்றற் குரியது என்பதில் ஐயமில்லை.

சங்க இலக்கியமே ஒரு தொகைநூல் தான். சிறந்த பாடல்களைக் காப்பதும் தொகுப்பதும் அடுத்த தலைமுறைக்கு அவற்றைச் சேர்ப்பதும் கற்றவர் செய்யவேண்டிய பணிகள் என்ற எண்ண ஓட்டம் முன்பே இருந்தது கண்டு வியக்கவேண்டி உள்ளது. யாரோ சிலர் அப்படி முன்நின்று செய்யத் தூண்டினர்; சிலர் செய்தனர். அப்படித் தொகுப்பித்தவர்களையும், தொகுத்தவர்களையும் தமிழகம் நன்றியுணர்வுடன் என்றும் வணங்கும். அப்படிப்பட்ட ஒரு பணியைத் தான் சைவ சமயத்துக்கு நம்பியாண்டார் நம்பி செய்தார். பன்னிரு திருமுறைகள் தொகுப்பில் பதினோரு திருமுறைகள்வரை அவர் செய்தார். அவருக்குப் பின்னால் வந்த சேக்கிழார் பாடிய திருத்தொண்டர் புராணத்தைப் பன்னிரண்டாவதாகச் சேர்த்து அதைப் பிற்காலச் சான்றோர் நிறைவு செய்தனர்.

பன்னிரு திருமுறைகள் வரிசையில் முதல் மூன்றும் சம்பந்தர் பதிகங்கள் நான்கு, ஐந்து, ஆறு ஆகிய திருமுறைகள் நாவுக்கரசரின் பதிகங்கள். ஏழாவது சுந்தரர் பாடியது. இந்த மூவருடைய பாடல் களையும் மொத்தமாகச் சேர்த்துத் தேவாரம் எனத் தமிழகம் வழங்குகிறது. ஏறக்குறைய எட்டாயிரம் பாடல்களைக் கொண்ட மூவர் பதிகங்களே தேவாரம், மாணிக்கவாசகர் பாடிய திருவாசகமும்

திருக்கோவையாரும் எட்டாவது திருமுறையுள் வைக்கப்பட்டன. பத்தாம் திருமுறை என்று போற்றப்படும் திருமூலர் பாடிய திருமந்திரம், பன்னிரண்டாம் திருமுறையாகிய சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம் இரண்டும் தனியாசிரியர்கள் பாடிய தனி நூல்கள் என்ற சிறப்பிடம் பெற்றுள்ளன.

ஆனால் ஒன்பதாம் திருமுறையும், பதினோராம் திருமுறையும் தனியான அருளாளர்கள் பாடியவை அல்ல. பலருடைய பாமாலைகளின் தொகுப்புகளாக உள்ளன. இது வியப்புக்குரியதுதான். ஒரு முறையான அமைப்பில் தொகுப்பு செய்தவர்கள் இடையே ஏன் மாறுதல்கள் செய்ய விரும்பினர்? பதினோராம் திருமுறை இன்னும் ஒரு மேல் ஐயத்தை எழுப்புகிறது? பத்தாம் திருமுறை வரை பாடுபொருளாகச் சிவபெருமானாகவே இருந்து வந்துள்ளான் (ஒன்பதாம் திருமுறையுள்ளும் திருமந்திரத்துள்ளும் இதிலிருந்து விலகிய போக்கு உள்ளது. ஆயினும் அங்கும் தெய்வத்தையே போற்றி உள்ளனர்). ஆனால் பதினோராம் திருமுறையில் தெய்வங்கள் தவிர, சிவனடியார்களாகிய கண்ணப்பர், சம்பந்தர், நாவுக்கரசர் ஆகியோர் மீது பாடப்பட்டுள்ள பதிகங்கள் உள்ளன. அதேபோல ஒன்பதாம் திருமுறையுள் சிவபெருமான் தவிர முருகன்மீது பாடப்பட்ட ஒரு பதிகமும் உள்ளது.

ஆதலால் கிடைத்த பாடல்களைத் தொகுத்துக் காப்பாற்ற வேண்டும் என்று மட்டும் அவர்கள் எண்ணியிருக்க வேண்டும். இறுக்கமான விதிகளை வைத்துக் கொண்டால் சிறந்த பாடல்கள் மறைந்து போகும் என்று கருதியிருக்கலாம்.

ஆதலால்தான் சைவம் பேசும் திருமந்திரம் சாக்தமும் பேசுகிறது. தந்திர மந்திரமும் பேசுகிறது. சிதம்பரத்துச் சிவபெருமானைப் பரவும் ஒன்பதாம் திருமுறை திருவிடைக்கழி முருகனையும் பரவுகிறது. இதில் ஏதும் தவறில்லை என்றே சொல்ல வேண்டியுள்ளது. இந்தத் திருமுறைகள் வகுப்பு, பாடல்கள் தொகுப்பு, இவற்றைப் பற்றிய விளக்கங்களைப் பன்னிருதிருமுறை வரலாறு எழுதிப் புகழ்பெற்ற பேராசிரியர் க. வெள்ளைவாரணனார் விரிவாகப் பதிவு செய்துள்ளார். தமிழ் இலக்கிய வரலாற்றை ஒவ்வொரு நூற்றாண்டாகப் பிரித்து ஆய்வு நோக்கில் அரிய நூல்கள் படைத்த மு. அருணாசலம் அவரை அப்படியே பின்பற்றியுள்ளார். இந்தத் தொகுப்பின் முழு விவரமும் உமாபதி சிவாசாரியார் பாடிய திருமுறை கண்ட புராணம், சேக்கிழார் புராணம் ஆகிய இரண்டு நூல்களில் பதிவாகியிருப்பதை அறிஞர்கள் சுட்டுகின்றனர். (மு. அருணாசலம், ப. 4).

ஒன்பதாம் திருமுறையும் பதினோராம் திருமுறையும் பலர் பாடிய பாடல்களின் தொகுப்புகள். ஆகையால் 'முதலாவதைத் திருஇசைப்பா மாலை என்றும், பின்னதைப் பிரபந்த மாலை என்றும் வழங்கியுள்ளனர். வேறு வகையிலும் இதைச் சொல்வதுண்டு. முதல் 9 திருமுறைகளும் இசை, பின்வரும் மூன்றும் இயல் என்ற பாகுபாடும் உள்ளது (மு. அருணாசலம், ப. 11). இவை நிற்க, இனி ஒன்பதாம் திருமுறையின் பொது இயல்புகளை முதலில் பார்த்த பின்னர், விரிவாக அதன் சிறப்பியல்புகளையும் காணலாம்.

ஒன்பதாம் திருமுறை, இன்று திருவிசைப்பா திருப்பல்லாண்டு எனப் போற்றப்படுகிறது. இந்நூலுள் 28 திருவிசைப்பாப் பதிகங்களும் ஒரு திருப்பல்லாண்டுப் பதிகமும் அடங்கியுள்ளன. முந்தைய தேவாரப் பதிகங்கள் போலக் கோயில்களில் இறைவன்முன் பாடப்பட்டன; ஆகையால் இவை இசைப்பாடல்கள் வரிசையில் உள்ளடங்கின. திருமாளிகைத் தேவர் தொடங்கி, சேந்தனார் நிறைவாக ஒன்பது அருளாளர்கள் பாடிய பதிகங்கள் இதனுள் உள்ளன. பாடல்கள் மொத்தம் 301. பாடப்பட்ட தலங்கள் 14. இவற்றுள் தேவாரப் பாடல் பெற்றவை ஆறுமட்டும். ஏனைய எட்டும் புதிதாகச் சேர்ந்தவை. இந்த வேறுபாடும் காணற்குரியது. இதில் உள்ள 28 பதிகங்களும் 10 அகத்துறையில் அமைந்தவை. மூன்றில் ஒரு பங்கு பதிகங்கள் (10) கருவூர்த் தேவரால் பாடப்பட்டவை. (பார்க்க அட்டவணை). கீழ்வருமாறு சுருக்கமாகவும் பார்க்கலாம்.

**ஒன்பதாம் திருமுறை : அட்டவணை – 1**

| எண் | ஆசிரியர் | பதிகங்கள் | பாடல்கள் |
|---|---|---|---|
| 1 | திருமாளிகைத் தேவர் | 4 | 45 |
| 2 | சேந்தனார் | (3+1) 4 | (34+13) 47 |
| 3 | கருவூர்த்தேவர் | 10 | 103 |
| 4 | பூந்துருத்தி நம்பி | 2 | 12 |
| 5 | கண்டராதித்தர் | 1 | 10 |
| 6 | வேணாட்டடிகள் | 1 | 10 |
| 7 | திருவாலி அமுதனார் | 4 | 42 |
| 8 | புருடோத்தம நம்பி | 2 | 22 |
| 9 | சேதிராயர் | 1 | 10 |
| | கூடுதல் | 29 | 301 |

ஒன்பதாம் திருமுறை : அட்டவணை – 2

| எண் | ஆசிரியர் | தலம் | பதிக முதல் பாடல் | பாடல்கள் | பண் |
|---|---|---|---|---|---|
| 1 | திருமாளிகைத் தேவர் | கோயில் (சிதம்பரம்) | ஒளிவளர் விளக்கு | 11 | பஞ்சமம் |
| 2 | ” | ” | உயர்கொடியாடை | 11 | ” |
| 3 | ” | ” | உறவாகிய யோகம் | 12 | ” |
| 4 | ” | ” | இனங்கிலா ஈசன் | 11 | காந்தாரம் |
| 5 | சேந்தனார் | வீழிம்லை | ஏகநாயகனை | 12 | பஞ்சமம் |
| 6 | ” | ஆவடுதுறை | பொய்யாத வேதியர் | 11 | ” |
| 7 | ” | திருவிடைக்கழி | மாலுலா மனம் | 11 | ” |
| 8 | கருவூர்த்தேவர் | கோயில் | கணம்விரி குடுமி | 11 | புறநீர்மை |
| 9 | ” | களந்தை | கலைகள் | 10 | ” |
| 10 | ” | கீழ்க்கோட்டூர் | தளிர்ஒளி | 11 | பஞ்சமம் |
| 11 | ” | முகத்தலை | புவனநாயகனை | 10 | ” |
| 12 | ” | திரைலோக்கிய சுந்தரம் | நீரோங்கி | 11 | காந்தாரம் |
| 13 | ” | கங்கைகொண்ட கோழபுரம் | அன்னமாய் | 11 | பஞ்சமம் |
| 14 | ” | பூவணம் | திருவருள் | 8 | ” |

| எண் | ஆசிரியர் | தலம் | பதிக முதல் பாடல் | பாடல்கள் | பண் |
|---|---|---|---|---|---|
| 15 | ” | சாட்டியக்குடி | பெரியவா | 10 | ” |
| 16 | ” | தஞ்சை | உலகெலாம் | 11 | ” |
| 17 | ” | இடைமருதூர் | வெய்ய | 10 | ” |
| 18 | பூந்துருத்தி நம்பி காட நம்பி | ஆரூர் | கைக்குவான் | 2 | பஞ்சமம் |
| 19 | ” | கோயில் | முத்து வயிர | 10 | சாளரபாணி |
| 20 | கண்டராதித்தர் | ” | மின்னார் | 10 | பஞ்சமம் |
| 21 | வேணாட்டடிகள் | ” | துச்சான | 10 | புறநீர்மை |
| 22 | திருவாலி அமுதனார் | ” | மையல் | 11 | பஞ்சமம் |
| 23 | ” | ” | பவளமால் | 10 | கட்டராகம் |
| 24 | ” | ” | அல்லாய் | 11 | இந்தளம் |
| 25 | ” | ” | கோலமலர் | 10 | பஞ்சமம் |
| 26 | புருடோத்தம நம்பி | ” | வாரணி | 11 | பஞ்சமம் |
| 27 | ” | ” | வானவர்கள் | 11 | ” |
| 28 | சேதிராயர் | ” | சேலுலாம் | 10 | ” |
| 29 | சேந்தனார் – திருப்பல்லாண்டு | ” | மன்னுக | 13 | ” |

அகத்துறையில் அமைந்துள்ள பதிகங்களையும் பின்வருமாறு அட்டவணைப்படுத்தித் தெளிவு பெறலாம்.

**ஒன்பதாம் திருமுறை அகத்துறைப் பதிகங்கள்: அட்டவணை 3**

| எண் | ஆசிரியர் | பதிகங்கள் | பாடல்கள் | பண் |
|---|---|---|---|---|
| 1 | திருமாளிகைத் தேவர் | 1 | 12 | பஞ்சமம் |
| 2 | சேந்தனார் | 2 | 22 | " |
| 3 | கருவூர்த்தேவர் | 2 | 22 | காந்தாரம் |
| 4 | திருவாலி அமுதனார் | 2 | 20 | நட்டராகம் |
| 5 | புருடோத்தம நம்பி | 2 | 22 | பஞ்சமம் |
| 6 | சேதிராயர் | 1 | 11 | " |
| | கூடுதல் | 10 | 109 | |

இவற்றுள்ளும் 88 பாடல்கள் பஞ்சமப் பண்ணில் மட்டும் பாடப்பட்டுள்ளன என்பது நோக்குதற்குரியது. ஒன்பதின்மரில் பூந்துருத்தி காடநம்பி, கண்டராதித்தர், வேணாட்டடிகள் ஆகிய மூவரும் அகத்துறைப் பதிகங்கள் பாடவில்லை. புருடோத்தோம நம்பி தாம் பாடிய இரண்டு பதிகங்களையும் அகத்துறையிலேயே அமைத்துக் கொண்டார். சேதிராயரின் ஒற்றைப் பதிகமும் அப்படி அமைந்ததே. இனித் தலவரிசைகளையும் பாடல் எண்ணிக்கையையும் கீழ்க்கண்டவாறு பட்டியலிடலாம்.

**ஒன்பதாம் திருமுறை: தலங்களும் பாடல்களும்: அட்டவணை 4**

| எண் | தலம் | பதிகங்கள் | பாடல்கள் | குறிப்பு |
|---|---|---|---|---|
| 1 | கோயில் (சிதம்பரம்) | 16 | 173 | தேவாரத்தலம் |
| 2 | வீழிமிழலை | 1 | 12 | " |
| 3 | ஆவடுதுறை | 1 | 11 | " |
| 4 | திருவிடைக்கழி | 1 | 11 | புதியது |
| 5 | களந்தை ஆதித்தேச்சுரம் | 1 | 10 | " |
| 6 | கீழ்க்கோட்டூர் மணியம்பலம் | 1 | 11 | " |
| 7 | முகத்தலை | 1 | 10 | " |
| 8 | திரைலோக்கிய சுந்தரம் | 1 | 11 | " |
| 9 | கங்கை கொண்ட சோளேச்சுரம் | 1 | 11 | " |
| 10 | பூவணம் | 1 | 8 | தேவாரத்தலம் |
| 11 | சாட்டியக்குடி | 1 | 10 | புதியது |
| 12 | தஞ்சை இராசராசேச்சுரம் | 1 | 11 | " |
| 13 | இடைமருதூர் | 1 | 10 | தேவாரத்தலம் |
| 14 | ஆரூர் | 1 | 2 | " |
| | கூடுதல் | 29 | 301 | |

இவற்றுள் தில்லையாகிய சிதம்பரத்துக்கு மட்டும் 16 பதிகங்கள்: 173 பாடல்கள். செம்பாகத்துக்குச் சற்றுக் கூடுதலாகக் கோயில் இந்தச் சிறப்புப் பெற்றுள்ளது. ஆதலால் இந்தத் திருமுறையைத் 'தில்லைத் திருமுறை' என்றும் சொல்லலாம். (மு. அருணாசலம், ப. 27)

அடுத்துப் பண்வரிசை அமைப்பில் ஒன்பதாம் திருமுறைப் பாடல்களைக் காண்பதும் பயன்தரும்.

**ஒன்பதாம் திருமுறை : பண்கள்: அட்டவணை 5**

| எண் | பண் | பதிகங்கள் | பாடல்கள் |
|---|---|---|---|
| 1 | பஞ்சமம் | 21 | 217 |
| 2 | காந்தாரம் | 2 | 22 |
| 3 | புறநீர்மை | 3 | 31 |
| 4 | இந்தளம் | 1 | 11 |
| 5 | நட்டராகம் | 1 | 10 |
| 6 | சாளரபாணி | 1 | 10 |
| | **கூடுதல்** | **29** | **301** |

இவற்றை நோக்கினால் பஞ்சமப்பண் 21 பதிகங்களும் 217 பாடல்களும் பெற்று மூன்றில் இரண்டு பங்கு இடத்தைப் பெற்றுள்ளது தெரிய வரும். 'தில்லைத் திருமுறை' என்று சொல்வது போலப் 'பஞ்சமப்பண் திருமுறை' என்று சொல்வதும் தகுதியுடையதே என விளங்கும். இந்தப் பண், வழிபாட்டின்போது பெற்றிருந்த செல்வாக்கும் புலப்படுகிறது. மேலும் நுட்பமாகப் பார்த்தால் இந்த இருபத்தொரு பதிகங்களில் பத்து (217 பாடல்களில் 110-) தில்லைக்கு மட்டும் அமைந்திருப்பதும் காணத்தக்கது.

இப்படி இசைப்பாடல்களாக ஒன்பதாம் திருமுறை இருப்பதற்கு ஆய்வறிஞர்கள் காரணம் கூறியுள்ளனர். பிற்காலச் சோழப் பேரரசுக் காலத்தில் தமிழகம் எல்லா நிலைகளிலும் செழித்து வளர்ந்திருந்ததைக் கற்றவர் அறிவர். சங்க காலத்துக்குப்பின் நிகழ்ந்த பொற்காலம் அதுவே. கலைகள் சிறப்பாகப் போற்றப்பட்டன. செல்வ மிகுதியும் வளமான வாழ்வும் மன்னரையும் மக்களையும் நாகரிகத்தின் உச்சிக்குக் கொண்டு சென்றன. அவற்றில் தாங்கள் கரைந்து போகாமல் விசயாலய சோழமன்னன் தொடங்கிய பேரரசர்கள் தெய்வங்களுக்கு பெரிய பெரிய கற்கோயில்கள் எழுப்பித் தங்கள் வாழ்வையும் பெயரையும் நிலைபேறு உடையதாகச் செய்து கொண்டனர். கல்தளி தோற்றம் பல்லவ ஆட்சியில் தொடங்கியது மெய்தான் என்றாலும் முந்நூறு ஆண்டுகள் தென்னகம் முழுவதையும், வடக்கே நர்மதை

ஆறு தொடங்கித் தெற்கே ஈழம் முடிய, மேற்கிலும் கிழக்கிலும் கடலை எல்லையாகக் கொண்டு ஆட்சி புரிந்த பிற்காலச் சோழப் பேரரசு தான் தமிழனின் கலை, அறிவு, சமய, மொழி, பண்பாட்டின் மணிமுடி என்று சொல்ல வேண்டும். பலப்பல புதிய கோயில்களைக் கட்டி மக்களின் மனத்தைத் திருப்பும் பணியை அற்புதமாகச் செய்தனர்.

> தஞ்சை இராசராசேச்சுரமும், கங்கை கொண்ட சோழபுரமும் அந்த எழுச்சியின் சின்னங்களாக இன்றும் திகழ்கின்றன. இப்படி,
>
> புதிதாக எழுந்து வந்த தலங்களுக்கும் அருட் பாசுரங்கள் என்ற பெயரில் சுவாமி திருமுன் பாடுவதற்காக, பாசுரங்கள் இருக்குமானால் அந்தப் பிரதேச மக்களுடைய சமய உணர்வு நிறைவு பெறுவதோடு எழுச்சியும் பெறும். இவை நம்பி இவ் இசைப்பாக்களை ஒருத் தனித் திருமுறையாகத் தொகுத்ததற்குரிய காரணங்களாகத் தெரிகின்றன. இல்லையானால் முதல் எட்டு திருமுறைகளைச் சுமார் 1000 பாடல்கள் வீதமும் பத்தாம் திருமுறையை 3000 பாடல்களாகவும், (பின்னர் பதினோராம் திருமுறையை 1400 பாடல்களாகவும்) தொகுத்த இவர், ஒன்பதாம் திருமுறையை மட்டும் மிகச் சுருங்கிய அளவில் இயன்ற 300 பாடல்களே கொண்டதாகத் தனியே முறைப்படுத்தியதற்கு ஓர் அமைதி காண்பதற்கில்லை.... திருவிசைப்பா மாலையானது அக்கால அரசியல் நிலைமைக்கும் தன்னகத்தேயுள்ள இசைத்தன்மை வரும் பொருந்த ஒரு தனித் திருமுறையாயிற்று என்பது நன்கு விளங்கும்.

இவை மு. அருணாசலம் அவர்களின் கணிப்பு (ப. 15).

ஒன்பதாம் திருமுறைப் பாடல்கள் அந்தந்தத் தலத்து இறைவனை, எல்லா மக்களும் எளிதாகப் பாடிப் பரவும்படி அமைந்தவை என்பதற்கு உமாபதி சிவாச்சாரியார் பாடிய திருமுறை கண்ட புராணம், சேக்கிழார் புராணம் என்ற இரண்டு நூல்களிலும் சான்றுள்ளன எனக் காட்டுவார் (மு. அருணாசலம், ப. 4).

> ஆகவளர் திருமுறை ஏழ் அருள்திருவாசகம் ஒன்று
> மோகம்ஏறி திருவிசைப்பா மாலை முறை ஒன்று
>
> (திருமுறை கண்ட புராணம், 26)

தொல்லைமால் வரைபயந்த தூயாள்தன் திருப்பாகன்
அல்லல் தீர்ந் துலகுய்ய மறையளித்த திருவாக்கால்
தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன் என்று
எல்லையில் வண்புகழாரை எடுத்து இசைப்பா மொழி
(திருத்தொண்டர்புராணம் 348)

என்றான். இந்தத் தொடர்களும் செய்திகளும் திருமுறைகளில் பயின்று வரும் இசையின் சிறப்பையும், அடியார்கள் அவற்றின் மீது கொண்டிருந்த ஈடுபாட்டையும் நன்கு புலப்படுத்துவதாகும்.

'திருவிசைப்பா' என்றால் என்ன பொருள்?

அதிக விளக்கம் தேவையில்லை. இசையில் அமைந்த பதிகங்களையுடைய நூல் என்று:ம பரம்பொருளின் புகழை (இசையை) இசைக்கின்ற பா என்றுமே பொருள் கொள்ளத் தகுந்தது.

என்று (ப. 17) மு. அருணாசலம் எழுதுகிறார். இது சரியே. ஆனால் அதையும் தாண்டி அடிப்படை நோக்கு ஒன்றை உணரவேண்டும்.

இசையின் மூலம் அடியார்களுடைய நெஞ்சங்களை இறைவனுடன் இசைவிக்கின்ற பாட்டு" எனக் கொள்வது மேலும் செறிவாக இருக்கும். ஏனெனில் 'அவனருளாலே அவன்தாள் வணங்கியே

அருளாளர்கள் பாடினார்கள். அவற்றைப் பாடிப்பாடியே அடியார்கள் அவன் தாளை வணங்கினார்கள். இந்த இரண்டையும் ஒரு சேர நிறைவுறச் செய்வனவே இந்தத் தெய்வப் பனுவல்கள். அந்த வகையில் ஒன்பதாம் திருமுறைக்கும் ஓர் உயர்ந்த இடம் உண்டு.

மொத்தம் 301 பாடல்கள் மட்டும்தாம் இந்த நூலில் உள்ளன. ஆனாலும் தேவார, திருவாசகம் பதிகங்களில் காணப்படும் கவிதை நெறி, அழகு, கற்பனை, தத்துவம், இறைமை, அகத்துறை மரபு எனப் பல்வகைக் கூறுகளையும் உள்ளடக்கியதாக இத்திருமுறை விளங்குவதைக் கற்றோர் உணர்வர்.

1. இறைவன்
2. அடியார்கள்
3. இறைவனின் அருள்புரி தன்மை
4. அடியார்கள் பெறும் பேறு
5. இயற்கை வருணனை

6. சொல்லாட்சி

7. உவமைகள்/உருவகங்கள்

8. அகத்துறைப் பாடல்கள்

9. சமுதாயச் செய்திகள்

10. தத்துவம்

என்ற தலைப்பில் ஒன்பதாம் திருமுறையைச் சற்று விளக்கமாகக் காணலாம். ஒன்பது ஆசிரியர்களின் பாடல்களிலிருந்து இந்தச் செய்திகள் தொகுக்கப்பட்டுள்ளன. பக்தநூல் ஒன்றை ஆய்வுக்கு உட்படுத்தும்போது பேண வேண்டிய கவனம் கருத்தில் கொள்ளப் பட்டுள்ளது. மானிடர்க்கு மேம்பட்ட தெய்வீக ஆற்றலை நோக்கி, மானிட மனத்தைச் செலுத்தும் வகையிலேயே பன்னிரு திருமுறைப் பாடல்கள் உயர்வு பெற்றன. அந்த மேன்மையை என்றும் போற்ற வேண்டும். 'கடையனும் கடைத்தேற்றம்' என்ற தொடர் உண்மையில் பக்திப் பனுவல்களில் தான் நிறைவுறுகிறது. தமிழ் பெற்ற, தமிழ் உலகிற்குத் தரும் பெருமையும் அதுவே. அந்நோக்கை நினைவில் கொண்டு நூலுள் செல்லலாம்.

நூலின் நிறைவாக, முதலும் முடிவும் என்னும் தலைப்பில் சில நுட்பமான செய்திகளைத் திருவிசைப்பாவில் இருந்து தொகுத்து வாழ்வுப் பயன்பாட்டுக்காகத் தரப்பட்டுள்ளது.

# 2. இறைவன்

சேந்தனார், முருகனைப் பற்றிப் பாடிய ஒரு திருப்பதிகம் தவிர ஏனைய எல்லாம் சிவபெருமானின் பரத்துவத்தைப் பேசுவதாகவே உள்ளன. திருமாளிகைத் தேவர் தொடங்கிச் சேந்தனார் நிறைவாக, எல்லாப் புலவர்களும் தங்கள் அருள் கனிந்த உள்ளங்களில் பெருமானை உள்ளகம் வைத்துப் போற்றித் தொழுத பதிவுகளே இப்பாடல்கள்.

**திருமாளிகைத் தேவர்**

பல நோக்குகளில் சிவபரம்பொருளின் இறைமைக் குணங்களை முதலில் திருமாளிகைத் தேவர் இசைக்கிறார். முதல் பாடல் இவ்வகையில் தனக்கு வேறு எதுவும் நிகரில்லாத அளவு செறிவு பெற்றுத் திகழ்கிறது.

**ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே**
**உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே**
**தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே**
**சித்தத்துள் தித்திக்கும் தேனே**
**அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே**
**அம்பலம் ஆடரங் காக**
**வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்**
**தொண்டனேன் விளம்புமா விளம்பே**

இறைவனை ஒளியாகவும், விளக்காகவும் முன்னோர் தொன்று தொட்டே போற்றி வருகின்றனர். ஆனால் அந்த ஒலியை வளரச் செய்யும் விளக்காகவும் இறைவன் இருக்கிறான் என்பது ஒரு புதுமை. ஒளியை வளர்க்கும் விளக்கு, ஒளி வளர்க்கும் விளக்கு, ஒளியால் வளர்க்கப்படும் விளக்கு என்றெல்லாம் வெவ்வேறு வகையில் பொருள் கொள்ளத்தக்க அழகில் இந்தத் தொடர் மங்கலமாக அமைந்து இந்த இசைப்பா மாலைத் தொகுப்பைத் தொடங்கி வைக்கிறது. இறைவன் சித்தத்துள் தேனாகவும், உள்ளத்துள் ஆனந்தக் கனியாகவும் இருக்கிறான் என்ற குறிப்பு அறிவும் அருளும் ஒன்று சேர வேண்டும். அப்பொழுதே இறையருளைப் பெறமுடியும் என்ற செய்திகளை உள்ளடக்கியது. அறிவால் இறைவனைக் காண்பதற்கு இல்லை. அவனருளால் தான் முடியும். அவனே வழியும் காட்ட வேண்டும் என்று 'விளம்புமா விளம்பே' எனப் பாட்டு முடிவடைகிறது.

இந்தத் தெளிவு - இறைவன் அருளால் மட்டுமே ஆகும் - என்ற புரிதல் பதிகம் முழுவதிலும் 'பணியுமா பணியே', 'கருதுமா கருதே', 'உரைக்குமா உரையே', 'நணுகுமா நணுகே', 'இசையுமா இசையே', 'நுகருமா நுகரே', 'புணருமா புணரே', 'தொடருமா தொடரே', 'விரும்புமா விரும்பே', 'நினையுமா நினையே' எனத் தொடர்ந்து வந்து நிறைகிறது.

அதற்கேற்பப் பாடல்தோறும் ஈசனின் பெருமைகளையும் எளிவந்த தன்மையையும் பாடிப் போகிறார். தெரிந்த செய்திகள் தாம்: முப்புரம் எரித்தது: இராவணனை மலையின்கீழ் அடக்கியது. திருமாலும் பிரமனும் அறிய இயலாத பெருந்தோற்றம்; வேதங்களாலும் தேடுவதற்கு அரிய நிலை. காமனை அழித்தமை: தக்க யாக அழிவு என்றவை திருமுறைகளிலும் புராணங்களிலும் தொடர்ந்து கூறப்பட்டுள்ளவை தாம். அவை இங்கும் திரும்ப ஒரு புதிய வடிவில் வந்து மெருகூட்டுகின்றன.

ஒளிவளர் விளக்காக இருக்கும் இறைவனே, அடியவர்களின் இருளாகிய துன்பத்தையும் ஆணவத்தையும் அழிப்பவன். அவனே நற்பெரும்பொருள். ஆண்டுகள் பல்லாயிரமாகக் கழிந்தாலும் அழியாது நிற்பவன். ஆயிரம் கோடி என விரிந்து நிற்கும் அண்டங்களும் அவனே, அவற்றுக்கு அப்பாலும் அவனே (பா. 3). பெரியவன் அவன்: சிறியதில் சிறியதும் அவனே. பெண்ணும் ஆணும் அவன். பிறப்பு இறப்புகளை அறுக்கிற பேராற்றல் அவனே (4). இப்படி வியந்து கொண்டு போகும் ஆசிரியர் இறைவனைக் 'கருமையின் வெளியே' என அழைக்கிறார்.

பரந்து விரிந்து கிடக்கின்ற வெளி எல்லையற்றது என்றும், கரிய தோற்றம் உடையது என்றும், கருமையே பரவிக் கிடக்கிறது என்றும், அங்கொன்றும் இங்கொன்றும் விரிந்துள்ள 'நூற்றொரு கோடியின் மேற்பட்ட அண்டங்கள் வெறும் ஒளிப் புள்ளிகள் போன்றவை என்றும் பழைய இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன. இன்றைய அறிவியல் உலகில் வானவியலும் வான இயற்பியலும் இக் கூற்றுக்களை ஆய்வு மூலம் மெய்ப்பித்து வருகின்றன. இது கூர்ந்து நோக்கற்குரிய ஒன்று.

### இறைவன் ஒருவனே; ஒன்றாய்ப் பலவாய் – 'ஒருமையில் பலபுக்கு உருவி' நின்றவன் பெருமான்

இது தத்துவக் குறிப்பு. திருக்கோலம் சிறப்பும் பாடலில் பலவாக வருகிறது. 'அடல் விடைப் பாகன்' நீறணிப் பவளக்குன்றம், நெற்றிக்கண் உடைய நெருப்பு, கனகநல்தூண், கற்பகக் கொழுந்து,

பொருவரைப்புயம், மணிநீலகண்டம், அருள்திரள் செம்பொற் சோதி என்பன போன்ற சொற்கள் திருமேனி அழகைப் புனைந்துரைக் 1கின்றன. இவையேயன்றி இறைவனின் பாதாதிகேச - அடி முதல் முடி வரை - வடிவழகை ஒரு பதிகத்தில் பாடியுள்ளார்.

இறைவனுடைய சிவந்த அடிகள் தாமரை மலர் போன்றவை. ஆனால் அவற்றிலும் அங்கங்குச் சிறுசிறு நிறமங்கல்கள். காரணம் அமரர்கள் வந்துவந்து தங்கள் மகுடம் தோய்ந்த தலைகளை வைத்துப் பெருமான் திருவடிகளை வணங்கியதால் அவை ஏற்பட்டன. அவனுடைய கால் சிலம்பின் இன்ப ஒளி உயிரை வாழவைக்கும் ஆற்றல் உள்ளது. எரியும் நெருப்பைக் கையில் ஏந்திய அந்தக் கை: உடுக்கையின் பரநாத ஒலி, பாம்பைக் கங்கணமாகப் பூண்ட அழகு. கற்பகம் ஒத்த கண்புருவம், பெரிய அகன்ற மூன்று கண்கள், கொக்கிறகும் கொன்றையும் நிலவும் கங்கையும் பொலியும் திருமுடி - எனப் பலவகை எழில் வீச்சுகளில் ஆசிரியர் திளைத்துப் போகிறார்.

சிவபெருமானுக்கு அட்டமூர்த்தங்கள், ஐம்பூதங்கள், ஞாயிறு, திங்கள் என்னும் சுடர்கள் இரண்டு. உயிர் ஒன்று. ஆக எட்டு வடிவங்கள். இயற்கைப் பொருட்களில் உயிர் பேருயிரைக் கண்டு போற்றிய தமிழ்ப் பண்பாடு இங்கு நோக்கற்குரியது. இந்த எட்டிலும் கலந்து நிற்கும் அந்தப் பேருருவாளன் என்னையும் ஆண்டான் என்று பெருமிதத்தில் திருமாளிகைத் தேவர் மகிழ்கிறார்.

'எட்டுரு விரவி என்னை ஆண்டவன்' என்பது பாடல் வரி. என்னையும் ஆண்டவன் என்று பொருள் கொள்ள வேண்டும். இழிவுச் சிறப்பு உம்மையாக இது "இறைவனின் எட்டுரு என்னுள்ளேயே இருக்கின்றன" என்ற பேருண்மையைப் புலப்படுத்தும்.

**சேந்தனார்**

சேந்தனார் பாடிய நான்கு பதிகங்களில் ஒன்று முருகன் மீது பாடப்பட்டது. இன்னொன்று பல்லாண்டு பாடியது. எஞ்சிய இரண்டில் இறைவனின் தோற்றம் பற்றிய சில குறிப்புகள் கிடைக்கின்றன.

இறைவன் கற்றவர்க்குக் கனி போன்றவன்; கரையில்லாத கடலாக இருப்பவன்; மாணிக்கமலையும் மணிவிளக்கும் சேர்ந்த தோற்றம் கொண்டவன்; பவளத்தால் ஆன பெரிய உயர்ந்த மலை: அருளே பெருகிய பெருங்கடல் வெள்ளம்; படர்சடை மின்னும் பொன்முடி என்றவாறு அவர் இறைவனைப் பாடுகிறார். இவை எல்லாவற்றையும் விடப் பெருமானின் வியாபகம் - எங்கும் எதிலும் பரவிக்கலந்து பொலியும் தோற்றமே அவர் உள்ளே மேலிடுகிறது.

சிவபரம்பொருளின் சேவடிகள், திருமுறைகள், திண்தோள்கள் இவை நிறைந்து விளங்கும் திருவுருவங்கள், இவற்றுக்கேற்ப அவன் கொண்டுள்ள திருப்பெயர்கள் ஒன்றா பலவா! எண்ணிலி யாம் அவர் பாடுகிறார்.

> எண்ணில் பல்கோடி சேவடி முடிகள்
> எண்ணில் பல்கோடி திண்தோள்கள்
> எண்ணில் பல்கோடி திருவுரு நாமம் (54)

திருவாவடுதுறைத் தெய்வத்தைத் தொழும்போது மணவாள நம்பி என்று அழைத்துத் 'தருணேந்து சேகரன்' என்று குறிக்கிறார். இளைய நிலாவை அணிந்த சடையுடையான் என்பது பொருள். பிறை சூடி தான். 'ஆத்திசூடி இளம்பிறை அணிந்து மோனத்திருக்கும் முழுவெண் மேனியான்' எனப் பாரதி பின்னாளில் பாடிய பாட்டின் மூலம் இங்கே இருக்கிறது.

சிவபெருமானின் உண்மை வண்ணத்தை யாரறிவார்? இயற்கையில் இருக்கும் எல்லாமும் அழிவன. ஆதலால் அவற்றை உவமை சொல்லமுடியாது. இது நீங்காது என்றுமே இருக்கும் இயல்புகள் ஆயிற்றே. ஆதலால் 'ஒழிவொன்றிலா உண்மை வண்ணமும்' எனச் சேந்தனார் போற்றுவது நுட்பமானது.

திருப்பல்லாண்டு பதிகம் சற்று வேறுபட்டது. 'பல்லாண்டு எனும் பதம் கடந்தானுக்கே பல்லாண்டு கூறும் பொருளுடைய புதுமை கொண்டது இப்படிப் பாடுவது அதற்கு முன்பும் இல்லை. பிறகும் இல்லை. வாழ்த்துவதாக வருகின்ற பாடல்களில் பெருமானின் தோற்றம் ஆங்காங்குப் பொதிக்கப்பட்டுள்ளது. 'பிறவியலுக்கு நெறி தந்த பித்தன்' என்பது ஒரு தொடர். ஏன் பித்தன்? தன்னுடைய பரத்துவ நிலைவிட்டு இரங்கி வந்து 'சிவனடியாரைச் சீராட்டும்' திறம் உடையவனாயிற்றே. ஆதலால்?

இறைவன் 'பரந்தும் நிரந்தும் வரம்பிலாப் பாங்கன்' ஆக நிற்பவன். விரிந்து நிற்கிறான். இடையீடின்றி நிறைந்து நிற்கிறான். எல்லையற்ற பேரருளானாகிய அவனே ஒரு தோழன் போலக் கூடவே வந்து நின்றும் அருள்புரிகிறான். இது அவன் எளிவந்த தன்மை என்று அவர் இசைப்பா பாடுகிறார்.

### கருவூர்த் தேவர்

திருவிசைப்பாவின் மூன்றில் ஒரு பங்குப் பதிகமும் பாடல் களும் பாடிய அருளாளர் தஞ்சை மாமன்னன் முதலாம் இராசராச சோழனுடனும் அவன் மகன் முதலாம் இராசேந்திரனுடனும் கூட

இருக்க வாய்ப்புப் பெற்றிருந்தும், அரண்மனை போக வாழ்க்கைக்கு ஆளாகாமல் ஊர் ஊராய்த் திரிந்து இரந்துண்டு வாழ்ந்த சித்தர். பிற்காலச் சோழர்களின் ஆட்சித் திறமைக்கும் கட்டடக் கலைக்கும் பண்பாட்டு மரபுக்கும் அழியாத சின்னங்களாக இன்றும் நிமிர்ந்து நிற்கும் தஞ்சைப் பெருவுடையார் கோயில் மீதும் கங்கை கொண்ட சோழபுரத்தின் மீதும் பாடல்கள் பாடியவர் இவர் மட்டுமே என்பதும் நினைவில் வைக்கத்தக்கவை.

இறைவன் அவருக்குப் பல கோலங்களில் காட்சி தந்து அருள் செய்ததை, மனமுருகப் பாடிப்பாடி மகிழ்கிறார். பாம்பணி பரமன், நலம்புரி பரமர், நடம்புரி பரமர், விரிசடை அடிகள், அருள்புரி பரமர், பொருந்து அருங்கருணைப் பரமர் என்பனபோலத் தில்லைக் கூத்தனின் பரத்துவம் பேசப்படுகிறது.

திருக்களந்தை ஆதித்தேசுவரரின் தோற்றம் வேறு ஒரு வகையில் புனையப்படுகிறது. தாயினும் நல்ல முக்கணான், திருநுதலவர், பவளத் திருவாய், பவளத் திருவுடம்பு முத்துப் போன்ற முறுவல், முத்துப் போன்ற பூணூல், பவளத் திருவாய், குவளை நிறக் கழுத்து, ஒரு செவியில் குழை: சடைமேல் பொன்வரி நாகம், தாமரைத் திருமுகமும் கண்களும் பொன்னை உருக்கியது போன்ற திருவடி - என்று இந்தப் பாடல்களைப் படிக்கும்போதும் வாய்விட்டுப் பாடும் போதும் ஆடல்வல்லானின் பேரழகு நெஞ்சில் பதிந்து உருக்கும் வண்ணம் கருவூரார் பாடுவது தமிழ்செய்த அற்புதம். ‘அமுதம் ஊறிய தமிழ்மாலை’ என்று அவர் கூறிக்கொள்வது செருக்கால் அன்று, செந்தமிழ் தந்த ஞானத்தால் என்பதைப் படிப்போர் உணரமுடியும். உமையொரு பாகனின் அழகுத் திருக்கோலமும் இப்படியே புனைந்துரைக்கப்பட்டுள்ளது.

திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலம் பதிகம் அகத்துறை சார்ந்தது. தலைவி கூற்றாகத் தலைவனான பெருமானின் மேனி அழகைக் கருவூரார் அனுபவித்துப் பாடுகிறார். தளிர்ஒளி மணிப் பூம்பதம், சடைவிரித்தலை, நீர்முத்தரும்பிய திருமுகம், துண்ட வெண்பிறைச் சடை, அதற்குமேல் பொலியும் உச்சியாகிய சுழியம், குழை, பவள இதழ், வெண்ணீறு பூசிய அழகுத் திருவுடல், வில்வம் வன்னி ஆகிய தழைகள் பொலிவும் திருமுடி, சங்குகள், உடுக்கை ஒலி, பெருமுழக்கமிடும் அந்த நந்தியம்பெருமான் வளர்தற்குரிய அந்த இளமான் என்று வரிசையாக அடுக்கிக்கொண்டு போகும் தலைவி,

அந்திபோல் உருவும் அந்தியில் பிறைசேர்
அழகிய சடையும் வெண்ணீறும்
சிந்தையால் நினையில் சிந்தையும் காணேன்

என்று இறைவனின் அருள் திருக்கோலத்தில் தன் சிந்தையையும் பறிகொடுத்து நிற்கிறாள். படிப்போரையும் அப்படியே செய்கிறார். அந்திபோல் உரு, அந்தியின் பிறைபோன்ற கடை என்னும் அழகுத் தோற்றம் உள்ளத்தில் கனிந்த காட்சி.

திருமுகத்தலை இறைவனைப் பாடும்போது நான்கு வேறுபட்ட நிறங்களை ஒருங்கே வைத்துக் கடவுள் உருவத்தைப் புகழ்கிறார். கடலில் தோன்றிய நஞ்சு போன்ற கழுத்து, சந்தனம் பூசிய வெண்ணிறக் கீற்றுகள், பொன்வண்ணமாகிய அந்தச் செந்நிறத்து ஒளி உடல், கரிந்துபோன பின் எஞ்சியுள்ள தழல்போலச் சுடர். இவை எல்லாம் உடைய பெருமான் கழுத்தில் ஓர் எலும்பு மாலை. பாடலைப் படியுங்கள்.

**விரியும் நீர்ஆலக் கருமையின் சாந்தின்**
**வெண்மையும் செந்நிறத்து ஒளியும்**
**கரியும் நீறாடும் கனலும் ஒத்தொளிரும்**
**கழுத்தில் ஒருதனிவடம் கட்டி -**

அமர்ந்திருக்கிறான் முகத்தலை அமர்ந்த பெருமான்

கங்கை கொண்ட சோழபுரப் பதிகம் கருவூராரின் கவிதைச் செறிவின் உச்சத்தைக் காட்டுவது. அதனுடைய நான்காம் பாட்டில் சிவபெருமானின் தோற்றம் புதிய நோக்கில் அழகுபடப் புனைந்துரைக்கப்பட்டிருக்கிறது. அழகிய, ஒளிவீசும் நெற்றியின்மீது அழகிய பொட்டு எழில் விஞ்சும் திருக்கண்கள்; வெண்ணீறு சைவத்தின் அடையாளமாகச் சரிந்து மிளிரும் சடைகள்; அந்தச் சடைமேல் நீரலைகள் ததும்பும் கங்கை: காலில் கொஞ்சும் சதங்கையும் சிலம்பும் எட்டுத் திசைகளிலும் பரவி நிற்கும் வீரத் தோள்கள் என ஒரு சொல்லோவியத்தையே இசையில் வரைந்துள்ளார். மிகச் சிறந்த தமிழ்ப் பாடல்களில் இதுவும் ஒன்று எனல் வேண்டும்.

**ஐய பொட்டிட்ட அழகு வாணுதலும்**
**அழகிய விழியும் வெண்ணீறும்**
**சைவம் விட்டிட்ட சடைகளும் சடைமேல்**
**தரங்கமும் சதங்கையும் சிலம்பும்**
**மொய்கொள் எண்திக்கும் கணட நின்தொண்டர்**
**முகம் மலர்ந்து இருகண் நீர் அரும்பக்**
**கைகள் மொட்டிக்கும் என்கொலோ கங்கை**
**கொண்ட சோளேச் சுரத்தானே** *(136)*

உருவெளியில் தோன்றும் இந்த அழகைக் கண்ட சிவனடியார்கள் முகம் மலர்ந்து இரண்டு கண்களிலும் நீர் சொரியப் பூரித்துக் கைக்கூப்பி வணங்கினராம்! இந்தக் கடவுள்தான் 'மங்கையோடு இருந்தே யோகு செய்'பவன். இது ஓர் அற்புதம்தான்.

பெண்ணைவிட்டுத் தான் யோகநெறி நிற்கவேண்டும் என்பதற்கு மாறாகப் 'பெண்ணில் நல்லாளொடு கூடியிருந்தே மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்' என்ற உமையொரு பாகனின் தோற்றம் கருவூரால் இப்படிப் பாடப்பட்டுள்ளது.

திருச்சாட்டியக்குடித் தலத்து இறைவனைப் பாடும் பதிகத்தில் ஒரு புதுவகைக் கோயிலையே கருவூரார் உருவாக்கிக் காட்டுகிறார். இறைவன் திருமேனியில் பூண்டுள்ள பாம்புகளே அணிகள். உண்பதற்காக மண்டை ஓட்டைக் கையில் ஏந்தியுள்ளார். அவர் பெருமையுடன் ஏறிவரும் அரச ஊர்தி எருது. அவர் நாளும் நீராடும் இடம் அன்பர்கள் உருகிஉருகித் தொழுது சிந்தும் கண்ணீர் நிறையும் மஞ்சன சாலை. அவருடைய தேவியோ மலைமகள். மகிழ்ச்சி பொங்கும் பெருந்தேவி. சந்தனத்தையே திருநீறாகப் பூசிய மேனி. வேதங்களை நாளும் ஒலிக்கும் கீதங்கள். சடைமுடிநாதர் அன்பர்களின் இதயங்களை - பக்தியால் செம்மைப்பட்ட அழகு நெஞ்சங்களையே - கோயிலாகக் கொண்டுள்ளார். அவர்கள் உள்ளே அமைந்த ஏழுநிலைகளே மாளிகைகள். "உள்ளம் பெருங்கோயில்" என்ற திருமந்திரப் பாடலுக்கு எழுதிய விளக்கவுரைபோல இது உள்ளதில் வியப்பில்லை. (153)

தஞ்சை இராசராசேச்சுரம், கருவூர்த்தேவர் சிவலிங்கத் திருமேனியைச் சோழமாமன்னன் நிலைநிறுத்தியபோது உதவிசெய்த இடம் தவிர அவருடைய சிலை ஒன்று கோயில்கள் மேற்குச் சுற்றில் வழிபடப்படுகிறது. இரண்டு மாமன்னர்களாகிய இராசராசன், இராசேந்திரன் இருவராலும் மதிக்கப்பட்ட அருளாளர். ஆதலால் இராசராசேச்சுரத்துப் பெருவுடையாரைப் பாடும்போது இயல்பாகவே அவர் மனம் நெகிழ்ந்து விடுகிறது.

காலையில் கதிரவன் உதிக்கிறான். உலகத்து மக்கள் எல்லாம் ஒன்று திரண்டு அதைத் தொழுது வணங்குகிறார்கள். அது ஒன்றுதான். அதுபோல நூறாயிரம் கோடிக் கதிரவன்கள் ஒரே சமயத்தில் உதித்து எழுந்தால் எப்படி இருக்கும்? அழகாக இருக்கும். தஞ்சைப் பெருமானின் திருவுடம்பின் எழில் முழுதும் பொருந்தியதாக இருக்கும். அச்சோ! சொல்லால் அடங்குமா அது!

**உலகமெலாம் தொழ வந்து எழுகதிர்ப் பரிதி**
**ஒன்று நூறாயிரம் கோடி**
**அலகெலாம் பொதிந்த திருவுடம்பு அச்சோ**
**அங்஖னே அழகு இதோ!** (162)

சிவபெருமான் சடை. அதன்மேல் கங்கை. அதிலே தளும்பும் நீரலைகள். அவை மேனியெல்லாம் நீரைத் தெறிக்கின்றன. அந்தத்

துளிகள் பட்டு, செம்மேனியில் நிறைந்து விளங்கிய வெண்ணீறு கலைந்து போயிற்றாம்! 'திருநீறு அழி பொசி வனப்பு' என்று கருவூர்த் தேவர். இதைப் பாடி மகிழ்கிறார். 'அவிர் சடை மொழிப்பின் அழிவழகிய திருநீறு' என்று திருவிடைமருதூர்ப் பதிகத்திலும் இந்தத் தோற்றம் கூறப்படுகிறது.

> **"மணியினுள் சோதி கலந்தது போல என்னுள்ளே கடவுள் தோற்றம் நிறைந்தது. படர்ந்த சடையும், நஞ்சுண்ட கண்டமுமாக இடுப்பில் கிழிக்கப்பட்டு அணிந்த ஆடை. மேலிருந்து வீழ்ந்து தொங்கும் உத்தரீயம் எனப்படும் இன்னொன்று. இதற்கும் மேலாக மணி உமிழும் நாகம்"**

என்று பெருமானின் தோற்றம் முழுமைப் பெறுகிறது (176).

## பூந்துருத்தி நம்பி

இவர் பாடியவற்றுள் கிடைத்தவை பன்னிரண்டு பாடல்கள் மட்டுமே. திருவாரூர் இறைவன்பற்றி இரண்டு, தில்லை பற்றிப் பத்து.

> **இவர்தம் திருஉரு இருந்தவா பாரீர்**

என்று பெருமானின் தோற்றத்தைக் காண வருமாறு அடியார்களை அழைக்கிறார். வெண்மையான முத்துக்களைக் கோர்த்து மாலையாக தோளில் அணிந்துகொண்ட அழகு; கழுத்தில் ஒப்பற்ற ஒரு வடம்; முக்கண் நாயகர் வீதிவிடங்கராகத் திருவீதி உலா வரும்போது இருக்கும் அற்புதக்காட்சி உமையும் பார்க்க முடியாதது (183).

## கண்டராதித்தர்

சோழப் பெருமன்னனாக ஆட்சி செய்த இவர் தில்லைக் கூத்தன் பற்றிப் பாடிய ஒரு பதிகமே ஒன்பதாம் திருமுறையில் உள்ளது. புதியநோக்கில் பாடல்கள் அமைந்துள்ளன. இறைவன் பொன்னார் குன்றம் போல வந்து நின்றான் (195). ஆனைந்து ஆடும் சென்னி உடையவன். மாமலையாளொடு வருபவன். அம்புலியாகிய பிறை சூடியவன். ஞானக்கொழுந்து (198). பொன்போன்ற கையில் பானை ஏந்தியவன் (201) கொன்றைமாலை சூடிய கடவுள் (203).

## திருவாலி அமுதனார்

இவர் பாடிய நான்கு பதிகங்களும் தில்லை பற்றியனவே. அதில் முதலாவதாக வருவது இறைவனின் தோற்றத்தை அடிமுதல் முடி வரை புனைந்துரைக்கும் பாடல்கள் கொண்டது. முதல்பாட்டு சிறப்புமிக்கது.

மயக்கத்தைத் தரும் காதல் மிக்க உமையொரு பாகன். மிகப் பெரிய ஏறு ஆகிய நந்தி மீது ஏறி வருபவன். ஆண் மானைக் கையில் ஏந்திய தோற்றத்தான் அகன்ற கைகள் உடையவன். மேகம் போன்று கறுத்த கழுத்து, அவனுக்கு அவன் ஏந்தியுள்ள மழுவோ கனல் சிந்துவது, நெருப்பின் உள்நின்று ஆடும் பெருமான். அவன் நீர் குளிர்ந்த வயல்கள் சூழ்ந்த தில்லையில் ஆடும் கூத்தனாவான். அந்தச் சிவந்த பாதத்தை என் உள்ளத்துள்ளே வைத்துப் போற்றுகின்றேன்.

***மையல் மாதொரு கூறன் மால்விடை***
***ஏறி மான்மறி ஏந்தியதடங்***
***கையன் கார்புரை யும்கறைக்***
***கண்டன் கனல் மழுவான்***
***ஐயன் ஆரழல் ஆடுவான் அணி***
***நீர்வயல் தில்லை அம்பலத்தில்***
***செய்ய பாதம் வந்தென் சிந்தை***
***உள்ளிடம் கொண்டனவே (215)***

தேவாரத் திருவாசகப் பிரிவு என ஒன்பதாம் திருமுறையைச் சொல்வது மரபு. இந்தப் பாட்டு அதற்குச் சான்றாக விளங்குகிறது.

இதுவரை பிறர் பாடாத இன்னொரு தோற்றத்தைத் திருவாலி அமுதனார் பாடுகிறார். யானை உரி போர்த்து, புலித்தோலை உடுத்தி, பூணூல் பூண்டு, இடுப்பில் கச்சையும் அணிந்த கோலம் "பொன்னார் மேனியன், புலித்தோலை அரைக்கு அசைத்தவன்" என்ற சுந்தரர் பாட்டில் மறுவடிவம் இது. யானை வடிவில் வந்த அசுரனின் தோலை, அவன் கதறக் கதறப் பெருமான் உரித்தபோது, அதைக் கண்டு அஞ்சி நடுங்கிய உமையின் அச்சம் இந்தப் பாட்டில் பதிவு செய்யப் பட்டுள்ளது (218).

பவளமால்வரை பனிபடர்ந்ததுபோல ஒளியும் வெண்மையும் குளிர்ச்சியும் உடைய திருநீறு. குவளை மாமலர்கள் ஆகிய பூமாலை கொன்றை இவற்றைச் சூடிய திருச்சடை என அந்த வனப்பு தொடர்கிறது (226). அதன் நிறைவாகத் தம்முடைய நிறைவுப் பாடல் ஒன்றில் இறைவன் குடிகொண்டுள்ள இடம் இது என்று கூறி அமைதியும் இன்பமும் பெறுகிறார் திருவாலி அமுதனார்.

**நேசமுடையவர்கள் நெஞ்சுளே இடம்கொண்டிருந்த**
**காய்சின மால்விடையூர் கண்ணுதல்** *(255)*

என்ற வரிகள் முத்தாய்ப்பானவை. அவன் ஏறிவரும் நந்தி எப்போதும் சினத்துடன் சீறிக்கொண்டுதான் இருக்கும் அது அதன் இயல்பு. ஆனால் பெருமானோ எந்த ஆரவாரமும் இல்லாமல் தன்மீது உண்மை அன்பு கொண்டவர் உள்ளத்தே குடிகொள்வான்.

# 3. அடியார்கள்

இறைவனுக்கு உள்ள பெருமைகள், உண்மை அடியார் களுக்கும் உண்டு. இது பக்தி இலக்கிய மரபு. 'அடியார்க்கும் அடியேன்' என்று தான் திருத்தொண்டத் தொகை பாடுகிறது. திருவிசைப்பாவும் அதற்கு விலக்கில்லை. பல பாடல்களில் நூல் முழுவதிலும் அடியார்கள் போற்றப்பட்டுள்ளனர்.

அடியார்கள் பழுத்த தொண்டு நெறியில் நிற்பவர்கள். இறைவனைத் தொழுது பணிசெய்யும் அந்த நோக்கிலிருந்து சிறிதும் பிறழாதவர்கள். நான்மறைத் தொழிலில் வல்லவர்கள். முத்தீ வளர்த்து இறைவனை வழிபடுகின்றனர். இந்தச் செய்தி பல பாடல்களிலும் வருகிறது. கோயில்களில் அவரவர்க்கு ஏற்ப வழிபாடு செய்கிறார்கள். குழலூதி, கூத்து ஆடி, பாட்டுப் பாடித் தொழும் அடியவர்களையும் காண்கிறோம் (15). திருக்கோயில் வாசலில் 'ஒரு நாமம் ஓருருவம் இல்லானை', 'ஆயிரம் நூறாயிரம் பேர்கள் பிதற்றும்' அடியவர்களும் இருக்கிறார்கள் (21). ஐந்தெழுத்து ஓதுவதே அவர்கள் தவம். வெண்ணீறு பூசுவதே அவர் செய்கோலம் (33). ஈசன்மீது அளவற்ற நேசம் கொண்டவர்கள். சித்தம் முழுதும் அதே நினைவு. தில்லைக் கூத்தனின் அடியார்களாகிய இவர்கள் போற்றுதற்குரிய, தெய்வ மணம் கமழும் நல்ல அடியார்கள்.

> **இணங்கிலா ஈசன் நேசத்து**
> **இருந்த சித்தத் தினேற்கு**
> **மணங்கொள் சீர்த்தில்லை வாணன்**
> **மணஅடியார் கள் வண்மைக்**
> **குணங்கள்" கொண்டவர்கள்**

என்கிறார் திருமாளிகைத் தேவர் (35). அற்புதமான பாட்டு. தெய்வ மணம் மிக்க அடியார்கள் வளமான நற்குணம் கொண்டவர்கள் என்பது நல்ல குறிப்பு. தேவரின் நான்காவது பதிகப் பாடல்களில் பல முதல் இரண்டு வரிகளில் சிவனடியாரின் மேன்மைகளையே பாடுகின்றன. மண அடியார்கள், இன்பர், அணுக்கர், நமர்கள், உறைப்புடை அடியார்கள் என விதந்து வியந்து பேசுகிறார். திருத்தொண்டர் புராணத்தில் திருக்கூட்டச் சிறப்புப் பற்றிச் சேக்கிழார் பெருமான் பாடுவதற்கு இந்தக் குறிப்புகள் பயன்பட்டிருக்கலாம்.

> **கூடும் அன்பினில் கும்பிடவே அன்றி**
> **வீடும் வேண்டா விறலின் விளங்கினார்**

என்ற வரிகள்

*சிறப்புடை அடியார் தில்லைச்*
*செம்பொன் அம்பலவற்கு ஆளாம்*
*உறைப்புடை அடியார்*

என்ற திருவிசைப்பா வரிகளுடன் ஒத்துப்போவதைக் காணலாம்.

சேந்தனார் திருவிசைப்பாவில் இறைவனுக்குத் தொண்டு செய்வது போன்றே சிவனடியார்க்கும் பணிபுரிய வேண்டும் என்கிறார் (51) (55). இறைவனுடைய திருவடி நிழலையே புகலிடமாகக் கொண்டு, யார் செம்மையுடன் வாழ்கிறார்களோ, அவர்களுடைய அந்த அடியார்களின் திருவடிகளும் தாமரை போன்றவை தாம். அந்தப் பாதங்களின் தூசைத் திருநீறாக அணிந்து அடிமை பூணவேண்டும் என்பது நல்ல செய்தி. நடமாடும் அடியாரை மதிக்காமல் படமாடும் பரமனைக் கும்பிட்டுப் பயனில்லை என்பது இன்றைக்கும் பொருந்தும்.

இதை விடவும் மேலான ஒன்று: அத்தகைய அடியார்களும் தேவர்களும் தொழத்தக்க பெருமை உடையவர்கள். இது சேந்தனாரின் கணிப்பு.

**மிழலை சூழ் பொழிலைப்**
**போயிருந்தேயும் போற்றுவார் கழல்கள்**
**போற்றுவார் புராந்தரா திரளே**

திருவீழிமிழலை சென்று அங்குள்ள பொழிலை அடைந்து தெய்வத்தை வணங்குவோர் திருவடிகளை இந்திரன் உள்ளிட்ட தேவர்களும் வணங்குவர் என்பது அரிய தொடர். தலம், இறைவன், தீர்த்தம் என்ற மூன்று மட்டுமல்ல, ஆங்காங்குத் தெய்வத்தலம் சார்ந்துள்ள சோலைகளும் கூட வணங்கத்தக்க பெருமையுடையன என்கிறார். இயற்கையில் இறைவனைக் கண்ட தமிழ்நெஞ்சம் இப்படி தெரிகிறது.

திருவாவடுதுறைப் பதிகத்தில் ஒரு தலைவி இப்படி கூறுகிறாள்: "நெற்றித் திலகம் ஆடிய உமையன்னைக்கும், திருவாவடுதுறைக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் குணக்கடலான எம்பெருமானுக்கும் அடிமை செய்கின்ற சிவனடியார் கூட்டத்துக்கு அடிமை செய்யும் வாழ்வு தா" (62). 'குலக அடியவர்க்கு என்னை ஆட்கொடுத்து' என்பது தொடர். கூட்டமாக இருக்கும் தொண்டர் களுக்குப் பணிசெய்ய வேண்டும் என்பது குறிப்பு. தவிர, தொண்டர்களும் தனித்தனியாக இல்லாமல் கூட்டமாகவே சிவப்பணி செய்யவேண்டும் என்பதும் செய்தியே. இவர்கள் தாம் மெய்யடியார்கள்.

கருவூரார் தில்லைப் பதிகத்தில் அடியாரின் உருகும் சிந்தையைப் பதிய வைத்துள்ளார். திருச்சிற்றம்பல மேடையில் வந்து நின்றவுடன் அவர்களுடைய கண்களில் பனிநீர் அரும்புகிறது. கைகள் தாமாகவே கூப்பி மேலெழுகின்றன. 'எங்கள் துன்பம் தீர்க்கும்

அருட்கடலே' என ஓலமிட்டு, எலும்பெல்லாம் உருகுமாறு பாடியும் ஆடியும் திளைக்கிறார்கள். அந்தச் சிறந்த அடியார் கூட்டத்தில் 'என்னையும் சேர்க்க வேண்டும்' என்பது அவருடைய ஆவல் (84). இந்த மெய்ப்பாடுகள் அடியார்களுக்கு வரவேண்டும், வரவில்லை என்றால் அவர்கள் அந்தத் தகுதிக்குரியவர் அல்லர்.

உண்மைச் சிவனடியார்கள் இறைவனைத் தனியாகத் தேடி அலைய மாட்டார்கள். திருவைந்தெழுத்துக்களை ஒலிக்கும்போது ஏற்படும் நாதத்தின் உள்ளே வைத்துவைத்து, உள்ளம் உருகும் அளவு ஓதி ஓதி இன்பத்தில் அவர்கள் திளைப்பார்கள். அவரே உண்மைத் தொண்டர்.

**அன்பொடு தன்னை அஞ்செழுத்தின்**
**சொற்பதத்துள் வைத்து உள்ளம் அள்ளூறும்**
**தொண்டர்** ***(135)***

என்பது கருவூரார் பாடல். உள்ளேயே, ஐந்தெழுத்திலேயே, அதில் ஓதுவதிலேயே இறையருள் பெறலாம் என்பது அழகிய கருத்து. நாதவடிவ உபாசனை இது. அதைச் செய்யவும் உறைப்பு வேண்டும்.

இந்த அடியார்கள் சிவபரம்பொருளைப் பத்தியோடு தியானிப்பவர்கள்; தெளிவாக உணர்ந்தவர்கள். சிவனருளை நிறைவாகப் பெற்று அமுதத்தை உண்டு திளைப்பவர்கள். இது பூந்துருத்தி காடநம்பி பாட்டு (184). இப்படிப்பட்ட அடியார் சூழ நின்றால் தில்லைத் திருப்பதி எப்படி இருக்கும்? வேறு எதுவும் வேண்டாம். அடியார் திருக்கோலப் பொலிவு தந்த பேறு அது (190).

இந்த அன்பர்களிலும் இரண்டு வகையினர் இருந்திருக்கிறார்கள். வழிவழியாக வந்து அடிமைபூண்ட பழ அடியார் ஒரு கூட்டம். புதிதாக வந்து சேர்ந்தவர்கள் ஒரு புறம். இறைவன் புத்தடியாரையே விரும்பி முதலில் ஏற்றுக்கொள்வானாம்! இவர்களைவிடக் கூடாதே: பழைய அடியார்கள் என்றும் இருப்பவர்கள் தாமே (206) புதியவரோ பழையவரோ எந்நேரமும் ஈசன் வழிபாடே; எக்காலத்தும் இறைவன் சிந்தனையே.

**நின்று நினைந்து இருந்து கிடந்து எழுந்து**
**தொழும் தொழும்பனேன்** ***(209)***

என்ற வேணாட்டடிகள் பாடல்வரி இதைச் சுட்டும் 'தொழும்பு' என்பது அடிமை பூண்ட உறைப்பைக் காட்டும் ஒரு சொல்.

திருவாலி அமுதனார் அடியார்கள் வழிபாடு செய்யும் வகையை ஒரு பாட்டில் பதிவு செய்துள்ளார். அவர்கள் நீராடிய பின்னர்க் கோயிலுக்குள் செல்கிறார்கள். கையில் இருப்பன பூவும் நீருமே. வேறு ஏதுமில்லை. ஆனால் பெருமானை எண்ணி எண்ணிப்

பெருகும் அன்புகொண்ட உள்ளத்துடன் உள்ளே செல்கிறார்கள். வழிபடும்போதே தங்கள் மூச்சை உள்ளே நிறுத்தித் தியானத்தில் ஈடுபடுகிறார்கள். அப்பொழுது அவர்களுக்குத் தில்லைக் கூத்தனின் சிலம்பொலி கேட்கிறது. மிகமிக எளிமையான வழிபாடு. 'பூவுண்டு நீருண்டு புண்ணியம் செய்வாருக்கு' என்ற திருமந்திரம் இங்கே மலர்கிறது (225).

**தூவி நீரொடு பூஅவை தொழுது**
**ஏத்து கையினராகி மிக்கதோர்**
**ஆவியுள் நிறுத்தி அமர்ந்து**
**ஊறிய அன்பினர் –**

இது அந்தப் பாடல்.

சேந்தனார் இத்தகைய அடியார்களை "வளர்க நம் பத்தர்கள்" என்று வாழ்த்துகிறார் (289). ஏனெனில் அவர்கள் மெய்யடியார்கள். அவர்கள் எல்லாரும் 'கொண்டும் கொடுத்தும்' குடிகுடியாக, வழிவழியாக ஈசனுக்கு ஆள்செய்யும் குடும்பங்களில் பிறந்தவர்கள் (290). தூய்மையான மனம், தொண்டு நெறித் திறமும் உடையவர்கள் (292). "மழவிடையானுக்கு வழிவழி ஆளாய் மணம் செய்கின்ற குடிப்பிறந்த பழவடியார்கள்" (299). அவர்களுக்கு எல்லாமே சிவன்தான். எல்லாரும் சிவன்தான்.

**எந்தைதாய் சுற்றம் முற்றும் எமக்கு**
**அமுதாம் எம்பிரான் என்று என்று**
**சிந்தை செய்யும் சிவன் சீரடியார் (301)**

அற்புதமான பாடல் இது. நின்று இருந்து கிடந்து தொழுதது ஒரு பக்கம். தந்தை, தாய், சுற்றம் எல்லாரும் சிவன் வடிவே என எண்ணித் தொழுவது மறுபுறம். எல்லாவற்றிலும் எல்லாரிலும் ஈசனைக் காணும் பக்குவமும் அருளும் வாய்க்கப் பெற்ற மெய்யடியார்கள் நிலை இதுவே. இதை அடையப் பல நெறயில் நிற்கவேண்டும். அடிமை பூண வேண்டும். தொழும்பர் ஆக வேண்டும். உறைப்பில் உறுதியுடையவர் ஆதல் வேண்டும். அத்தகையோரை மேன்மைகள் தாமாக அடையும்.

# 4. இறைவனின் அருள்புரி தன்மை

சிவபரம் பொருளின் அழகுத் தோற்றத்தில் ஆழ்ந்து ஈடுபட்டு, அவனுக்கே வழிவழித் தொண்டர்களாக ஆக்கிக் கொண்ட அடியார்களுக்கு இறைவன் அருள்புரிந்து எப்படி ஆட்கொள்கிறான்? ஒன்பதாம் திருமுறையில் சில குறிப்புகள் கிடைக்கின்றன. மரபு வழிபட்ட திருமுறைச் செய்திகள் தாம் என்றாலும் அவை படித்தும் உணர்ந்தும் போற்றத்தக்கன. 'தந்தது உன் தன்னை கொண்டது என் தன்னை' என்ற திருவாசக வரியை எண்ணிப் பார்க்கவேண்டும். அடியான் இறைவனுக்கு அடிமை பூணுவான். இது இயற்கை. முன் பகுதியில் இது விளக்கமாகக் கூறப்பட்டது. ஆனால் அதை இறைவன் ஏற்றுக் கொண்டு அருள்புரிய வேண்டும். இதற்கு அடிமை கொள்வது என்று பெயர். அடிமைபூணல் அடியார் செயல், அடிமை கொள்வது இறைவன் அருள். அவன் எல்லோரையும் அடிமை கொள்ள மாட்டான். அதற்கென்று அடியார்களுக்குச் சில தகுதிகள் வேண்டும். அவை என்ன என்று முற்பகுதியில் கூறப்பட்டது. இனி, பரமன் அருள்புரிந்த தன்மைகள் வருகின்றன.

திருமாளிகைத் தேவர் திருவிசைப்பாவில் முதல் பாட்டிலேயே அன்பர்களின் உள்ளத்தில் ஆனந்தக்கனியாக இறைவன் எழுந்தருள்வான் என்று பாடுகிறார் (1). 'அளிவள உள்ளத்து ஆனந்தக் கனி' என்பது தொடர். இதற்கு உரை எழுதும் கோபாலையர் "எல்லையைக் கடந்து இறைவனிடம் ஈடுபட்டு இருக்கும் உள்ளத்தில் பேரின்பம் நல்கும் கனியாக உள்ளவன்' என்று குறிக்கிறார் (ப. 194). நல்ல விளக்கம் இது. மண்ணின் ஐம்புலன் எல்லைகளைக் கடந்து இறைவனிடம் ஈடுபட்ட அன்பு கொண்ட உள்ளத்தில் இன்பக் கனியாக வந்து நிறைவு தருவான்.

அடுத்த பாடலிலேயே இறைவனின் அருள்புரி தன்மையை இன்னும் விளக்குகிறார்.

> இடர்கெடுத்து என்னை ஆண்டுகொண்டு என்னுள்
> இருட்பிழம்பு அற எறிந்த.... சோதீ (2)

மும்மலக் குற்றங்கள், ஐம்புல வேட்கைகள் இவை எல்லாம் மானிட மனத்தையும், அறிவையும் மயக்கி இருளில் ஆழ்த்துகின்றன. அதனால் துன்பமே விளைகிறது. பற்றித் தொடர்ந்து மயக்குகின்ற, திரண்டு பிழம்புபோல வந்து வருத்துகின்ற அந்த நிலையிலிருந்து யார் மீட்பார்கள்? எந்த ஒளி வந்து இருளைப் போக்கும்? இந்தக் கேள்விகளுக்கு விடைதான் இந்தப் பாடல் வரி. மாசுமறுவற்ற தூய

நல்ல சோதிப்பிழம்பாக அடியார் நெஞ்சுள் இறைவன் தோன்றித் துன்பங்களைப் போக்குவான் என்பது திருமாளிகைத் தேவர் தரும் நம்பிக்கையூட்டும் வாசகம்.

**இன்று எனக்கு அருளி இருள்கடிந்து உள்ளத்து**
**எழுகின்ற ஞாயிறே போன்று**

என வரும் மணிவாசகரின் அமுதப்பாட்டை வடித்து ஊற்றிய அமுதச்சாறாக இந்தப்பாடல் இருப்பதில் வியப்பில்லை. மரபு வழிப்பட்ட செல்வம் அது.

அயனும் மாலும் காண முடியாத பெருஞ்சுடராய் எழுந்த பேரருளாளன் வெறும் அன்பு மட்டும் கொண்ட மெய்யடியார் களுக்குத் தானாகவே வந்து காட்சி தரும் எளிவந்த தன்மை திருவிசைப்பாவில் பல பாடல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுவும் தேவார காலம் தொட்டுவரும் பாவிகக் குறிப்புதான். பிரமன் கலைமகள் கொழுநனாக இருக்கும் பேறு பெற்றவன். நான்மறையாளன், வேதத்தின் உரு, அறிவின் வடிவம் என்றெல்லாம் போற்றப்படுபவன். அவனுடைய அறிவே ஆகட்டும்.

திருமாலோ திருமகளை மார்பில் தாங்குபவன். வைகுந்த வீடுடையான், செல்வங்களின் செல்வன், பாற்கடலுள் பள்ளி கொள்ளும் அறிதுயிலோன், போகத்தில் யோகமாகவும் யோகத்தில் போகமாகவும் இருப்பவன். அவனுடைய செல்வமே ஆகட்டும்.

இந்த இரண்டுமே இறையருள் பெறுவதற்கு உதவி செய்யா. பல வேளைகளில் தடைகளாகக் கூட இருக்கலாம். ஏனெனில் செல்வமும் அறிவும் ஆணவத்தின் வடிவங்களாக இருப்பதும் உண்டு. ஆதலால் அவற்றை விட்டு மெய்யான அன்பு கொண்டு இறைவன் திருமுன் நின்று யார் பாடியும் ஆடியும் உருகியும் கண்ணீர் சிந்தியும் வழிபடுகிறார்களோ, அவர்களை இறைவன் தானே தேடிவந்து அருள் செய்வான் என்பதுதான் உணரவேண்டிய செய்தி.

**துணுக்கென ஆயனும் மாலும்**
**தொடர்வரும் சுடராய் இப்பால்**
**அணுக்கருக்கு அணிய செம்பொன்**
**அம்பலத்தாடி** *(38)*

என்ற அழகு வரிகள் இந்த நுட்பத்தைப் புலப்படுத்துகின்றன. அணுக்கர் - நெருங்கி நிற்பவர்கள். அவர்களை நெருங்கி நிற்பான் இறைவன். அணிய செம்பொன். பெருமானின் இந்த எளிவந்த தன்மை இன்றைய உலகம் உணரவேண்டிய ஒன்று. செல்வம், அறிவு இவற்றால் எதையும் எல்லாவற்றையும் சாதிக்க முடியும் என மயங்கிச் செருக்கால் துன்புறும் உலகிற்கு, அழிவின் விளிம்பில் நிற்கும் உலகிற்கு அன்பே

பெரிது எனக் கூறுகிறது ஒன்பதாம் திருமுறை. காது கொடுத்துக் கேட்க வேண்டும்.

பெருமான் அருள்புரியும் தன்மையில் ஒரு சிறப்பு உண்டு. அடியார் உள்ளத்தை உருக்குவது ஒருபுறம் நிற்க, அந்த உருக்கத்துக்குப் பின்னால் வற்றாத ஊற்றுபோல அருள்தேனை வாரி வழங்குவான். அதோடு நில்லாது தன்னுடைய அடிமைகொள்ளும் திறனை ஒரு சிறிய குறிப்பால் வெளிப்படுத்தவும் செய்வான். இதற்குத் திருக்குறிப்பு என்று பெயர் "என்று வந்தாய் என்னும் திருக்குறிப்பே!" என நாவுக்கரசர் பாடுவது நினைவுக்கு வருகிறது (41). இவை எல்லாம் திருமாளிகைத் தேவர் பாடிய செய்திகள்.

அடியார்க்கு எளியவனாகிய பெருமானின் இன்னொரு அருளிப்பாடு அன்பர்கள் நெஞ்சில் நிறைந்து நிற்பதாகும். யார் எல்லாம் பழுத்த செந்தமிழ் மலர் சூடி, பாட்டலங்காரம் செய்கிறார்களோ, அத்தகையோர் - சம்பந்தர், நாவரசர், சுந்தரர் போன்ற அருளாளர்கள் - நீடலங்காரப் பெருமக்கள் ஆவார்கள். அவர்களுடைய நெஞ்சங்களில் இறைவன் நிறைந்து பொலிவான் என்பது சேந்தனாரின் கணிப்பு (57). இது ஒரு நல்ல செய்தி. பாடல்களையே அழகுபட்ட மாலையாக்கிச் சூடலாம். பதிகப் பாமாலையே இறைவனுக்கு உகந்தது என்பது தெளிவு. அப்பாடல்களும் இயற்கையாகவே உள்ளத்தில் அரும்பிப் பூத்து மலர்ந்து காய்த்துக் கனிந்தவையாக இருக்கவேண்டும். 'பழுத்த செந்தமிழ் மலர்கள்' எனச் சேந்தனார் குறிக்கும் அழகு காணத்தக்கது. அப்படி உள்ளே நிறைபவன் பாலும் அமுதமும் தேனுமாக இருந்து ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்துவான். அதைவிட மானிட உயிர்க்கு வேறு என்ன போகம் வேண்டும். 'என் ஆருயிர்ப் போகம்' என்று தெய்வம் அருளும் இந்தத் தன்மையைச் சேந்தனார் பாடுகிறார் (68).

கருவூர்த்தேவர் பாடல்களில் சிவபெருமானின் இந்த அருள்புரி தன்மை உச்சம் அடைகிறது. மானிட வாழ்வு ஒரு பிறவிக் கடல். அதில் நீந்துவது எளிதன்று. துணையாக இருக்க வேண்டிய ஐம்பொறிகளும் பகைவர்கள் ஆகிவிட்டார்கள். என்ன செய்வது; என்று தெரியாமல் தத்தளிக்கும்போது 'அஞ்சாதே' என்று ஓடிவந்து அடியாரைக் காப்பவன் இறைவன் என்று ஐம்பொறி ஆட்டத்தின் கொடுமையயும், அதிலிருந்து மீட்கும் இறைவனையும் பாடுகிறார்.

**இவ் அரும் பிறவி பௌவநீர் நீந்தும்**
**ஏழையேற்கு என்னுடன் பிறந்த**
**ஐவரும் பகையே யார்துணை என்றால்**
**'அஞ்சல்' என்று அருள் செய்வான்** (81)

என்பது அழகிய பாட்டு.

சிவபரம்பொருள் தாயினும் நல்லவன், பெருங்கருணையாளன் உங்களுடைய தனிமை நிலையைச் சொல்லி உதவிக்கு அழையுங்கள்; புலம்புங்கள். உங்களுடைய வேண்டுதல் குரல் கட்டாயம் அவனுக்குக் கேட்கும். அவன் மனம் இரங்கி நலம்புரிவான். துன்பம் நீக்கம் செய்வான். ஏனெனில் அவன் நல்லதே புரிகின்ற பரமன்" (82) என்கிற அடுத்த பாடலில் வேறு ஒரு வகையில் பெருமானின் அருளாட்சியைப் பாடுகிறார்.

'பழையராம் தொண்டர்க்கு எளியராக' (94) இருக்கும் பரமன், இனியொரு பிறவியில் போய்ப்பிறந்து அடியார் துன்புறாவண்ணம் அருளவும் செய்வான் (7). எப்படி? காலையில் கீழ்வானில் உதிக்கும் ஞாயிறு எவ்வாறு இருளை மாய்த்து ஒளியைப் பரப்பி உலகை மகிழ்ச்சியில் ஆழ்த்துமோ அதுபோல - 'அவனி ஞாயிறு போன்று அருள்புரிந்து' காப்பானாம் (112). இறைவனின் அருளிச் செயல்களில் இந்த இரண்டு நூல்கள் முழுவதும் பேசப்பட்டுள்ளன. துன்பம் பிறவியாகிய இருள்நீக்கம், இன்பம் பிறவாமை ஆகிய இன்ப ஆக்கம் என்னும் ஒளிவெள்ளம் இவை உருவகங்களாகப் பயன்படுகின்றன.

**மெய்யரே மெய்யர்க்குஇடு திருவான**
**விளக்கரே (98)**

என்ற வரியில் கருவூரார் இதை அழுத்தமாகவே பதியவைக்கிறார்.

வினைகள் கெடுமாறு அடியார்களுடைய உள்நெஞ்சில் புகுந்து அருள்தேனை வழங்குவதற்கும் ஒரு வழிவேண்டுமல்லவா? அதைக் கருவூரார், 'பொருளுணர்வு நூல்வகை' என்கிறார் (113). மெய்ப்பொருளை - என்றும் அழிவிலாத பரம்பொருளை உணர வழி செய்யும் நூல் என்று பொருள்கொள்ள வேண்டும். இதைக் கல்வியால் மட்டும் பெறமுடியாது. நல்ல ஆசிரியர்கள் திருவடியில் அமர்ந்து பெறக்கூடிய ஞானத்தால் மட்டுமே அடையலாம்.

சேந்தனார் வேறொரு வகையில் இறைவன் அருள்புரிவதைப் பல்லாண்டுப் பதிகத்தில் குறித்துள்ளார். 'பாதகத்துக்குப் பரிசு' என்ற அழுகுத் தொடரில் இந்தக் குறிப்பு வருகிறது. சண்டேசுவர நாயனார், சிவநிந்தை செய்த தன் தந்தையின் காலை மழுவால் வெட்டினார் என்பது திருத்தொண்டர் புராணம் கூறும் செய்தி. விசார சருமர், இந்தப் பக்திச் செயலால் சண்டிகேசுவரப் பதமும் தேவரும் மக்களும் வணங்கும் அளவு சிவபிரான் திருக்கோயில்களில் தனிச்சந்நிதியும், திருவமுதும், சோதிமணிமுடியும், தொண்டர்க்குத் தலைவராகும் பேறும் அவர் பெற்றார். தந்தை என்றும் பாராது தண்டித்தவருக்குப் பல வகைகளில் பரிசுகள் கிடைத்தன. 'பாதகத்துக்குப் பரிசு' இதுவே.

சிவபெருமானுடைய பேரருள் தன்னுடைய அடியார்களுக்கு வழங்கப்படும்போது தனிமனித உறவுகள் தடைகளாக இருக்கக் கூடாது; இருக்காது; அந்த அருள் வெளிப்படும்போது எல்லா இடையூறுகளும் நீக்கப்படும்; நீங்கிப் போகும் என்பது தெளிவு.

**தாதையைத் தாள்அற வீசியச்ண்டிக்குஅவ்**
**அண்டத்தொடும் உடனே**
**பூதலத்தோரும் வணங்கப் பொற்கோயிலும்**
**போனகமும் அருளிச்**
**சோதிமணி முடித்தாமமும் நாமமும்**
**தொண்டர்க்கு நாயகமும்**
**பாதகத்துக்குப் பரிசு வைத்தானுக்கே**
**பல்லாண்டு கூறுதுமே**

என்பது அந்த அழகிய பாடல் சிவனடியார்களுக்கு எல்லாரும் வணங்கும் பெருமை, வாழ்விடம், உணவு, சமுதாய மதிப்பு, புகழ் தலைவனாக வீற்றிருக்கும் உயர்வு எல்லாவற்றையும் பெருமான் அருள்வான் என்பது உட்கிடக்கை.

# 5. அடியார்கள் பெறும்போது....

திருவிசைப்பா நெடுகிலும் அடியார்கள் பெருமை தொடர்ந்து பேசப்படுகிறது. இறைவன் அருள்செய்யும் வகையிலும் இதை ஒட்டிய சில குறிப்புகள் தரப்பட்டன. அவற்றில் சில விரிவாக இந்தப் பகுதியில் சுட்டப்படுகின்றன.

அடியார்கள் இறைவன் அருளால் பெறும் பேறுகளில் தலையானது உள்ளத்திலுள்ள இடமும் இருளும் நீங்கப் பெறுவது (2) ஆகும். அப்படி ஒரு மாற்றம் ஏற்பட வேண்டுமாயின் உள்ளேயே 'தூயநற்சோதியுள் சோதி' என்று குறிப்பிடுகிறார் (2). அற்பர்களாக இருக்கும் அடியவர்களும் அளவிலாத இன்பம் பெறுவார்கள் (3).

இறைவன் திருக்கோலக் காட்சி அன்பர்களுக்குக் கிட்டுவதை 18ஆம் பாட்டு குறிக்கிறது. 'குனித்த புருவம்' என்று தொடங்கும் நாவுக்கரசர் பாடல் தமிழகம் அறிந்தது. அதன் நிறைவில் 'எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால் மனித்தப் பிறவியும் வேண்டுவதே' எனப் பாடுவார். அப்படி காணப்பெறுவது எல்லாருக்கும் வாய்க்காது. மலை போன்ற எண்தோள்கள், மேலே போர்த்த புலித் தோல். மார்பில் பூணூலும் திருநீறும், இதனுடன் 'நடஞ்செய் சிற்றம்பலக் கூத்தனின்' பேரழகைக் 'காணப் பெற்றவர்' (18) வாழ்வின் பயனை அடைந்தவர்கள் என்று கூறுகிறது பாடல்.

ஐம்பொறிகளும் ஐம்புலன்களும் வெறிபிடித்து ஆடும் விலங்குத் தன்மை கொண்டவை. அவற்றை அடக்குவதும் வெல்வதும் எளிதானவை அல்ல. அப்படி செய்யத் தெய்வ ஆற்றல் வேண்டிப் பெறவேண்டும். உள்ளம் உருகி அவ்வாறு வேண்டும் அன்பர்களை ஐந்தின் வெறியாட்டத்திலிருந்து இறைவன் காப்பான் என்று சேந்தனார் பாடுகிறார்.

**"ஐவரோடு அழுந்தி யான்அவமே**
**புக்கிடா வண்ணம் காத்துஎனை ஆண்ட புனிதன்"** **(51)**

என்று மகிழ்வுடன் இந்தச் செய்தியைக் குறிக்கிறார். கருவூர்த் தேவர் பாடலிலும் இந்த ஐம்புல வேடர் பற்றி வருகிறது. "கூடவே பிறந்து கூடவே வளர்ந்தாலும் இந்த ஐவரும் பகைவர்களே. அவர்களால் படும் துன்பங்கள் கொஞ்சமல்ல. யார் துணையாக வந்து நம்மைக் காப்பார்கள்? என்ற அச்சம் வரும்போதெல்லாம் 'அஞ்சவேண்டாம். நான் உன்கூட இருக்கிறேன்' என்று அருள் செய்வான் இறைவன் என்கிறார். கருவூரார் (81) அச்சத்தினின்று ஐம்புலன்களால் ஏற்படும் சிறுமைகளிலிருந்து விடுதலையை அடியார்கள் பெறுவார்கள்.

சிவனருள் கிடைக்கும்போது என நம்பிக்கையூட்டும் கருத்து இன்றும் பொருந்துமே!

கங்கை கொண்ட கோளேச்சுரப் பதிகத்தில் அரிய பாடல் ஒன்று வருகிறது. கருத்து பழையதுதான். ஆனால் அருள்பெற்ற அடியார் ஒருவரின் மகிழ்ச்சிப் பெருக்கு துள்ளுகிறது.

**அன்னமாய் விசும்பு பறந்து அயன்தேட**
**அங்ஙனே பெரியநீ சிறிய**
**என்னைஆள் விரும்பி என்மனம் புகுந்த**
**எளிமையை என்றும்நான் மறக்கேன்** *(133)*

'பெரிய நீ சிறிய என்னை' என்ற தொடரில் தான் அடியாரின் பேறு வெளிப்படுகிறது. 'எல்லாவற்றிலும் எல்லாரிலும் பெரியனான இறைவன் எல்லாரிலும் எல்லாவற்றிலும் சிறியவனான என்னை' எனப் பொருள் கொள்ள வேண்டும். தெய்வ அருள்பெற யாராலும் முடியும்; யாரும் முயல வேண்டும். இறைவன் தன் மூல பண்டாரம் வழங்குவதில் எந்த வேறுபாட்டையும் காட்டுவதில்லை; காண்பதுவும் இல்லை என்பதே ஆழ்ந்த பொருள். பாவியர்களாக இருந்தால்கூட, இறைவன் உள்புகுந்து கண்ணில் நின்றகலாது இருந்து காப்பான் என்பதும் கருவூரார் பாட்டே. ஆதலால்தான் அவர் கங்கை கொண்ட சோழபுரக் கடவுளை 'அற்புதத் தெய்வம் இதனின் மற்றுண்டே' என்று வியந்து போற்றுகிறார் (135).

இன்னொரு அரிய கருத்தும் கருவூரார்ப் பாடலில் வருகிறது. மெய்யடியாரின் உடனிருந்து, அவர்கள் ஆற்றும் வினைகளின் பயனையும் சிலவேளைகளில் இறைவன் துய்ப்பான். பயன்கள் அவனை ஏதும் செய்யா எனினும் அடியார்க்கு அருள்தலில் இது ஒரு வகை. வேறு வகையாகச் சொன்னால் அடியார்களாக இருப்பவர்கள் எல்லாவற்றையும் ஈசன் செயல் என்று கருதிப் பற்றின்றிச் செய்ய வேண்டும். அந்த நிலையில் உண்ணும் உணவும் பருகும் நீரும் கூடச் சிவனுக்கென்று ஆகுமே தவிர, அடியாரைச் சாராது, இதற்குச் **சிவார்ப்பணம்** என்று பெயர். ஒவ்வொரு செயலையும் இப்படி ஆகும் வகையையும் வழியையும் அவனே பெருஞ்சோதிப் பெருமானாக உள்ளே வந்து காட்டுவான்.

இதைவிட ஓர் அடியார் என்ன உயர் நிலையை அடைய முடியும்? 'எல்லாம் உனக்கே: எல்லாம் உன்னுடையதே' என்ற சிந்தையைப் பெறும் வழியையும் இறைவன் காட்டுவான் என்றால் இதைவிட வேறு என்ன கர்மயோகம் உள்ளது?

கருவூர்த்தேவருடைய மனம் உருகுகிறது. இப்படி ஒரு பேறு தனக்குக் கிட்டவேண்டுமானால் எத்தனை பிறவிகளில் எவ்வகையான தொழும்பு பூண்டு இறைவனுக்குத் தொண்டு செய்திருக்க வேண்டும்?

"சேவடி... எம்மனம் குடிகொண்டு இருப்பதற்கு யான் ஆ:ர்? என்னுடைய அடிமைதான் யாதோ?" என அவருக்கே வியப்பு மேலிடுகிறது (149). "நான் ஆர் என் உள்ளம் ஆர் ஞானங்கள் ஆர்?" என்று திருவாசகம் கேட்பதின் எதிரொலி தான் இதுவும்?"

தஞ்சைப் பெருவுடையார் அடியாருக்கு எப்படி அருள்புரிவான்? அவர்களை எவ்வாறு ஆட்சி செய்வான்? அருள்தல் ஒரு புறம், ஆளல் ஒரு புறம். இரண்டுக்கும் விடை நமக்குத் தெரியாது. அவனுக்கே தெரியும். 'அருளுமாறு அருளி ஆளுமாறு ஆளும்' அடிகள் அவனே என்கிறார் (167). அடிகள் என்பது அரிய குறிப்பு. எல்லாவற்றிலும் மேம்பட்ட 'செம்மனக்கிழவன்' அவன். அந்தச் செம்மைநிற மனத்துள் நல்லடியார் இடம் பெறுவது போற்றற்குரியது.

திருவிடைமருதூர்ப் பதிகத்தில் தாம்பெற்ற அனுபவம் வாயிலாகக் கருவூரார் யோகச் செய்தி ஒன்றைச் சொல்கிறார். இது புதிதாகவும் இருக்கிறது. "நான் உறங்கிக் கொண்டிருந்தபோது, அடர்ந்த நள்ளிரவு வேளையில், இறைவன் தானே என் மனத்தின் உள்ளே புகுந்தான். மிகமிகப் பெரியவனான அவன் மிகமிகச் சிறியவனாக ஆகி என்னுடன் கலந்துவிட்டான். இதைவிட நான் பெறும் பேறு என்ன உண்டு? வேறு யார் தான் இப்படி பெறுவார்கள்?

தூங்கிருள் நல்யாமத்து என்
மனனிடை அறுகி நுணுகி உள்கலந்தோன் (175)

என்பது பாட்டு. யோகிகளுக்கு உலகம் விழித்திருக்கும் வேளை இரவு என்றும், உலகம் உறங்கும் இரவு பகல் என்றும் சொல்லும் மரபை இங்குச் சுட்டவேண்டும். வேறுவகையில் மும்மலம், ஐம்புலன்கள் இவற்றின் ஆளுகை இருக்கும் நேரம் பகல் என்னும் இவை அடங்கி அமைதியில் மோனவரம்பில் ஞான நிலையில் இறையருளில் உயிர் திளைக்கும் நேரம் இரவு என்றும் சொல்வதுண்டு. அவரவர் முதிர்ச்சிக்கு ஏற்ப இந்நிலை வாய்க்கும். அந்த வாய்ப்பைப் பெற்றவர்களுக்கு நடுக்காட்டிலும் நகரின் ஆரவாரம் கேட்கும்; நகரின் நடுவிலும் காட்டின் அமைதி உள்ளே நிறையும். அடியார்கள் பெறக்கூடிய உண்மையான பேறு இதுவே. கருவூர்த் தேவர் பாடலின் உள்பொருள் இதுவே. "நெடும்பேய்க் கணம் எழுந்து ஆடும் தூங்கிருள் நடுநல்யாமத்திலும்" - சேய்கள் ஆர்க்கும் காட்டிலும் - 'அருள்புரி முறுவலுடன்' பெருமான் வந்து அமைதி நல்குவான்.

இந்த மனநிலையை - அடியார்கள் பெறக்கூடிய, பெற வேண்டிய தெளிந்த மனநிலையை ஓர் உவமையால் கருவூர்த் தேவர் விளக்குகின்ற நயம் படித்துச் சுவைக்கத்தக்கது. சேறு கலங்கிய நீர் நிலை. அந்தப் பொய்கை மாசுமறுவின்றித் தெளிந்த நீருடையதாகத்

தான் முன்னர் இருந்தது. இப்பொழுது பலப்பல காரணங்களால் மாசுபட்டுவிட்டது. கலங்கிய சேறுடன் மங்கிக் கிடக்கிறது. அதில் தேற்றாங்கொட்டையைச் சேர்த்துவிட்டால், அதனுடைய தன்மையால் சேறு பிரிந்து அடியில் தங்கிவிடும். நீர் மணி நீராகத் தெளிந்து கண்ணாடிபோல, முன்னிருந்த தோற்றத்தில் பளபளக்கும் . எப்படி இந்த மாற்றம் வந்தது? சேற்றாங்கொட்டை சேர்ந்ததால், இப்பொழுதும் சேறு இருக்கிறது. ஆனால் தண்ணீர் தெளிந்தே நிற்கிறது.

வாழ்வு ஒரு பொய்கைதான். ஐம்புலன் இன்பங்கள் மனமாசுகள் என்னும் சேறுகள் சேர்ந்து அதைக் கலக்கியும் குழப்பியும் விடுகின்றன. ஓர் அடியார் இந்த மயக்க நிலையிலிருந்து தெளிவு பெற வேண்டுமாயின் இறையருள் வேட்டல் என்ற தேற்றாங்கொட்டையை மனத்தில் கலந்தால் போதும். தானாகவே தெளிவு பிறந்துவிடும். அது அங்கு இருக்கும்வரை அந்த மாசுகள் மறுபடி கலக்கத்தையும் உண்டாக்கா. இது உறுதி என்று கருவூர்த்தேவர் கட்டியம் கூறும் பாடல்:

**கலங்கல் அம்பொய்கைப் புனல் தெளிவிடத்துக்**
**கலந்த மண்ணிடை கிடந்தாங்கு**
**நலம்கலந்து அடியேன் சிந்தையுள் புகுந்த**
**நம்பனே** ***(181)***

சிந்தையே பொய்கை: தெய்வ நலமே மாசுகளை நீக்கும் கருவி. இறையருள் பெற்றபின் இனி அப்படியே தெளிவுடன் மண்ணில் கிடக்கலாம் என்ற செய்திகள் எல்லாரையும் என்றும் வாழவைப்பன.

இப்படி இறையருள் பெறச் சிலரால்தான் முடியும் என்று கருத வேண்டியதில்லை. அதற்கெனப் பெரிதாகத் தவம் ஏதும் செய்ய வேண்டுவதுமில்லை. வேணாட்டடிகள் உவமை ஒன்றின் மூலமாக இதைத் தெரிவிக்கிறார். இங்கும் ஒரு குளம், நீர் நிரம்பி வழிகிறது. அதுதவிர, மதகு வழியாகவும் நீர்பெருகி ஓடி வயல் வெளிகளில் பாய்ந்து பயிரைச் செழிக்க வைக்கிறது? அது மட்டும்தானா? இல்லை. குளத்தில் தேங்கியிருக்கும் நீர் மண்ணில் கசிந்து கரையோரங்களிலும் ஈரம் பரவுகிறது. அங்கே இருக்கின்ற சாதாரணச் செடிகள், மரங்கள் ஆகியவையும் நீர்வளம் பெற்றுப் பொலிகின்றன ஆதலால் மெய்யடி யார்களுக்கு மட்டும் என்பதல்லை எல்லோருக்கும் இறையருள் கிட்டும். ஆனால் குளக்கரையில் மரங்கள் இருக்க வேண்டும் என்பதுபோல, இறைவன் திருவடியில் மனம் கிடக்க வேண்டும். நாட்டுப்புறத்தில் வழங்கும் பழமொழி ஒன்றின்மேல் வைத்து வேணாட்டடிகள் இதைத் தெரிவிக்கும் நயம் நோக்கற்குரியது.

**பொசியாதோ கீழ்க்கொம்பு நிறைகுளம் என்றது போலத்**
**திசைநோக்கிப் பேழ்கணித்துச் சிவபெருமான்** *(207)*

இந்த நம்பிக்கையுடன், அடியார்களுக்குப் பெருமான் அருளாது இருக்கமாட்டான் என்ற வலுவான எதிர்பார்ப்புடன்தான் சேந்தனார் இறைவனுக்குப் பல்லாண்டு பாடுகிறார். “தில்லை நிலைபெறட்டும் நம் பத்தர்கள் நாளும் வளரட்டும்” என்ற மங்கல வாழ்த்துடன் பல்லாண்டு தொடங்குகிறது (289). உமைமங்கையின் கணவனாகிய ஈசன் அடியார்களுக்குத் தேடி வந்து அருள்காட்டிப் பிறவி அறுக்கும் நெறியையும் காட்டினான். மெய்யடியார்கள் ஓடோடி வந்து இந்தப் பேற்றினைப் பெற்றுக் கொள்ளவேண்டும். விரைவாக வந்து கொண்டும் கொடுத்தும் குடும்பம் குடும்பமாக ஒன்று சேர்ந்து பரமனுக்கு ஆள்செய்ய வேண்டும் (290). மேலானதுக்குப் மேலானதாகத் தெய்வம் ‘சிவனடியாரைச் சீராட்டும் திறங்களுமே சிந்திக்க’ வேண்டும் (291). இது ஒரு அழகான வரி. தாம்போல் பரிந்து, ஈன்ற தாயினும் பேணி என்பன போன்ற தொடர்கள் வழக்கமாக வருவனவே. ஆனால் இங்கு அடியாரைப் பலப்பல விதங்களில்/ திறங்களில் சிவபெருமான் சீராட்டுகிறான் என்ற பெருமிதம் புதியதாக அமைந்துள்ளது. தன் குழந்தையைச் சீராக வளர்க்கும் தாயினம் மேலாக என்பது நயம்.

சேந்தனார் உள்ளம் ஒரு கணம் உருகுகிறது. தெய்வமே தேடிவந்து பொழியும் கருணை வெள்ளத்தில் அவர் திகைத்துப் போகிறார்: ஒருவகையான பெருமிதமே மேலிடுகிறது. சீரும் திருவும் பொலியும் உயர்நிலை தழுவியவன் சிவலோக நாயகன் அவனுடைய திருவடி நிழலில் இருந்து பெற்றது என்ன? இதைப்போல வேறு யாராவது பெற்றதுண்டா? இல்லை. சிவனடியார் தவிர யாருக்கும் இது கிடைக்காது. எது? மேலான அறிவு: பரஞானம். முழுமுதல் ஒன்றே: ஒன்று சிவமே என்னும் தெளிவு. சேந்தனார் பாடுகிறார்.

**சீரும் திருவும் பொலியச் சிவலோக**
**நாயகன் சேவடிக்கீழ்**
**ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றது**
**ஆர்பெறுவார் உலகில்** *(295)*

அடியார்கள் வாழ்வின் நிறைவு இதுதான். ‘ஆரும் பெறாத அறிவு’ பழவடியாராக அவர்கள் இருந்த பெருமைக்குக் கிடைத்த பரிசு. அதைக் காண்பதற்காக - இறைவன் திருவாதிரை நாளில் மெய்யடியாருடன் கூடியிருப்பதைக் காண்பதற்காக எல்லாரும் வந்தனர்.

ஆனார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரை நாள்
நாராயணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும் (300)

வந்தார்கள். அணியுடை - அழகுடைய என்பது உரையாசிரியர் குறிப்பு. அணி, வரிசை என்றும் பொருள்படும். இங்கு அப்படி வரிசை வரிசையாக நிற்கும் அடியார்களை உடைய திருநாள் என்பதே தெய்வீக நிறைவு.

# 6. இயற்கை வருணனை

பக்தி இலக்கியம் முன் சொன்னதுபோலத் தீர்த்தம் தலம், மூர்த்தி என்னும் மூன்றையும் பாடுபொருளாகக் கொண்டது. தீர்த்தம், தலம் ஆகிய இரண்டைப் பற்றிய செய்திகளைப் பாடும்போது அருளாளர்கள் மலை, ஆறு, கடல், மரம், செடி, பூ, பறவை, விலங்கு என ஆங்காங்குள்ள இயற்கை அழகின் வெளிப்பாடுகளையும் பதிய வைத்துள்ளனர். குறிப்பாகச் சம்பந்தர் தேவாரம் இதில் மற்ற திருமுறைகளை விட விஞ்சியிருப்பது கற்றவர் அறிந்த உண்மை. அந்த வகையில் நோக்கும்போது திருவிசைப்பாவில் இயற்கை வருணனை குறைவாகவே உள்ளது. கோயில்களில் அன்றாட வழிபாட்டுக்காகப் பாடப்பட்டவையாதலால் விரிவாகவே இயற்கை அழகைப் புனைந்துரைக்க வாய்ப்பு இல்லாமல் போயிருக்க வேண்டும். ஏனெனில், இந்தத் திருமுறையில் வரும் பல பாடல்களும் அவற்றில் தெறித்து விழுந்துள்ள தொடர்களும் பாடிய அருளாளர்களின் கவியாற்றலை ஐயத்துக்கு இடம் இல்லாமல் தெளிவாகப் புலப்படுத்து கின்றன. அதில் ஒன்றும் குறையில்லை. தேவைப்படவில்லை என்று தான் கருதத்தோன்றுகிறது. இருக்கின்ற பாடல்களை வைத்து நோக்கி இயற்கை அழகின் பதிவுகள் வெளிப்பட்டுள்ள பாங்கைக் காணலாம்.

திருமாளிகைத் தேவர் கோயிலாகிய தில்லையைப் பாடும்பொழுது அந்தத் தலத்தைச் சுற்றியுள்ள அழகுகளையும் குறிக்கிறார். ஊரைச் சுற்றிலும் நெல்வயல்கள், செந்நெல் விளையும் பச்சை வயல்களில் செங்கழுநீர்ப் பூக்களும் இடையிடையே பூ எழில் சிந்துகின்றன. அந்த வயலுள் எருமைகள் இறங்குகின்றன. தாமரைப் பூக்களையும் கரும்பையும் ஒருசேரத் தின்ற மதப்பு எருமைக்கு. அதுவரை வரப்புகளையும் தாண்டிக் குதித்து ஆட்டம்போட்ட வாளை மீன்கள் எருமைக்கு அஞ்சி அருகில் வளர்ந்துள்ள பிரப்பம் புதருக்குள்போய்ப் பதுங்கிக் கொள்கின்றன. அத்தகைய ஊர் தில்லை என்பது அழகோவியம். நீருள் மின்னித் துள்ளும் வாளை மீன்களைக் கண்டு மகிழலாம்.

வரம்பிரி வாளை மிளிர்மடுக் கமலம்
கரும்பொடு மாந்திடு மேதி
பிரம்பிரி செந்நெல் கழனிச் செங்கழுநீர்
பழனம்சூழ் பெரும்பற்றப் புலியூர் *(14)*

இதே தில்லையில் இன்னொரு காட்சியையும் திருமாளிகைத் தேவர் படைக்கிறார். ஊரைச் சுற்றிப் பெரிய மதில் சுவர். பழமையான

திண்ணிய மதில். அதன்மீது பாதுகாப்புக் கருதிச் செய்து வைக்கப்பட்டுள்ள பதணம் போன்ற அமைப்புகள்; மதிலை ஒட்டி நீர் நிறைந்துள்ள கிடங்குகள்; அந்த நீரால் வளம்பெற்ற பொழில்கள்; அவற்றில் செழித்து வளர்ந்திருக்கும் மரங்கள்; ஒன்றா இரண்டா? அடர்த்தியாக, நெருங்கி இலைகளைப் பரப்பி நிற்கும் வாழை; அருகிலேயே உயரமாக நிமிர்ந்து வளர்ந்திருக்கும் தென்னை; அதை ஒட்டி இணையாக மேல்நோக்கித் தூணாக இருக்கும் இளைய கமுகு, இவற்றிடையே வீசிவீசிப் படர்ந்து நிழல்பரப்பும் பல வகைக் கொடிகள்; இவற்றுக்கு நடுநடுவில் இனிமைமிக்க, மனம் விரும்பும் கனிகளைத் தரும் பலா, மா மரங்கள்; இந்த மரங்களின் உயரத்தைத் தாண்ட முடியாமல் அல்லது இந்த வனப்பைவிட்டுச் செல்ல மனம் இல்லாமல் அந்த மரங்களின் உச்சியில் தவழும் பிறை நிலா. இத்தனை அழகுகளும் கொட்டிக்கிடக்கும் சோலைகள் சூழ்ந்த மதிலையுடைய தில்லை என்று சொல்லோவியம் உருவாகிறது.

*நிறைதழை வாழை நிழல்கொடி நெடுந்தெங்கு*
*இளம்கமுகு உளம்கொள் நீள்பலா மாம்*
*பிறைதவழ் பொழில்சூழ் கிடங்கிடைப் பதரை*
*முதுமதில் பெரும்பற்றப் புலியூர்* (16)

'உறவாகிய யோகமும்' என்று தொடங்கும் மூன்றாம் பதிகத்தில் சிவபெருமான் வேட வடிவம் கொண்டு சென்று அருச்சுனனுக்கு அருளிய செய்தி எல்லாப் பாடல்களிலும் குறிக்கப் படுகிறது. மகேந்திரமலை, அங்குப் பாயும் மணிநீர் அருவி, காட்டு விலங்குகளாகிய பன்றி, மான் போன்ற விலங்குகள், கமுகு போன்ற பறவை ஆகியவை குறிக்கப்பட்டுள்ளன.

தூய பளிங்கு போன்ற நீரருவிகள் பாயும் மகேந்திர மலை; அடர்த்தியான உயர்மரங்கள் செறிந்திருக்கும் காடுகள், வானைத் தொடும் அளவு உயர்ந்திருக்கும் மலைகளின் சரிவில் ஏறிக் குதிக்கும் மான்கள் கூட்டம், காட்டுப்பன்றிகளின் உறுமல் 'வானைத் தடவு நெடுங்குடுமி மகேந்திர மாமலை (25)', அந்தக் காட்டுப்பன்றிக்குப் பின் செல்கின்ற 'மலைமேல் மருந்தாகிய ஈசன்' (26), அவன் கூடச் செல்கின்ற வேட்டை நாய், கீழிறங்கிப் பாயும் அருவிகள், ஆங்காங்கு பள்ளங்களில் ஏற்படுத்தும் சுனைகள் அவற்றை ஒட்டிச் செழித் திருக்கும் பசுஞ்சோலைகள், அந்தப் பொழில்களில் கல் குகைகளில் படுத்துக்கிடக்கும் சிங்கம், குங்கும மரங்களும் வேங்கை மரங்களும் பூத்துக் குலுங்கும் எழில், இவற்றின் மேலே மிதந்து செல்லும் மேகக் கூட்டம் (31), இந்த எழிலைப் பார்ப்பதற்காகத் தோன்றியதுபோல மலையைச் சுற்றிய ஒளிவட்டம் (33), அந்த ஒளியே பல கீற்றுக்களாகப் பிரிந்து மலையிலிருந்து கீழே ஓடிவருவது போன்ற பல ஆறுகள் (34).

இப்படிப் போகிறது மகேந்திரமலை பற்றிய புனைந்துரை இன்றுள்ள சூழலில், இயற்கை வனப்பு எல்லாம் சிதைக்கப்பட்டு வரும் காலத்தில் இவை போன்ற பாடல்களைப் படித்துத்தான் இயற்கை அழகைத் தெரிந்துகொள்ள வேண்டியுள்ளது.

பாம்பு என்றால் என்ன? அது எப்படி இருக்கும்? இரண்டு கேள்விகளும் ஏளனத்துக்குரியவை. எல்லாரும் அறிந்த ஒன்றை, எல்லாரும் பார்க்கும் ஒன்றைப் பற்றிய இந்தக் கேள்விகள் நகைப்புக் குரியவையே. ஆனால் அப்படி அல்ல. கருவூர்த்தேவர் தம்முடைய திருவிசைப்பாவைத் தொடங்கும்போது பெருமானை அறிமுகப் படுத்துகிறார். 'பாம்பணி பரமர்தம் கோயில்' என்று வருகிறது. எந்தப் பாம்பு என்று கேட்டுப் பாருங்கள் கருவூரார் சொல்கிறார்.

படம் விரித்த பாம்பு, அதன் விரிந்த தலையில் சிவந்த மணிகள் செறிந்து உள்ளன. அதன் நாக்கை உற்றுப் பாருங்கள். பிளவுபட்டிருக் கிறது. அதன் பின்னால் அந்த அகன்ற வாயுள்தான் நஞ்சு இருக்கிறது. அதற்குக் காதில்லை, கண்ணே செவி நன்றாகப் பிளந்து அச்சுறுத்தும் வாய். அதன் படம் அழகுடையது. பல சிறுசிறு புள்ளிகள், மங்கிய நிறங்களும் உடையது, நஞ்சை உமிழும் அந்த நீண்ட பற்கள் வெள்ளையாக இருக்கின்றன. (நஞ்சுடைய பல் தூய வெள்ளை, வியப்புத்தான்) இப்படி உள்ள பாம்பை அணிந்த பரமன் (80). பாம்பின் இயற்கைத் தோற்றத்தை - அதன் தலை, முக அமைப்பை விலங்கியல் நூலார் ஒருவர் சிறுசிறு சொற்களால் உள்ளபடியே கற்பனை கலக்காமல் விரித்துரைப்பது போன்று அமைந்த பாடல் கருவூராரின் பாடும் திறனைக் காட்டும்.

திருக்கீழ்க்கோட்டூர்த் தலத்தைப் பாடும் கருவூரார் நகைப்பைத் தரும் இயற்கை நிகழ்வு ஒன்றைப் பதிவு செய்கிறார். கடலோரத்தில் உள்ளது இவ்வூர். கழிமுகங்களில் தாழைகள் செழித்து வளர்ந்து உள்ளன. அவற்றின் உச்சியில் வெண்ணிறப் பூக்கள் தோன்றுவது இயல்பாக நடப்பது. ஆனால் தாழையை ஒட்டியுள்ள நீர்நிலைகளில் துள்ளிக் குதித்த கெண்டை மீன்கள், இந்த வெண்ணிறப் பூக்களைக் கொக்குகள் என்று கருதி அஞ்சி ஓடி ஒளிகின்றன.

**கேதகை நிழலைக் குருகென மருவிக்**
**கெண்டைகள் வெருவு கீழ்க்கோட்டூர் (109)**

என்ற வரிகளில் இந்தக் காட்சியைக் காணலாம்.

தஞ்சை இராசராசேச்சுரம் பதிகத்தில் (தஞ்சை நகரத்தில் அழகிய தோற்றத்தைப் புனைந்துரைக்கிறார். தஞ்சைக்கு வடக்கில் வடவாறு ஓடுகிறது. அது காவிரியின் ஒரு கிளை ஆறு. வெள்ளப் பெருக்குக் காலங்களில், அந்த ஆற்றின் அருகேயுள்ள சோலைகளி

விருந்து பச்சைநிற இலைகளையும் வெண்ணிறப் பூக்களையும் நீரலைகள் அடித்து வருகின்றன. தொலைவிலிருந்தும் மாடங்களில் இருந்தும் பார்ப்போருக்குத் தஞ்சை நகரத்தைச் சுற்றிக் கைதேர்ந்த ஓவியன் ஒருவன் பச்சிலையும் வெண்பூவும் அமையுமாறு பளிங்கில் ஓவியம் வரைந்தது போலத் தோன்றுகிறதாம். அதைச் சந்தனங்கள் கமழும் மாடமாளிகைகளிலிருந்து கண்டு மகிழ்ந்து, மகளிர் யாழொலி எழுப்பியும் சிலம்பு இசைத்தும் இறைவனை வழிபடுகிறார்கள்.

அற்புதத் தமிழ்ச் சொல்லோவியம் தஞ்சையை நேரில் பார்த்தவர்களுக்கு - ஐந்து ஆறுகளும் சுற்றிச் செல்லும் அழகைப் பார்த்தவர்களுக்கு இதன் மெய்ம்மை புரியும்.

**வாழி அம்புஓதத்து அருகுபாய் விடயம்**
**வரிசையின் விளங்கலின் அடுத்த**
**சூழல்அம் பளிங்கின் பாசலர் ஆதிச்**
**சுடர்விடு மண்டலம் பொலியக்**
**காழகில் கமழு மாளிகை மகளிர்**
**கங்குல் வாய்அங்குலி கெழும**
**யாழொலி சிலம்பும் இஞ்சிசூழ் தஞ்சை** (165)

என்ற இப்பாடலைப் படித்து இதன் சுவையை உணர்வோம்.

இது ஒருபுறம். தஞ்சையில் பொய்கைகள் சுற்றிலும் நிறைய உள்ளன. அவை சுனைநீரால் தூயதாய், வெண்மையாகப் பொலிபவை. அவற்றை ஒட்டி வான்தொட எழுந்துள்ள மாடமாளிகைகள். அங்கு வாழும் பெண்கள் பலவித நறுமணப் பொருட்களைப் பூசி நீராடுவதால் பொய்கையின் சுனை நீரும் கலங்கிப் போய் நறுமணம் உள்ளதாக ஆகவிடுகின்றது (168). அந்தப் பொய்கையில் எத்தனை மரங்கள் உள்ளன. தேவதாரு, மந்தாரம், சண்பகம், மகிழம், சந்தனம் இவை எல்லாம் நெருங்க வளர்ந்து வெயில் கீழே விழாத வண்ணம் இருளை மண்ணில் விரித்தவாறு உள்ள அழகையும் பார்க்கத்தான் வேண்டும் (172).

திருவாலி அமுதனார் தரும் இயற்கைக் காட்சி வேறு வகையாக அமைகிறது. பசுக்கூட்டங்கள் வயலில் மேய்கின்றன. உயரமாகப் பரந்து பூத்துள்ள தாமரை மலர்களைத் தின்கின்றன. அவற்றின் கால்களில்பட்டு நசுங்கிய கரும்புத் தண்டுகள் இனியச் சாற்றைச் சிந்துகின்றன. அந்தச் சாறு, பாய்கின்ற நீர்போல வயலை நிறைக்கிறது. இந்தப் புதிய சுவை அங்கு ஏற்கெனவே திரிகின்ற கயல்மீன்களுக்கு மருட்சியை ஊட்டுகின்றன. அவை மடைகளில் ஏறிக் குதிக்கின்றன. இத்தகைய வளம் மிக்க தில்லைப்பதி என்று திருவாலியமுதனார் கற்பனை விரிகிறது (224). மருதநிலச் செழிப்பும் வயல் வளத்தின் கொழிப்பும் இயற்கைப் பாட்டாக ஆவதில் வியப்பில்லை.

மாலைப் பொழுதாகிய அந்தி வருகிறது. கூடவே அந்தியின் அழகாக நிலாவும் தோன்றியது. இரண்டும் ஒன்று சேர்ந்த எழிலின் ஈர்ப்பால் கடல் அலைகளும் பொங்கி ஆர்ப்பரித்தன என ஒரு வனப்பை அமுதனார் பாடுகிறார்.

ஒக்க ஒட்டந்த அந்தியும் மதியமும்
அலைகடல் ஒலியோடு (224)

என்றும் கற்பனை விரிகிறது.

தில்லைக்கருகில் ஓடும் ஆற்றின் பெயர் நிவா. பொன்னையும் மணியையும் அரித்துக் கொண்டுவரும் ஆறு. சந்தனம், அகில், மயில் தோகைகள், சாதிமரம் இவற்றையும் வாரிக்கொண்டு வரும் வளமானது எனவும் அமுதனார் பாடுகிறார்.

அளவால் குறைவே. ஆனாலும் இயற்கையைப் பாடும் அழகால் குறையவில்லை. திருவிசைப்பாவில் அதன் வெளிப்பாடு தெளிவாகவே உள்ளது. இணைத்துள்ள பட்டியல், திருவிசைப்பாவில் இடம்பெற்றுள்ள தாவர, விலங்குகள் பற்றிய குறிப்புகளைக் காட்டும்.

# 7. சொல்லாட்சி

> மிகவும் குறைவான பாடல்கள் கொண்ட இத் திருமுறையில் பயிலும் அழகான தொடர்களும் புதுச்சொற்களும் மிக அதிகம். இவை இந்த அளவில் பெருநூல்களிலும் காணப்படவில்லை.

என்று ஒரு கருத்தை மு. அருணாசலம் தெரிவிக்கிறார் (ப. 65). உண்மையான சொற்கள் திருவிசைப்பாவில் தமிழ் தனக்குத்தானே மகுடம் சூட்டிக் கொண்டுள்ளது எனச் சொன்னாலும் பிழையில்லை.

திருவாலி அமுதனார் தில்லையைக் குறிக்கும்போது "தென்னன் தமிழும் இசையும் கலந்த சிற்றம்பலம்" என்றே பாடுகிறார் (237). தென்பாண்டி நாட்டில் வளர்ந்த தமிழ்; பொதிகை மலையில் பிறந்து வைகை நதியில் வளர்ந்த தமிழ்; மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மதுரைச் சங்கத்தில் வளர்ந்த தமிழ் என்றெல்லாம் விரிவாகப் பொருள்கொள்ள வேண்டும். இது இயல் தமிழ் இதனோடு இசையும் கலந்த தெய்வத்தலம் தில்லை என்பது அழகிய குறிப்பு.

அந்த மேன்மைத் தமிழைத் திருவிசைப்பா அருளாளர்கள் தங்கள் கைவண்ணத்தால் மேலும் மெருகூட்டியுள்ளார்கள். சம்பந்தர் உள்ளிட்ட முன்னோர்கள் பாடித் துதித்த தமிழ் என்பதைச் சேந்தனார்.

> பாடலங்காரப் பரிசில் காசருளிப்
> பழுத்த செந்தமிழ் மலர்சூடி
> நீடலங்காரத்து எம்பெரு மக்கள் (57)

என அடக்கத்துடன் வணங்கிப் பாடுகிறார். 'பழுத்த செந்தமிழ்' என்பது பல நூறு ஆண்டுகளாக இலக்கியமும் இலக்கணமும் வாழ்வியலும் பக்தியுணர்வும் பெற்றுச் செழித்துப் பழுத்த தமிழ் என்று கொள்ள வேண்டும். அந்தச் செம்மையே அதன் சிறப்பும் ஆம்.

கருவூரார் ஒவ்வொரு பதிகத்தின் இறுதியிலும் தமிழின் சிறப்புகளைப் பட்டியலிடுகிறார். 'துறைவளர் தீந்தமிழ் மாலை' (90), அமுதம் ஊறிய தமிழ்மாலை (100), மணிநெடுமாலை (111), அமுதுறழ் தீந்தமிழ் மாலை (121), அருந்தமிழ்மாலை (132), சொல்மாலை (143), பாவணத் தமிழ்கள் (151), தருங்கரும்பனைய தீந்தமிழ் மாலை (182) என்றெல்லாம் விதந்து ஓதுகிறார். பாவாணர் தமிழ் என்பது புதிய ஆட்சி. வேணாட்டடிகள் இதற்குப் பொருள் கொள்வதுபோல' பாவார்ந்த தமிழ்மாலை' (214) என்கிறார். அமுதனாரே இன்னும் இதில்

ஈடுபட்டுப்போய் "இளையாள் மொழியின் தமிழ்" என்று (256) கனிந்து போகிறார்.

இப்படி எல்லாம் தமிழைத் தங்கள் மனக்கருத்து வெளிப்பாட்டிற்குக் கையாண்ட திருவிசைப்பா அருளாளர்கள் பாடல்களில் உள்ள சொல்லாட்சிகள் சிலவற்றைக் காணலாம்.

இந்நூலின் முதல்பாடல் 'ஒளிவளர் விளக்கே' என்று தொடங்குகிறது. இந்த அரிய தொடர் பிறநூல்களில் காண்பது அரிது. மங்கலத் தொடக்கமாக இது அமைந்துள்ளது. தில்லைப் பெருமானைப் பற்றிய பல உருவகங்கள், படிமங்கள் இந்த ஒரே பாடலில் பெய்து வைக்கப்பட்டுள்ளன. 'ஒளியை வளரச் செய்யும் விளக்கு' என்று இரண்டாம் வேற்றுமைத் தொகையை விரித்து ஒரு வகையில் பொருள் கொள்ளலாம். 'ஒளியால் வளர்க்கப்படும் விளக்கு' என மூன்றாம் வேற்றுமையாக விரித்தும் பொருள் கொள்ளலாம். முச்சுடர் வழிபாடு தமிழனுக்குப் புதிதில்லை. முக்சுடர்கள் சிவபெருமானே என்ற கருத்தும் பழையதே. ஆயின், அந்த முச்சுடர்கள் - விளக்குகள் - ஒளிவிடக் காரணமான ஒளியையும் தருகின்ற பெருவிளக்காக, பெருஞ்சோதியாக இறைவன் இருக்கிறான் என்பதே இத்தொடரின் ஆழ்பொருள். இதைச் 'சோதியுள் சோதி' எனத் திருமுறைகள் பாடும் (2).

தொடர்ந்து 'வெளிவளர் கூத்து' என ஒரு சொல்லாட்சி வருகிறது. ஒளியை வளர்க்கின்ற விளக்கு என முன்பு சொன்னது போல, வெளியை வளர்க்கின்ற கூத்து எனப் பொருள் கொள்ள லாகாது. வெளியில் வளரும் கூத்து என்றே ஏழன் தொகையாகப் பொருள் கொள்ளலாம். அண்டக்கோள்களும், உண்மைப் பெருக்கமான பேரண்டங்களும் விரிந்து பரவி விரவிக் கிடக்கும் தூய வெளியில் வளர்கின்ற கூத்து - என்றும் அது ஓய்வதில்லை. உயிருக்கு வளர்ச்சி போல இந்த ஞானக்கூத்துக்கும், தெய்வக் கூத்துக்கும் வளர்ச்சி உண்டு. இந்த அருளாடல் மண்ணின் சுவையை மறந்து, வானின் ஒளியையும் மறந்து, வெளியின் பரப்பை உள்ளே பெற்றவர்களுக்குத் தானாகக் கேட்கும் என்பது குறிப்பு (1).

பெரியதில் பெரியது, சிறியதில் சிறியது என்றேதான். தெய்வத்தியல்புகளைப் பாடுவது மரபு. ஆனால் திருமாளிகைத் தேவரின் தன்னனுபவத்தில் பெரியதுக்குள்ளேயே சிறியதையும் பார்க்கின்ற பேறு கிடைத்து விடுகிறது. 'பெருமையில் சிறுமை பெண்ணோடு ஆனாய் என் பிறப்பு இறப்பு அறுத்த பேரொளியே' (4) என அந்த அனுபவம் சொல்லாக மலர்கிறது.

இதன் தொடர்ச்சியாக இன்னொரு அழகுத்தொடர் வருகிறது. 'கருமையின் வெளியே' என்பதே அது. (4) மிகப்பெரிய

தத்துவத்தை உள்ளடக்கிய சொல்லாட்சி இது. இருள்பிழம்பாக இருக்கும் அண்டவெளியின் ஊடே ஒளிவெள்ளம் பாய்ச்சுபவன் இறைவன் துன்பக்கடலின் அலையில் இன்பத்தோணியாக வருபவன். பிரபஞ்சக் கருமையைத் தாண்டி, அதனுள்ளே வெண்மையாய் ஒளியாய்ச் சிறப்பவன் என்ற அனுபூதி அனுபவம் இங்குப் புலப்படுத்தப்படுகிறது.

'நீறணி பவளக்குன்றம்' என்பது ஆறாம் பாட்டில் வருகிறது. முதல் எட்டுத் திருமுறைகளில் இந்தச் சொல்லைக் காணோம். இதன் விரிந்த பொருளழகில் தோய்ந்த மக்கள், தமக்குப் பிறந்த குழந்தைகள் சிலருக்கு இதையும், இதுபோன்ற வேறு தொடர்களையும் (எடுத்த பாதம், மழலைச் சிலம்பு, தருணேந்து சேகரன் முதலியன) வைத்து மகிழ்ந்துள்ளனர். எந்த அளவு இத்தகைய தொடர்கள் சமுதாயத்தில் செல்வாக்குப் பெற்றிருந்தன என்பதற்கு இது சான்று.

சிவபரம்பொருள், குன்றம் போன்ற பெருமையுடையவன், பவளம்போல இளஞ்சிவப்பு நிறமுடையவன், அந்தப் பொன்னார் மேனிமீது வெண்ணீற்றைக் கீற்றுகளாகப் பூசியவன் என்ற சிந்தனையையும் உள்ளடக்கிய ஒரு தொடராய் 'நீறணி பவளக்குன்றம்' விளங்குகிறது.

தில்லை மன்றைப் பலரும் பலவாறு பாடியுள்ளனர். இந்த ஒன்பதாம் திருமுறையையே தில்லைத் திருமுறை எனச் சொல்லும் வழக்கமும் இருந்துள்ளது. அங்கு ஆடும் கூத்தனின் தோற்றம் அருள்புரிதல் பற்றியும் நிறையப் பாடல்கள் உள்ளன. அவற்றில் வருவனவற்றுள் அம்பலத்துள் நிறைதரு கருணா நிலையமே (11) என்று ஒரு தொடர். அருளின் செறிவாய், ஆணிவேராய், நிலைத்து நின்று வாழ்வு தருவதாய், முழுமையான நிறைவாய்ப் பெருமான் இருக்கிறான் என்று திருமாளிகைத் தேவர் பாட்டில் சொல் தெறித்துவிடுகிறது. 'கருணா நிலையம்' அழகுக் குறிப்பு.

ஒளிவளர் விளக்கு, வெளிவளர் கூத்து என்ற வரிசையில் கருவளர் மேகம், திருவளர் தெய்வம், உருவளர் இன்பச் சிலம்பு (13) என்ற தொடர்கள் விரைந்து வருகின்றன. கருமையான நிறத்தை வளர்க்கின்ற மேகம், மழையாகிய செல்வத்தைத் தன்னுள்ளே கொண்ட மேகம் என்ற விளக்கங்கள் இல்லாமலே படித்து அனுபவிக்கலாம். 'உருவளர் இன்பச் சிலம்பு' அற்புதமான தொடர். 'சித்தத்துள் தித்திக்கும் தேனாக இருக்கும் ஆடல்வல்லான், அந்தத் தேனை நாளும் நாளும் வளரச் செய்து எழில் கூட்டி இன்பம் தருகிறான் என்று விளக்கம் கொள்ளவேண்டும். அதுகூட முழுமையான பொருளைத் தருமா என்பது ஐயமே.

'முப்புரம் தீ விரித்த சிற்றம்பலக் கூத்தன்' (20) என்று ஒரு வரி. இதுவரை பாடியவர்கள் எல்லாம் முப்புரம் எரித்த என்றே பாடிவந்தனர். திருமாளிகைத் தேவர் மட்டும் 'விரித்த' என்று கையாண்டிருக்கிறார். சுருட்டப்பட்ட ஓலையை விரிக்கலாம். மடியை விரிக்கலாம். மூடிய கையை விரிக்கலாம். தீயை விரிக்க முடியுமா? முடியும். எல்லவற்றையும் பொசுக்குகின்ற அந்தப் பெருநெருப்பை இறைவன் மூடித் தன் கண்ணுள் வைத்திருந்தான். அதன் ஆற்றலை உணராத அசுரர்க்கு எப்படி உணர்த்துவது? கண்ணுள் - நெற்றிக் கண்ணுள் - இருந்த தீயை விரித்துத் தான் காட்டினான்; பெருமானின் சினம் முழுதும் 'விரித்த' என்ற ஒரு சொல்லால் வீறுபெறுகிறது.

'உறவாகிய யோகமும் போகமும் ஆய் உயிராளீ' என்ற பாடலில் யோகத்தையும் போகத்தையும் உறவாக்கும் அழகைக் காணலாம் (25). யோகம், போகம் என்பன தெரிந்த சொற்கள். இறைவனை அடையும் வழிகளில் ஒன்று யோகம் என்பதும், இறைவனருள் பெற்றபின் அடைவது போகம் என்றும் அடியார்கள் அறிந்த செய்திகள். ஆனால் அவற்றை 'உறவாகிய' என்ற ஒரு சொல்லால் இணைத்து இறைவனை உயிரை ஆளும் நாயகனாக, மாற்றும் வித்தையை இந்தப் பாடல் செய்யும் அழகே தனி.

'அருள்திரள் செம்பொற்சோதி', 'இருள்திரள் கண்டத்து எம்மான்' என வரும் தொடர்கள் (37) இறைவனின் பெருமைகளைப் புதிய நோக்கில் காட்டுகின்றன. சோதி, பொற்சுடர், அருள்சோதி, அருட்சுடர் என்பன வழக்கில் இருக்கும் சொற்கள். ஆனால் அருளே திரண்ட செம்பொன்சோதி என்பது புதிய சொல்லாட்சி. அதேபோல, இருள் திரண்ட கழுத்து என்பதும் அத்தகையதே.

அம்பலத்து அமுதாகிய கூத்தபிரான் திருநடம் நடக்கிறது. அவர் திருமேனியில் உள்ள அரவுகளும் அணிகளும் சேர்ந்து ஆடுகின்றன. இவற்றை இணைக்கும் தொடர் நயம்மிக்கது. 'ஆடரவு ஆட ஆடும் அம்பலத்தமுதே' (40) என்பது பாட்டு.

சேந்தனாரின் திருவீழிமிழலைப் பதிகத்தின் முதல் பாடலில் ஒவ்வொரு வரியும் சொற்பொழிவு உடையன. சிவனடியார்கள் நாளும் பாராயணம் செய்யும் பாட்டு இது. இறைவன், 'கற்றவர் விழுங்கும் கற்பகக் கனி', 'கருணைமா கடல்', 'மாணிக்கமலை', 'மனமணிவிளக்கு' என்பன அடுத்தடுத்து அமையும் அழகுத் தொடர்கள் இதே பதிகத்தின் 11ஆம் பாடல் (56) கவித்திறனின் உச்சியைத் (48) தொடுவது என்று சொல்வது பொருந்தும்.

இறைவன் உமையொரு பங்கன்: உயிர்களின்மீது அருளை வாரிச் சொரியும் தலைவன். இப்படி அருள்புரிவது எப்படி உள்ளது? அடியார்களின் உள்ளம் எல்லாம் நிறையும்படியும் திங்கள்

தன்னுடைய குளிர்ச்சியான கதிர்களை விரித்து வீசுவதுபோலவும் இருக்கிறது. இதை இரண்டே சொற்களில் 'உளம்கொள மதுரக்கதிர் விரித்து' என்று சேந்தனார் படிப்போர் உளம் கொள்ளுமாறு பாடுகிறார் (56). நிலாவின் ஒளிக்கதிர் குளிர்ச்சி பொருந்தியது என்பது சரி. இனிக்குமா என்ன? 'மதுரக்கதிர்' என்ற சொல்லாட்சி நிலவொளி தரும் இன்பத்தைச் சுட்டுகிறது.

'நிலாக்கோலச் செஞ்சடை', 'நலங்கிளர் கொன்றை' என்ற புனைவுகள் தொடர்கின்றன (60). பிறைசூடிய, பிறைவளர்சடை, பிறையோங்கு சடை என்றெல்லாம் பிறர் பாடச் சேந்தனார் நிலவை அழகாய்ச் சூடிய செஞ்சடை என்று இதில் மகிழ்ந்துபோய் - நிலவின் வெண்மையையும் சடையின் சிவந்த நிறத்தையும் ஒரு சேரக் கண்முன் நிறுத்துகிறார். அதேபோலக் கொன்றையைப் பற்றிய 'நலங்கிளர்' என்னும் அடைமொழியும் தெய்வ நலத்தை அடியார்க்கு நல்கும் என்னும் பொருளில் வந்துள்ளதும் நோக்கற்குரியது.

திருவிடைக்கழிப் பதிகத்தில் முருகனைக் குறிக்கும் சொற்கள் கவிஞனின் பாடும் திறனைக் காட்டுகின்றன. மலைமகள் மதலை (69), வேலுலாம் தடக்கை வேந்தன் (69), 'கனகக்குன்று' நல்லழகன் (70), கோனமர் கூத்தன் குல இளங்களிறு (72), கங்கைதன் சிறுவன் (73), பவளத்தின் குழவி (75), தாளாளன், பொன்மலைவில்லி தன் புதல்வன் (76) என்று தொழுதுகொண்டே போய்" இருண்ட பூங்குஞ்சிப் பிறைச்சடை முடி முக்கண்ணுடைக் கோமளக் கொழுந்து" என நிறைவு செய்கிறார் (78). இந்தச் சொற்கள் அருவி நீர்போலத் தாமே வந்து அழகு செய்கின்றன.

திருவிசைப்பாவில் நலம் தெரிக்கும் சொல்லாட்சிக்கு மிகச் சிறந்த சான்று கருவூர்த் தேவரின் முதல் பாடல் ஆகும் (80). படம் எடுத்து ஆடும் பாம்பைப் புனைந்துரைக்கும் அவருடைய சொற்கள், படிப்போர் நெஞ்சில் பாம்பின் உண்மை உருவத்தை அப்படியே பதியவைத்து அஞ்சவைக்கின்றன. முன்னரே இதுபற்றிக் குறிப்பிடப் பட்டது. பாட்டை மட்டும் படிக்கலாம்.

**கணம்விரி குடுமிச் செம்மணி கனவநாக்**
**கறையணல் கட்செவிப் பகுவாய்**
**பணம்விரி துத்திப் பொறிகொள் வெள்ளெயிற்றுப்**
**பாம்பு**

எட்டுவரிப் பாட்டில் நான்கு வரிகள் பாம்பைப் பற்றிய வருணனை. கருவூராரின் தமிழ் விளையாட்டு இது.

தில்லைவாழ் நான்மறை அந்தணர்கள் தங்கள் நாக்கின் செயல்பாட்டை முழுதும் திரட்டி, மந்திரங்கள் சொல்லி ஓமகுண்டம்

வளர்க்கிறார்கள். தம்முன் உள்ள குண்டத்தில் தூய, மணம் மிக்க நெய்யை நிறைய ஊற்றி வேள்வித் தீயை எரியவிடுகிறார்கள். சுடர்விட்டு ஒன்றன்பின் ஒன்றாகத் தீ கொழுந்துவிட்டு எரிகிறது. இதைக் கருவூரார் சொல்கிறார்.

> நாத்திரள் மறையோர்ந்து ஓமகுண்டத்து
> நறுநெயால் மறையவர் வளர்த்த
> தீத்திரள் அரும்பு (86)

நாத்திரள் மறை, தீத்திரள் அரும்பு என்பன 'அட்சரலட்சம்' பெறும் தொடர்கள்.

98ஆம் பாட்டு ஒரு சொல்லோவியம். இறைவனின் மேலான பண்புகளை நிரல்படத் தொகுத்துக் கூறும் கருவூரார் அதற்குப் பயன்படுத்தும் சொற்கள் அமைப்பு நயமிக்கதாக உள்ளது. இறைவன் மெய்யடியார்க்கு விளக்குப் போன்றவன். வளையலை அணிந்த உமா தேவியை இடப்பக்கம் கொண்டவர். எப்படிப்பட்ட வளையல்? இங்குதான் கற்பனையும் சொல்லாட்சியும் கலந்து பொலிகின்றன. எழுதுகோலால் எழுதப்பட்ட வரிகளைப் போன்ற வளையல், எழுதுகோல் வளையாள் என்று உமையன்னைகை படிப்போர் கண்முன்னால் தோன்றச் செய்கிறது.

திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலத்தில் கவிதையின் உயிர் மூச்சைப் படித்து வியப்பு மேலிடுகிறது. இறைவனை ஓயாது எண்ணத்தான் மனம் விரும்புகின்றது. சரி. அந்த மனம் எங்கே இருக்கிறது? எண்ண முடியவில்லையே! சிந்தையால் நினையில் சிந்தையும் காணேன் என்ற வரியில் பாட்டின் இழை ஓடுவதை உணர முடியும். குறிப்பாகச் 'சிந்தையும் காணேன்' என்பதில் உள்ள 'உம்' முற்றும்மை என்று கொண்டு படித்தால் புரியும். உள்ளம் ஆகிய எல்லாவற்றையும் எனப் பொருள் கொள்ள வேண்டும் (110).

கங்கைகொண்ட சோளேச்சுரத் தெய்வத்தைப் பற்றிய பாடல்களில் ஒவ்வொன்றும் மற்றதை விஞ்சுகின்றன. 'பெரிய நீ சிறிய என்னை' (133), மழலையஞ் சிலம்பு (134), அற்புதத் தெய்வம் (135), சைவம் விட்டிட்ட சடைகள் (136), மங்கையோடிருந்தே யோகு செய்வானை (143) என்பன போலத் தாமாகப் பீறிட்டு வெளிப்பட்டுள்ளன. "எவ்வளவு பெரியவன் நீ: உன்னுடைய பெருமையை மறந்துவிட்டு எவ்வளவு சிறியவன் நான்; என்னை ஒரு பொருட்டாக மதித்து அருள் செய்த பெருமையை என் சொல்வேன்?" என்பது உயிரின் ஏக்கத்தைக் காட்டும் "மழலை அம் சிலம்பு" என்பது தனியிடம் பெறும் அழகுத் தமிழ்த் தொடர். சிலம்பின் ஒலியைப் பலரும் பலவாறு புனைந்திருக்கிறார்கள். 'பாதச் சிலம்பொலி காட்டிய பரிசு' என்றே திருவாசகம் பாடுகிறது. ஆனால் அந்தச் சிலம்பு ஒலி

குழந்தையின் மழலை போன்றது என்றோ, அதன் ஒலி கேட்பதே 'இன்பம் செவிக்கு' என்றோ யாரும் இதுவரை பாடவில்லை. மக்கள் நெஞ்சங்களை ஈர்த்த தொடர்களில் இதுவும் ஒன்று. பல தமிழ்க் குடும்பங்களில் மழலைச் சிலம்பு என்றே பெண்மக்களுக்குப் பெயரிட்டிருக்கிறார்கள். அதேபோல நீறணி பவளக்குன்றம், தருணேந்து சேகரன் போன்றவை ஆடவர்க்கு இடப்பட்டு வழங்கியுள்ளன.

திருவாலியமுதனாரும் தில்லைப் பதிகத்தில் இந்தச் சிலம்பு பற்றிய சொல்லைப் பதிவு செய்துள்ளார். 'வாமத் தொழிலார் எடுத்த பாதம் மழலைச் சிலம்பார்க்க' என்று பாடல் வருகிறது (240) சமுதாய அளவில் அன்றே இந்தச் சொல் பரவலாக இருந்தது போலும்.

அற்புதத் தெய்வமாகிய கங்கை கொண்ட சோளேச்சுரத் தானைப் பாடும் கருவூராரின் பாடலுள் அண்டமும் அணுவும் ஒன்றாகும் வித்தையையும் காணமுடிகிறது.

**அண்டம் ஓர் அணுவாம் பெருமை கொண்டு அணு ஓர்**
**அண்டமாம் சிறுமை கொண்டு** (138)

இயங்கும் இயற்பியல் செய்தியை எவ்வளவு எளிதாகப் புலப்படுத்தி விடுகிறார். அறிவால் அளக்கமுடியாத பேரண்டம் ஓர் அணுவாகச் சிறுத்துவிடுகிறதாம். இது பெருமையாம்! சிறிதான அண்டத்துக்கா? பெரியரைத் தன்னுள் அடக்கிய அணுவுக்கா? சரி. அடுத்து 'அணு ஓர் அண்டமாம் சிறுமை கொண்டு' எனவும் வருகிறது. பெரியது சுருங்கலாம்: சிறியதாகலாம். ஆனால் சிறியதில் சிறியதாக இருக்கும் ஓர் அணு பேரண்டமாக மாறுமா என்ன? மாறும். அப்படி மாறுவது 'சிறுமையாம்' ஏன்? விரிந்துபோகும்போது செறிவும் நெகிழ்ந்து விடும் அல்லவா? இன்று வான்பௌதிகம் என்ற அறிவியல் பிரிவு பெரிதும் வளர்ந்துவிட்ட ஒன்று. அணுவுக்குள் அண்டத்தையும் அண்டத்துள் அணுவையும் காண அது முயன்று வருகிறது. கருவூரார்ப் பாட்டு இந்தச் சிற்றண்டமாகிய அணுவையும் பேரணுவாகிய அண்டத்தையும் அன்றே குறித்திருப்பது வியப்பே.

கருவூராரின் கற்பனை விரிந்துகொண்டே போகிறது. வையை ஆற்றின் அழகு, பரிபாடல், சிலப்பதிகாரம் தொட்டுப் பலராலும் பாடப்பட்டு வருவதே. ஆனால் திருவிசைப்பாவில் அது ஆற்றும் அரிய செயல் ஒன்று குறிப்பிடப்படுகிறது. மருது, அரசு, கோங்கு, அகில் என விலை மதிப்பற்ற மரங்களை நோக்கி வந்து ஆறாக மாறி மக்களை வாழ வைக்கிறதாம். அதனால் மலைகளின் வளம் குறைந்து விடாதா? குறைந்துவிடும் மக்களும் வாழவேண்டுமே!

**மருது அரசு கோங்கு அகில் மரம் சாடி**
**வரைவளம் கவர்ந்து இழி வையை** (144)

என்பது பாட்டு. இறைவன் பேரருள் மேலிருந்து கீழிறங்கி மக்களை நோக்கி ஓடிவரும் என்பது குறிப்பு.

இருதலை ஒரு நா என்று ஒரு தொடர் இதே பதிகத்தில் வருகிறது (146). 'இருதலைப் புள்ளின் ஒருயிராகி' என்பது திருக்கோவையார். ஆடல்வல்லானின் கையிலே ஒரு சிறு உடுக்கை. அதையும் பெருமானின் கையையும் இணைப்பது ஒரு கயிறு. அவனுடைய கை இருபுறமுமாக மாறிமாறித் திரும்பும்போது அதன் நுனியிலுள்ள நாக்குப் போன்ற அமைப்பு உடுக்கையின் இரு பக்கத்தையும் அடித்து ஒலி எழுப்புகிறது. இரண்டு தலைகள் உடுக்கைக்கு: ஒரு நாக்கு கயிற்றுக்கு அவ்வளவே. ஆனால் அசைக்கும் போது ஏற்படுத்தும் ஒலி அலைகடல் முழக்கம் போல் இருக்கிறது.

> **கரைகடல் ஒலியின் தமருகத்து அரையில்**
> **கையினில் கட்டிய கயிற்றால்**
> **இருதலை ஒரு நா இயங்க**

என்ற பாட்டைப் படியுங்கள். உடுக்கை ஒலி கேட்கும்.

சிவனடியாரைப் பலவாறு பெருமைப்படுத்திப் பாடுவது வழக்கம். தொண்டர், தொழும்பர், அடியார்க்கும் அடியார், அடிமை பூண்டோர் என்பன போல பல சொற்களைத் திருமுறைகளில் காணலாம். அடியார்ப் பெருமையைத் திருக்கூட்டச் சிறப்பு என்ற பகுதியில் திருத்தொண்டர் புராணம் விரிவாகவே பேசுகிறது. "ஈர அன்பினர் யாதும் குறைவிலர்'', 'வீடும் வேண்டா விறலின் விளங்கினார்' என்றெல்லாம் சேக்கிழார் பெருமான் பாடுகிறார். ஆனால் கருவூரார் புதிய ஒரு தொடரைப் பயன்படுத்துகிறார். மெய்யன்புடைய அடியவர்களுக்கு அவர் தரும் பட்டம் 'செம்மனக் கிழவோர்' (149), 'திருநின்ற செம்மை செம்மையாக் கொண்ட' அடியார்கள் நடுநிலை பிறழாத மனத்துக்குச் சொந்தக்காரர்கள் இன்பமும் துன்பமும் உயர்வும் தாழ்வும் எழுச்சியும் வீழ்ச்சியும் ஒன்றே எனக் கருதும் மனம் உடைய மெய்யன்பர்கள் என்ற திட்பத்தை இந்தப் பாட்டு தெளிவாக்கும் நயம் படித்துச் சுவைக்கத்தக்கது.

'சடை கெழுமகுடம்' (164) உடைய தஞ்சைப் பெருவுடையார் 'அருளுமாறு அருளி ஆளுமாறு ஆளவும்' வல்லவர் (167) என்றெல்லாம் பாடிவரும் கருவூரார் ஒரு பாடலில்

> **என் வயத்தினராம் கனியர் அத்தகு தீம் கரும்பர் (17)**

என்று குறிக்கிறார். கனியர், கரும்பர் இரண்டுமே புதிய சொல்லாட்சிகள். குறிப்பு வினைமுற்றுகளாகக் கொண்டு கனியைப் போலச் சுவையும் கரும்பைப்போல இனிமையும் உடையவராக இருக்கின்ற தெய்வம் எனப் பொருள் செய்ய வேண்டும். 'கணியர்' என்ற சொல் சங்ககாலம் தொட்டு வழங்கி வருவதே. 'கனியர்' என்பது திருவிசைப்பாவின் கொடை

திருவிடைமருதூர்க் கடவுள் தமக்கு அருள் செய்ததைப் பாடும் கருவூர்த்தேவருக்கு நள்ளிருளை - இரவு நேரத்து நள்ளிருளை - ஒரே சொல்லால் சொல்ல வேண்டும் என்று தோன்றியிருக்கும் போலும். 'தூங்கிருள் நடுநல்யாமத்து' என்ற தொடர் பீறிட்டு வருகிறது. இருள் தூங்குமா என்ன? அப்படியுள்ள நள்ளிரவு நடு யாமம் நல்லதா என்ன? ஆம் இரண்டும் நல்லனவே' பெருமான் அருள்கிடைத்ததால் நல்லது. எந்த இடையூறும் தராத நேரம் ஆகையால் நள்ளிரவும் நல்லிரவாகவே ஆகிவிட்டது. ஏன் எப்படி? அந்த நேரத்தில் இருள் தூங்கிக் கொண்டிருந்ததே! அற்புதமான உருவகம் இது (175). ஆங்கிலக் கவிதையில் இப்படி ஒரு தொடர் வந்திருந்தால் - Sleeping darkness - என்று சொல்லி உலகளாவப் புகழப்பட்டிருக்கும். தேவாரம் படிக்கும் சிவனடியார் கூடத் திருவிசைப்பாவைத் திரும்பிப்பார்ப்பது கூட இல்லையே என்ன செய்ய? 'தூங்கிருள்' என்ற ஐந்தெழுத்தைத் தங்கத் தராசில் நிறுத்துத் தராசுடன் சேர்த்துப் பரிசு தரவேண்டும்.

காடநம்பிக்குத் தில்லையில் இருக்கும் உமைநங்கையின் கண்களைப் பாடவேண்டும். மலர்க்கண், குவளைக்கண், கயல்கண் என்பனவெல்லாம் பழையவை. புதிய சொல் ஒன்று வேண்டும். 'மானின் நேர்விழி' என்று சம்பந்தரும் பாடியாயிற்று. தானாக ஒரு தொடர் விழுகிறது. 'அம்புந்து கண்ணாள்' (188) புதிய சொல்லாட்சி. அம்பு விரைவாகச் செலுத்தப்படுவது போலத் தன் அருட்பார்வையை உயிர்கள் மீது வீசும் கண்களை உடைய பிராட்டி என விளக்கம் பெற வேண்டும். 'அம்புந்து கண்' என்றும் இருக்கும் தொடர்.

திருச்சிற்றம்பலத்துள் என்னென்ன உண்டு? கூத்தப் பெருமானின் ஆடலுடன் சேர்ந்து என்னவெல்லாம் அங்கு இருக்கும்? 'ஏழிசையாய் இசைப்பயனாய்' இருக்கும் ஈசனிடத்தில் 'தென்னன் தமிழும் இசையும்' சேர்ந்தே இருக்குமாம். திருவாலி அமுதனார் பெற்ற காட்சி இது (237), தமிழ் வேறு: இசை வேறு அல்ல. தமிழ் வேறு பெருமான் வேறல்ல: இசைவேறு இறைவன் வேறல்ல. எல்லாம் இருக்கும் திருச்சிற்றம்பலம் என்று பாடுகிறார்.

"தென்னன் தமிழும் இசையும் கலந்த சிற்றம்பலம்" என்பது ஓர் அழகுத் தொடர்.

தமிழுக்கு எத்தனையோ அடைமொழிகள் தீந்தமிழ், செந்தமிழ், திருநெறிய தமிழ், இன்தமிழ் என்பன போல நூற்றுக்கும் மேற்பட்ட தொடர்களைச் சம்பந்தப் பெருமான் கையாண்டு இருக்கிறார். அத்தனையும் தமிழுக்கு இருக்கும் மேன்மைகளைப் போற்றுபவை. ஆனால் திருவாலி அமுதனார் புதியதொரு அடைமொழி தருகிறார். "இளையாள் மொழியின் தமிழ்" (256) என்பது அது. இளம்பெண் பேசும் தமிழ் என்று நேர்ப்பொருளாகக்

கொண்டாலும், என்றுமே இளமையுடன் இருக்கிற மொழி என்ற உள்ளடக்கத்தையும் இந்தச் சொல்லில் உணர்ந்து போற்றலாம்.

சொல்லாட்சி பற்றிய இந்தப் பகுதியில் திருவிசைப்பாவில் வரும் அந்தாதி அமைப்புப் பற்றி ஒன்று சொல்லவேண்டும். ஒரு பாட்டின் ஈற்றுச் சொல் அல்லது எழுத்து அடுத்த பாட்டின் முதலில் வருவது பெரும்பான்மை வழக்கம். நிறைய நூல்களும் பதிகங்களும் அமைந்துள்ளமை ஓரளவு தெரிந்ததே. ஒன்பதாம் திருமுறையுள் ஆறு பதிகங்கள் (பதி. 6.7.23.25.27.28) இப்படி வருகின்றன. ஆனால் புருடோத்தமநம்பி பாடிய 26ஆம் பதிகம் சற்று வேறுபட்டுள்ளது. ஒரு பாட்டின் கடைசி வரி அடுத்த பாட்டின் முதல்வரியாக, ஒரு சொல்கூட மாறாமல் அப்படியே வருகிறது. இது கவிஞரின் புலமைத் திறத்தை மட்டுமல்ல, தமிழின் சொல்லமைப்பையும் காட்டுகிறது. **'ஆவியின் பரம் என்றன் ஆதரவே'** என்று முடியும் முதல் பாட்டின் கடைசி வரி, 'ஆவியின் பரம் என்றன் ஆதரவும்' என்று அடுத்த பாட்டின் தொடக்கமாய்த் திரும்புகிறது. இதுபோலவே பதிகம் முழுதும் சுவைக்கத்தக்க பாடல்கள் உள்ளன.

மு. அருணாசலம் ஒன்பதாம் திருமுறையில் காணப்படும் சொல்லமைதி, தொடர்கள் பற்றிக் கூறியது போற்றத்தக்கது. அவை இங்கு அப்படியே தரப்படுகின்றன.

> ***மிகவும் குறைவான பாடல்கள் கொண்ட இத் திருமுறையில் பயிலும் அழகான தொடர்களும் புதுச் சொற்களும் மிகவும் அதிகம். இவை இந்த அளவில் பெருநூல்களிலும் காணப்படவில்லை. இறைவனைக் குறிப்பிடும் தொடர்களில் சில:***
>
> ***அருள்புரி வள்ளல் : அரும்புனல் அலமரும் சடையினான் அம்பலத்தாடி : ஆலநிழல்பட்டன்: கனக நற்றூண் கற்றவர் விழுங்கும் கற்பகக் கனி: குலாத்தில்லை அம்பலக் கூத்தன் : கொண்டல் அம் கண்டத்து எம் குருமணி : சிவலோக நாயகச் செல்வன் தருணேந்து/ சேகரன்: சசிகுலாம் மவுலி: கருணா நிலயம் : தான்தோன்றி நம்பி; தில்லை நாயனார்; நீறணி பவளக்குன்றம்: நெற்றிக் கண்ணுடையதோர் கரும்பு: புராண சிந்தாமணி: மலைமகள் மணவாள நம்பி: வளர்முக்கண் செம்பளிங்கு (ப. 66)***

இத்திருமுறையுள் பயிலும் அருஞ்சொற்கள் சில:

அமரித்து (பொருந்தி); அலச (வருந்த); கவந்திகை (போர்வை); குலக (குழாமாக); இழை (ஒளி); கித்துதல் (விளையாட்டு); தொண்டு (கற்றை); நீவி (சோர்வு); பிது (பெருமை); பிழம்பு (தவறு); மொழுப்பு

(முடி); ஏம்பலித்தல் (விரும்புதல்); துகுக்கும் (கட்டும்); மேய்தல் (வேய்தல்); என்பித்தாய் (வேறு சொல்வித்தாய்)

மேலே சொல்லப்பட்ட தொடர்கள், சொற்கள் போன்ற இயல்புகளை ஒரு தொகுப்பாகக் கருதும்போது ஓர் எண்ணம் எழாமல் இராது. சிறப்பான சொற்களும் தொடர்களும் இச்சிறு நூலில் உள்ள அளவு வேறு எங்கும் காணவில்லை.

இவை மு. அருணாசலம் அவர்கள் கூற்று. அவர் கண்ணில் பட்டவை இச்சொற்கள். இவையல்லாமல் வேறு பல சொற்களும் உள்ளன. அசிக்க - பிறர் நகைக்கும்படி (5) அம்மலோதி (அழகிய இருண்ட கூந்தல் (282), அழிபொசி வனப்பு (170), அழலை யாழ் புருவம் (அழலில் ஆழும் உருவம்) (179), அளவறுத்தார் (26), தழல் பிழம்பு (166), வான்கமலம் (224), வான் கரும்பு (256), வான்சுடர் (199) போன்று இன்னும் பல சொற்கள் பயிலப்பட்டிருக்கின்றன.

இவையும் இவைபோன்ற இன்னும் பலவும் படித்துத் துய்த்தற்கு உரியன என்பதில் ஐயமில்லை,

ஆனாலும் திருமாளிகைத் தேவருடைய நான்காம் பதிகத்தில் உள்ள பாடல்களின் 3ஆம் 4ஆம் வரிகள் பிற சமயத்தவரைத் தாக்கிக் கடுமையாகப் பாடப்பட்டுள்ளன. தரத்தில் குறைந்த சொற்களும் அங்கு இருப்பது திருமுறைகளின் செம்மையைத் தாழ்த்துவதாகவே உள்ளது என்பதைக் குறிப்பிடவே வேண்டும். 'ஒளிவளர் விளக்கே', 'உறவாகிய யோகமும் போகமும்', 'நீறணி பவளக்குன்றம்' என்ற அற்புதமான தொடர்களை - காலத்தை வென்று வாழும் தெய்வ ஒண்தீந்தமிழில் எழுதிய அதே கையா, பிணங்கள், பேய்கள், சிஞுக்கர், பிசுக்கர், கயவர், பேடர் என்றெல்லாம் எழுதியிருக்கும் என்ற ஐயம் மேலிடுகிறது. மு. அருணாசலத்துக்கும் இது வருந்தத்தக்க செய்தியாக இருந்திருக்கிறது. அவர் எழுதுகிறார்: இந்தப் பதிகப் பாடல்களில்,

> பின் இரண்டு அடிகளும் பழிப்பாகவே உள்ளன. பழிப்பதற்காகத் தமிழில் உள்ள வசவுச் சொற்கள் அனைத்தையுமே ஆசிரியர் இங்குப் பயன்படுத்தி விட்டார் என்று சொல்லலாம்...... பொதுவாக இந்த அடிகளில் உள்ளபடி வசவைப் பார்க்கும் போது, முதல் மூன்று பதிகங்களையும் பாடிய திருமாளிகைத் தேவர் இவற்றைப் பாடியிருப் பாரா என்ற ஐயம்கூட நமக்கு எழலாம். (70)

உண்மைதான்; பாடல்களின் போக்கு அப்படி. இந்தச் சிறு குறை தவிர, திருவிசைப்பா, சொல்லாட்சியில் ஈடு இணையற்று விளங்குவது கண்கூடு.

# 8. உவமைகள் / உருவகங்கள்

திருவிசைப்பாவில் பாடல்களின் எண்ணிக்கை குறைவு ஆகையால் விரிவாகப் பாடுவதற்கான வாய்ப்புகள் கவிஞர்களுக்கும் கிடைக்கவில்லை. முன்னரே சொன்னதுபோலத் தீர்த்தம், தலம், மூர்த்தி என்று மூன்று பிரிவுகளிலும் சில உவமைகளே பயின்றுள்ளன. உருவகங்கள் சற்று அதிகமாகவும் காணப்படுகின்றன. வினை, பயன், மெய், உரு என்ற நான்கின் நிலைக்களன்களிலிருந்து உவமைகள் தோன்றும் என்ற இலக்கணம் தெரிந்த ஒன்று தான். இவையல்லாமல் 'காப்பிய உவமை' என்ற ஒன்றைத் திறனாய்வாளர்கள் சொல்கிறார்கள். உயர்ந்த பொருள் ஒன்றின் மேன்மைகளை விளக்குவதற்காக உவமைகளைப் பயன்படுத்தும்போது, அந்த உவமைகளும் மேன்மை உடையனவாக இருக்கவேண்டும் என்பது அதன் அடிப்படை. திருமுறைகளிலும் பிற பக்தி இலக்கியங்களிலும் உவமை, உருவகங்களையும் இந்த நோக்கில்தான் காண வேண்டும்.

ஒன்பதாம் திருமுறையாகிய திருவிசைப்பாவில் உவமைகள் குறைவே. ஆனால் உருவகங்கள் பல. இருப்பவற்றுள் சிலவற்றின் அழகை இப்பகுதி கூறுகிறது.

முதற்பாட்டிலேயே இந்தக் கவிதை வனப்பு நிறைவு பெற்ற நிலையைக் காண்கிறோம். ஒளிவளர் விளக்கு, மணிக்குன்று சித்தத்துள் தித்திக்கும் தேன், ஆனந்தக்கனி என்று அடுக்கடுக்காகத் தடை ஏதுமில்லாமல் உருவகங்கள் உருக்கொண்டு எழுகின்றன. தில்லைக் கூத்தனின் பரம்பொருள் தன்மைகள் ஒவ்வொன்றிலும் விஞ்சி விஞ்சி ஓவியமாகின்றன. அழிவிலாத தெய்வத்தன்மையை 'உவப்பிலா ஒன்றாக' உருவகம் செய்வதில் திருமாளிகைத்தேவர் பெரிய வெற்றியே பெற்றுவிடுகிறார். சோதியுள் சோதியாய் (2), நீறணி பவளக்குன்றமாய் (6), நெருப்பாய் (6) கனகநல் தூணாய் (7), கற்பகக் கொழுந்தாய் (7), படிமங்கள் தாமாக வந்துவிடுகின்றன. 'மகேந்திர மாமலைமேல் இருந்த தேனே' (25) என அழைப்பதில் ஓர் நெருங்கிய உறவு ஏற்படுகிறது. மலைமேல் இருந்த தேனைச் சுவைத்து மலைத்தவர் திருமாளிகைத் தேவர். அது இன்னொரு பாட்டில் மலைமேல் இருந்த மருந்தாகி (26) பிறவிப்பிணி தீர்க்கும் அருமையையும் சுட்டுகிறார்.

ஆடல் வல்லானின் ஒளிமிக்க பொன்னுடலுக்கு ஓர் உவமை சொல்ல வேண்டும். காய்கதிர்ச் செல்வன் போல என்று எளிதாகக் குறிக்கலாம். ஆனால் ஒரு சூரியனின் ஒளிக்கதிர் போதுமா? ஒரு இலட்சம் கதிரவன்களை ஒன்றோடு ஒன்று நெருக்கமாக எரிய வைத்தால் எப்படி ஒளிமிக்கதாகவும், மிகமிகச் செம்மை நிறம்

உடையதாகவும் ஒரு தோற்றம் உண்டாகுமோ அதுபோலச் சிவந்த ஒளியுடைய திருமேனி எனத் திருமாளிகைத் தேவர் பாடுகிறார்.

**செக்கர் ஒத்து இரவி நூறாயிரம்**
**திரள் ஒப்பாம் தில்லைச்**
**சொக்கர்** *(42)*

என்ற வரிகளில் படரொளிப் பரப்பி நின்ற திருமேனியை உணரலாம்.

செல்வம் நிலையாமை, இளமை நிலையாமை, வாழ்வு நிலையாமை என்பன பாடுபொருள்களாகச் சங்க இலக்கியம் தொட்டே இருந்துவருவனவே. திருமுறைப் பாடல்களில் இவை சற்று அதிகமாகவே காணப்படுவதும் இயற்கையே. அவ்வகையில் செல்வம் நிலையாமைக்கு உவமை ஒன்றைச் சேந்தனார் பயன்படுத்துகிறார்.

கனவு காண்பது இயல்பு. நிறைவேறாத எண்ணங்களே கனவு களாகின்றன என்பது ஒரு சாரார் கொள்கை. அது பற்றிய ஆய்வு ஒரு புறம் இருக்கக் கனவில் காண்பது எல்லாம், அது முடிந்தவுடன் தாமும் மறைந்துபோகும் என்பது யாவரும் தெரிந்த செய்தி. வாழ்வில் ஒருவர் பெற்றிருக்கின்ற செல்வங்கள் அவர் கூட வருமா என்ன? கனவு கலைவதுபோல இவையும் போய்விடும் என்கிறார் சேந்தனார். 'அக்கனா அனைய செல்வமே சிந்தித்து' (51) என்பது பாடல் வரி. அகரச் சுட்டு பல இடங்களில் இழிவுச் சிறப்பாக வருவது மரபு. 'அக்கோவால் மொத்துண்டு' எனப் பாடுவார் மாணிக்கவாசகர்.

திருவிடைக்கழிப் பதிகத்தில் முருகனைப் போற்றும் சேந்தனார், 'கனகக்குன்றென வரும் கள்வன்' என்று குறிக்கிறார் (70). கனகக்குன்று பொன்மலையாகிய மேரு. அது நடந்துவருவதுபோல, அழகாய், சிவப்பாய், உயர்ந்து நிமிர்ந்து முருகன் வருகிறான் என்பது நயம். அதில் உட்பொருள் இன்னும் நயமுடையது. ஒரு கள்வன் இப்படி எல்லாரும் காண்பதுபோலத் தன் உருவை மறைக்காமல் வருவானா என்ன? இவன் வருகிறான் என்பதே சுவையுடையது.

71ஆம் பாடல் புதியதொரு உவமையைப் படைத்து இருக்கிறது. முருகப்பெருமான் அடியார்களைக் காக்கின்ற கடவுள் என்று பாடுவது மரபு. எவ்வாறு காக்கிறான் என்பதில் சேந்தனார் ஒரு புதுமை காட்டுகிறார். 'காவல் நற்சேனை என்னக் காப்பவன்' என்பது உவமை. 'காவலைச் செய்யும் நல்லசேனை போல' என்பது உவமை. 'நற்சேனை' என்ற செல் ஆழ்ந்த பொருள் உடையது. மன்னனைப் பாதுகாக்கச் சுற்றி நிற்கும் மெய்காப்பாளர்கள் எவ்வாறு காப்பார்களோ அதுபோல என்று பொருள்படும். தமது உயிரையும் பெரிதாகக் காக்காமல் மக்கள் நலத்தையும், மன்னன் நலத்தையும் தம் உயிரீந்தாவது காக்கும் சேனைபோலப் பரமன் மகன் அடியாரைக் காப்பான் என்பதே செய்தி.

கருவூரார் பாடல்கள் மிகவும் செறிவானவை. சித்தராக இருந்து உள்ளே பெற்ற ஆன்மிக அனுபவங்களை அவர் பாடல்கள் காட்டுகின்றன. தில்லைப் பதிகத்தில் ஒரு பாடலில் நல்ல உருவகம் ஒன்று அமைந்துள்ளது.

> *இந்த பிறவிக் கடலை நீந்திவிடலாம் என்று ஏழை யாகவே நான் முயன்று கொண்டிருக்கிறேன். எனக்கு வேறு யாருடைய துணையும் இல்லை. என்னுடன் பிறந்த ஐவர் இருக்கிறார்கள். அவர்கள் உதவி செய்வார்கள் என்ற நம்பிக்கை முன்பு எனக்கு இருந்தது. இப்பொழுது அதை இழந்து விட்டேன். உதவி செய்வதற்கு மாறாக அவர்கள் பகைவர்கள் போலத் தீமையே செய்கிறார்கள். இனி நான் யார் துணை நாடுவேன்? அந்த ஐவர் யார் என்றா கேட்கிறீர்கள்? வெறியாட்டம் போடும் ஐம்பொறிகள் தாம். வேறு யார்?*

என்று ஐம்பொறிகளையும் பகைவர்களாக உருவகம் செய்த பாடல்:

> *இவ் அரும்பிறவிப் பௌவநீர் நீந்தும்*
> *ஏழையேற்கு என்னுடன் பிறந்த*
> *ஐவரும் பகையே யார் துணை? (81)*

உவமை, உருவகம் இவை மயங்கிவருவதும் உனக்கு அப்போது உவமேயப் பொருளும் உவமானப் பொருளும் இடம் மாறுவதும் இயல்புதான். மலர் முகம் என்பது உவமைத்தொடர். முகம் மலர் என்பது உருவகம். ‘முகம் போலும் மலர்’ என்று வருவது மயங்கி வருவது, இப்படி ஒரு அமைப்பு கருவூரார் பாடலில் அமைந்திருக்கிறது.

> *வாயின் நேர் அரும்பு மணிமுருக்கு அலர*
> *வளரிளம் சோலை மாந்தளிர் செந்*
> *தீயின்நேர் அரும்பு (82)*

முருக்கமலர் என்று சொல்லப்படும் கலியாண முருங்கையின் பூ செக்கச் சிவந்த நிறம் உடையது. அதைப் பெண்ணின் வாய்க்கு உவமையாக்குவர் புலவர். ஆனால் இங்கு அது மாறிப் பெண்ணின் வாய்போன்ற சிவந்த முருக்கு மலர்கிறது என நயம்படப் பாடுகிறார். அதேபோலத் தொடர்கின்ற உவமையும் புதுநயம் தருவதே. மாமரத்தின் தளிர்கள் அரும்பும்போது சிறிய சிறிய நெருப்புச் சுடர்கள் பச்சிலைகளுக்கு நடுவே பொலிவது போல் இருக்கும். அதை மாற்றி இங்குத் ‘தீச்சுடர் ஒத்த அரும்பு’ எனப் புதுமையாகப் பாடுகிறார்.

**இறைவன் எவ்வளவு சுட்டிக்காட்டியும் எனக்கு அறிவு தெளியவில்லை. சேற்றிலே கிடந்து அதன் சுகத்தையே அனுபவிக்கும் எருமைக்கு எந்த வகையில் உணர்த்தினாலும் அது அந்தச் சுகத்தை விடாது. கரிய நிறமும் பெரிய உருவமும் உடைய அந்த எருமை போலவே நானும் இருக்கிறேன். என் அறியாமை அந்தக் கரிய நிறம்; அந்தப் பெரிய உரு என்னுடைய செருக்கு. ஆனால் ஏன் இறைவன் என்மீது அருள்காட்டி ஆளவும் வல்லவர்.**

என்ற செய்தியைக் கருவூரார்,

**மைக்கடா அனைய என்னை ஆள்விரும்பி**
**. . . . . . . அருளே புரியவும் வல்லரே**

என்று பாடுகிறார்.

திருமுகத்தலைப் பதிகத்தில் ஓர் அற்புதமான உவமை வருகிறது. 'ஓதியுணர்ந்தும் பிறர்க்குரைத்தும் தானடங்காப்' பேதைகளைத் திருவள்ளுவர் சாடுகிறார். 'நிற்க அதற்குத் தக' என்பதும் அவர் இட்ட கட்டளையே. ஆனால் எத்தனை பேர் இப்படி, கற்ற நூல்கள் காட்டும் நல்வழியில் தோய்ந்து நிற்கிறார்கள்? சிலர் என்று கூடச் சொல்லமுடியவில்லை. இப்படி கற்ற பிறகும், மெய்ப் பொருளை உணர்த்தும் நூல்களைப் படித்தும் அதில் தோயாதவர்கள் எப்படிப்பட்டவர்கள்? கருவூரார் ஓர் உவமை கூறுகிறார். கிடை எனச் சொல்லப்படும் தக்கை ஒரு தாவரத் தண்டு. நெட்டி என்றும் இதைக் கூறுவதுண்டு. எத்தனை நாட்கள் நீரில் கிடந்தாலும் அது நீரில் நனையவும் நனையாது, நீரை இழுத்துக் கொள்ளவும் செய்யாது. கற்றவர் நிலையும் - மெய்ந்நூலைப் படித்தும் அதன்படி வாழாதவர்கள் நிலையும் - அதுவே.

**கேடிலா மெய்ந்நூல் கெழுமியும் செழுநீர்க்**
**கிடையனார் உடைய என்நெஞ்சு** *(115)*

தக்கை கிடக்கும் இடம் சாதாரணச் சேற்றுநீர் அல்ல: தூய பளிங்கு போன்ற நறுநீர். அதில் கிடந்தும் நனையாதது தக்கை. அறிஞர் படிக்கும் நூல் சாதாரணமானது அல்ல. பிறவித்துன்பமாகிய கேட்டை நீக்கும்; வழிகாட்டும் மெய்ந்நூல். தக்கை நீரில் மூழ்குவது போல 'இவர்களும்' இந்த நூலில் ஆழ்ந்து போகிறார்கள். 'கெழுமி' என்பது இதை உணர்த்தும் சொல். அழகான இந்த உவமை புதிய படைப்பு.

அடுத்த பாட்டில் இன்னொரு உவமை தொடர்கிறது. இரண்டு வகையான மண் பாத்திரங்களைத் திருமந்திரம் உருவகங்களாகப் படைத்து உயர்ந்த கருத்தை உணர்த்துகிறது. 'மண்ஒன்று கண்டீர் இருவகைப் பாத்திரம்' (142) என்று தொடங்கும் பாடல் அது.

> **ஒரே வகை மண்ணில் செய்யப்பட்ட இரண்டு பாத்திரங்கள். அன்று செய்தவுடன் நெருப்பில் சுடப்பட்டு உறுதியாகத் 'திண்' என்று இருந்தது. மற்றது சுடப்படாமல் தீவினைக்கு ஆளானது. மழை பெய்தவுடன் அது கரைந்து மீண்டும் மண் ஆனது.**

இது தான் செய்தி.

மண், நீர், நெருப்பு என்ற மூன்று பொருள்கள் நீரால் பிசையப் பட்ட மண்: அதனால் செய்யப்பட்ட பாத்திரங்கள் ஒன்றைச் சுடாமல் பச்சையாகவே வைத்திருக்கிறார்கள். இன்னொன்றை நெருப்பில் வேக வைத்துச் சுடுகிறார்கள். நெருப்பில் சுடுகிறதே - வேதகம் செய்கிறதே - என அஞ்சினால், பின்னால் நீரில் கரையாமல் நிற்க முடியுமா? நான் மண். வாழ்வும் உலகமும் நீர்போல என்னைப் பிசைகின்றன. பெருமானே, நீ தான் நெருப்பாக இருந்து வேகவைத்துச் சுடுகிறாய். உன்னுடைய இந்த அருள் கிடைப்பதற்கு முன்னால் நான் நீரில் கரைந்து கரைந்து போனேன். இப்பொழுது நான் எதனாலும் கரைவதில்லை. என் மனம் நெகிழுமாறு உள்ளே வந்து வேதகம் செய்துவிட்டாயே என்று கருவூரார் பாடுகிறார். அற்புதமான உவமையும், உவமேயமும் முழுமையாகப் பொருந்திக் கவிதையின் செறிவையும் பொருள் விளக்கும் திறனையும் வெளிப்படுத்தும் பாட்டு இவ்வளவு விளக்கமாகத் திருமந்திரத்தில் இல்லையென்றாலும் அதனை எதிரொலிக்கும் பாடல் இது.

**புனல்பட உருகி மண்டழல் வெதும்பிப்**
**பூம்புனல் பொதிந்து உயிரளிக்கும்**
**வினைபடு நிறைபோல் நிறைந்த வேதகத்து என்**
**மனம்நெக மகிழ்ந்த பேரொளியே (117)**

இராமபிரானின் திருவழகைப் பாடும் கம்பர், 'மையோ மரகதமோ மறிகடலோ மழை முகிலோ' எனப்பாடி மயங்கியதும், படிப்போரை மயக்கியதும் தமிழ் அறிந்த செய்தி. கம்பருக்கு முன்பே இப்படி இதுவோ அதுவோ, இந்த நிறமா அந்த நிறமா என்ற மயக்கம் வரவழைக்கும் பாடல் திருவிசைப்பாவில் உள்ளது.

திருமுகத்தலை இறைவனின் திருமேனியில் எத்தனை நிறங்கள் உள்ளன? பல. விரிகடலில் பொங்கி எழுந்து வந்த பெருநஞ்சைத் திரட்டி வைத்தது போன்ற அந்தக் கருப்பு கழுத்தில்; வெளிர் வெள்ளைத் தூய சந்தனத்தை உடலில் பூசிய பின் அது காய்ந்து தரும் வெண்மை ஒருபுறம்; இயல்பாகவே இருக்கும் செந்நிற ஒளி உடம்பில்; இப்படி ஒரு கலப்பு. இவை உவமேய உறுப்புகள் இவை எல்லாமே பெருமானின் உடம்பில் இருப்பனவே. என்ன உவமானம் கூறலாம்? கரியைக் கூறலாம். கருப்பாக இருக்கும் அது செந்தீப்பட்டு எரிகிறது. பொன்னிறச் சுடர்கள் எழுகின்றன. எரிந்து முடிந்த பின் வெண்ணிற நீறு படிகிறது. கருப்பு - சிவப்பு - வெண்மை பொன்னிறம் எல்லாம் கரியினுள்ளும் இருக்கின்றது. பெருமானின் திருமேனியிலும் இருக்கின்றது. பாடல் சிறக்கிறது.

விரியும் நீராலக் கருமையின் சாந்தின்
வெண்மையும் செந்நிறத்து ஒளியும்
கரியும் நீறாடும் கனலும் ஒத்து ஒளிரும்
கழுத்தில் (118)

எல்லோருக்கும் தெரிந்த ஒரு சாதாரண பொருளை - கரியை - உவமையாகக் கொண்டு சிவபெருமானின் அழகை, அழகான கரிய, சிவந்த, பொன்னிற, வெண்ணிறக் கழுத்தை விளக்கும் அற்புதம் சுவைக்கத்தக்கது.

ஒரே பொருள் இரண்டுவிதத் தன்மைகளுடன் இருக்க முடியுமா? இருக்கிறதே. எங்கும் ஒழிவற நிறைந்து நிற்கும் பரம்பொருள் வஞ்சகர் நெஞ்சுக்குள் புகாமல் ஒளிந்து விடுவர். ஆனால் அவரையே நம்பி இருக்கும் அன்பர்கள் நெஞ்சில் பேரொளியோடு காட்சி தருவார். இந்த இரண்டு இறைமைப் பண்புகளுக்கும் ஏற்றதாகக் கருவூரார் தஞ்சை இராசராசேச்சுரப் பதிகத்தில் ஒரு பாடலைப் பாடியுள்ளார். சூரியன் ஒன்றுதான். நல்ல கரிய மேகம் வந்தால் அதற்குள் அது மறைந்துவிடுகிறது. நல்ல இளவேனில் பருவத்தில் சுடர்மிக்கதாய் ஒளியைத் தண் என வீசுகிறது. இறைவன் வஞ்சக நெஞ்சில் மறைவதுபோல, கதிரவன் மேகத்துள் மறைவது; அடியார் நெஞ்சில் பரமன் அருளொளி பாய்ச்சுவது போன்றது. வேனில்காலப் பகலோன் என அற்புதமாகக் கூறுகிறார்.

**மங்குல ஆழ் போதில் ஒழிவற நிறைந்து**
**வழக்கம் நெஞ்சகத்து ஒளிப்பார்**
**அங்கழல் சுடராம் அவர்க்கு இளவேனல்**
**அலர்கதிர் அனையர்** (170)

பெருமானுடைய சிவந்த மேனியில் கறுப்பு நிறக்கழுத்து என்ன உவமை சொல்லலாம்? செம்மை ஒளியும் சுடரும் மிக்கதாக வானை நிரப்புவது ஞாயிற்று மண்டலம். அதில் எத்தனையோ மீன்கள்: ஒளியுடையன பொன்னொளி: வெண்ணொளி: இளஞ் சிவப்பு என்று பல. ஆனால் அவற்றுக்கிடையே இருளும் இருக்கும் அல்லவா? அதுபோல, செம்பொன் தோடு, குழை இவை ஒளிரும் சிவந்த மேனியில் கரிய கழுத்தும் இருக்கிறதே! ஞாயிற்று மண்டலம் பெருமான்; விண்மீன்கள் பெருமான் மேனியில் உள்ள அணிகள். இருள் போன்ற கழுத்து என்று அழகிய ஒப்புமையைத் திருவிடைமருதூர்த் தெய்வத்தின்மீது பாடும் அழகு சுவைக்கத்தக்கது (173).

இறைவன் அடியார் நெஞ்சுள் எப்படி கலந்து அருள் புரிவான்? ஒரு மணிக்கல்; ஒளியை உமிழ்கின்ற இரத்தினக் கல். மணி தோன்றும்போதே உள்கலந்து இருந்ததே. இப்பொழுது சுடர் விடுகிறது அவ்வளவுதான். அதுபோலத் திருவிடைமருதூர் சிவமும் என்னுள் கலந்து நீக்கமற நிற்கிறான். ‘அணியுமிழ் சோதி மணியினுள் கலந்தாங்கு’ என்று பாட்டு தொடர்கிறது (176).

அடியார்க்கு இறைவன் அருள்செய்வதை இரண்டு உவமைகளில் அருளாளர்கள் விளக்கியுள்ளனர் (181, 207). இவை முன்னரும் சுட்டப்பட்டன. கலங்கிய சேற்று நீர், தேற்றாங் கொட்டையின் சேர்க்கையால் தெளிந்து, அதன்பின் சேற்றிலிருந்தும் பாதிக்கப்படாததுபோல, அடியார்கள் இந்த உலகமாகிய சேற்றால் கலங்கித் துன்புறும்போது இறையருள் பெற்றால் தெளிந்து அதன்பின் பாதிக்காதவாறு வாழலாம் என்பது ஒரு செய்தி. குளம் நிறைந்தபின் மதகுகள் திறக்கப்பட்டு வாய்க்கால் வழி, ஓடி நெற்பயிர்களை வாழச் செய்யும். ஆனால் குளக்கரையில் இருக்கும் செடிகள் கூட, குளத்தின் கரையோர அசும்பு ஊற, நீர் பெற்று வாழும். இறைவனை எண்ணித் தொழுது, புண்ணியத் தலங்களில் வாழும் அடியார்கள் மட்டும் அல்ல, வெறுமனே அந்த ஊரில் வாழ்வோரும் உய்தி பெறுவர் என்பது சிறப்புச் செய்தி. எல்லோருக்கும் தெரிந்த எளிய உவமைகளைக் கூறி உயர்ந்த கருத்துகள் இவ்வாறு புலப்படுத்தப்படுகின்றன.

இவை மட்டுமே அல்ல. வேறு பல உவமைகளும் உருவகங்களும் திருவிசைப்பாவில் நிறையவே உள்ளன. பெரும்பாலும் அவை திருமுறைகளில் வழக்கமாகப் பயின்று வருவன என்பதால் இங்குக் குறிக்கப்பெறவில்லை. சற்று வேறுபட்ட வகையில் ஆளப்பட்ட உவமைகளே குறிக்கப்பட்டன. கருவூராரின் முன்னர்க் கூறிய பாட்டில் (81), ஐம்புலன்களைப் பகைவருக்கு ஒப்பிட்டுக் கூறியது கண்டோம். அதே பாட்டில் 5, 6ஆம் வரிகளில் இன்னொரு

உவமையையும் தேவர் கையாண்டுள்ளார். செந்நெல் வயல், செஞ்சாலி அரிசி விளையப் போகிறது. ஆனால் வயல்களில் குவளை மலர்கள் பூத்துக் கிடக்கின்றன. பார்ப்பதற்கு அழகுதான். ஆனால் பயிர்விளைவு பாதிக்கப்படுமே! அதனால் உழத்திப் பெண்கள் தங்கள் கண்களைப் போன்ற குவளைகளைப் பறித்து வரப்பில் வீசி எறிகிறார்கள். இது செய்தி. ஆன்மப் பயிர் அருளால் விளையும் பக்குவக் காலம். உலகின்பமும் கவர்ச்சியும் குவளைகள் போல மயக்கவே செய்யும். அதற்கு இடம்கொடாது அவற்றைப் பறித்து எறிய வேண்டும். அப்பொழுதுதான் செஞ்சாலிச் சோற்றின் பயனைத் துய்ப்பது போல ஆன்ம இன்பத்தை அனுபவிக்க முடியும். ஆனால் இந்த உவமை திருமந்திரத்தில் சற்று மாறி வருகிறது. இயற்கைச் சூழல் அதுவே. இங்கு உழவன் வருகிறான். குவளைகள் அவன் மனைவியின் கண்களை நினைவூட்டுகின்றன. தன்னை மறந்தான். பயிர்விட்டுப் போயிற்று என்பார் திருமூலர். இதுபோன்ற பல உவமைகள் இங்கு விடப்பட்டுள்ளன.

# 9. அகத்துறைப் பாடல்கள்

திருவிசைப்பாவில் மொத்தம் பத்துப் பதிகங்கள் (109 பாடல்கள்) அகத்துறையில் அமைந்துள்ளன என்பது முன்னரே கூறப்பட்டது. தமிழ்ப்பக்தி இலக்கியத்தில் இந்தத் தலைவன்-தலைவி சார்ந்த பாடல்கள் தனித்துவம் பெற்றவை. சம்பந்தர் காலம் தொடங்கி, பாரதி காலம் முதல் இதன் ஆட்சி பரவியிருந்தது. வடநாட்டு இலக்கியத் திறனாய்வாளர்கள் இந்த நாயக நாயகி பாவம் தமிழகத்தில் மட்டும் எப்படி மேம்பாடு அடைந்தது என்ற பேராவலுடன் இந்தப் பாடல்களைப் பார்க்கிறார்கள்.

ஆன்மாவைத் தலைவியாகவும், இறைவனைத் தலைவனாகவும் கொண்டு பாடப்படும் இந்த அனுபூதிக் கவிதைகளுக்கு நிகர் வேறு எதுவும் இல்லை. பன்மொழிப் புலவர், தெ.பொ.மீ. கூறும் ஒரு கருத்து இங்கே நினைக்கத்தகும்.

> சங்க காலத்திலிருந்த கருத்தேற்றம் கொண்ட காதல். திருவள்ளுவரால் இன்னும் தூய்மை செய்யப்பட்டது. திருமூலர் அக்காதலை இறைவன்பால் சார்த்தும் வகையைச் சுட்டினார். ஆன்மாவைத் தலைவியாக்கி இறைவனைத் தலைவனாக்கி எனறுமுள அழியாக் காதலைப் பாடியுருகும் வகையை ஆழ்வாரும் நாயன்மாரும் செய்தனர் (A History of Tamil Literature, p. 76)

அற்புதமான கருத்து. தமிழ் மண்ணில் நூறு நூறு ஆண்டுகளாகப் போற்றப்படும் ஒரு நெறி இந்த அகத்துறை. தெ.பொ.மீ. கூறுவதுபோல, பக்தி இலக்கியக் காலத்தில் மானிடக் காதல் தெய்வக் காதலாக மாறியது. பற்று என்பது ஒரு வல்லுணர்ச்சி. மற்ற எல்லா வற்றையும் மறக்கச் செய்யும் அளவு அது வலிமை வாய்ந்தது. காதலும் ஒரு வகைப் பற்றுணர்ச்சியே. காதல் வயப்பட்டோர் தந்நலம் துறக்கவும், தம்மை ஈன்றோரைக் கூடச் சிலவேளை ஒதுக்கவும் இந்தப் பற்றே காரணம். இறைவன்பால் பற்று வைத்தால், மற்ற பற்றுகள் தாமே போகும் என்று குறள் வழிகாட்டுகிறது (350). வைணவம் பேசும் சரணாகதித் தத்துவமும் இதுவே. மானிடக் காதலைத் தெய்வக் காதலாக்கும் வித்தகத்தைப் பக்தி இலக்கியம் காட்டுகிறது.

திருக்குறளில் காமம் உயர்நிலையில் வடிக்கப்பட்டுள்ளது. தலைவியின் தோளில் தான் பெறும் இன்பத்தைத் தாமரைக் கண்ணனின் வைகுந்த இன்பத்தை விட மேலானது என்று பாடும்

தலைவனைக் குறளில் காண்கிறோம் (1103). நாயக நாயகி உணர்வுக்கு அத்தனை பேரையும் நீத்துத் தன்னை மறந்து தன் நாமம் கெட்டுத் தலைவன்தானே எல்லாம் என்று அடைக்கலமாகும் தலைவியைத் திருநாவுக்கரசர் சுட்டுகிறார். 'முன்னம் அவனது நாமம் கேட்பாள்' என்ற பாடல் பக்திநெறியில் தலைவி தொட்ட மணி முடி அல்லவா?

இப்படி முன்னோர் போட்டுக் கொடுத்த அன்புத் தடத்தில் திருப்பாவை பாடிய அருளாளர்களும் தங்கள் முத்திரைகளைப் பதித்துள்ளனர். ஒன்பதின்மருள் ஆறுபேர் இவ்வகைப் பதிகங்கள் பாடியமை அந்த நெறி அவர்களை ஈர்த்த அருமையைக் காட்டும். மூன்றில் இருபங்கு ஆசிரியர்கள் மூன்றில் ஒரு பங்குப் பாடல்களை அகத்துறையில் பாடியதில் அதன் வெற்றி தெரிகிறது.

அகத்துறைப் பாடல்கள் இரண்டு வகைப்படும். புலவர் தனித்து நின்று தலைவன் தலைவி இருவருடைய காதல் வாழ்வைப் புறவயமாகப் பாடுவது ஒரு வகை. இதில் தலைவனுக்காக அல்லது தலைவிக்காகப் புலவர் இரங்கி, ஏங்கி உருகவும் செய்யலாம். எனினும் இது தொலைவிலிருந்து புனைந்துரைப்பது போன்றதே இப்படி வருவன தன்னுணர்ச்சிப் பாடல்கள் ஆகமாட்டா. தலைவன் தலைவி தவிரப் பாடும் புலவர் அல்லது செவிலித் தாயர் என்ற மூன்றாக மாந்தரும் இங்குள்ளனர். இவற்றில் சுவையுண்டு. உருக்கமும் உண்டு. ஆனாலும் நேரடித் தன்னனுபவம் உள்ளார்ந்த தூய்ப்பும் சற்றுக் குறைவுதான். இவ்வகையில் ஏழு பதிகங்கள் திருவிசைப்பாவில் உள்ளன (பதி. 3, 6, 7, 12, 26, 27, 28).

இரண்டாவது வகையில் பாடுகின்றவர் - ஆணோ, பெண்ணோ - தன்னை நாயகியாகவும் இறைவனை நாயகனாகவும் கொண்டு பாடுவர். இது அகவயமானது. தலைவன், தலைவி இருவரைத் தவிர மூன்றாவது கதைமாந்தர் இல்லை; புனைந்துரையோ தோழி செவிலி கூற்றோ இல்லை. தலைவி தன் மன உருக்கத்தைத் தானே வாய்விட்டுப் பாடுவாள். இதுவே தன்னுணர்ச்சிப் பாடல். நேரடித் தன் அனுபவமும் ஈடுபாடும் உள்ள துய்ப்பும் இதனுள் உள்ளன. இவ்வகையில் அமைந்த திருவிசைப்பாப் பதிகங்கள் மூன்றே (10, 23, 25).

எனினும் இரண்டு வகைகளையும் சேர்த்தே பார்க்கலாம். அகத்துறைப் பாடல்கள் அனுபூதி வகையைச் சார்ந்தவை. ஆன்மா என்ற ஒன்று பரம்பொருளுடன் ஒன்றுபடும் அனுபவமே அனுபூதியியல். இதை முழுமையாக வரையறுத்துச் சொல்லவும் முடியாது. அவரவர் துய்ப்பு, அனுபவம், முதிர்ச்சி உணர்வுக்கேற்ப இது மாறும். 'அது பழச்சுவை என அமரரும் அறியார்' என்று மாணிக்கவாசகர். இதைக் குறிப்பால் உணர்த்துவார். அறிவுக்கோ

ஆராய்ச்சிக்கோ இங்கு இடமில்லை. எங்கு அறிவு முடிந்து அன்பு தொடங்குகிறதோ அங்கு அனுபூதியும் தொடங்குகிறது என அறிஞர் பலரும் கூறியுள்ளனர்.

திருமாளிகைத் தேவருடைய மூன்றாம் பதிகத்தில், திருவிசைப் பாவின் தலைவி அறிமுகமாகிறாள். செவிலித்தாய் அவளை, 'என் பொன்' (23) என்று கூறுகிறாள். 'பொன்னே மணியே' என்று தாய் குழந்தையைக் கொஞ்சுவது உலக இயல்பு. அதில் பெரிய சிறப்பில்லை. இங்குப் 'பொன்' என்பது அந்தத் தங்கம் அன்று. 'பொன்' என்ற சொல்லுக்குத் திருமகள் என்று ஒரு பொருளும் உண்டு. செல்வமும் அழகும் நிறைந்த பெண் ஒருத்தி தலைவியாக உள்ளே வருகிறாள். அவள் மடந்தைப் பருவத்தில் இருக்கிறாள் (24). வெறும் மடந்தை அல்லவாம்! மை பூசிய அகன்ற கண்களை உடையவள் - 'மையார் தடங்கண் மடந்தை' எனச் சேந்தனார் விரிக்கிறார். இறைவன் இயல்பும், அருள்நீதி வழங்கும் முறையும் (58), அறியாதவளாக, பேதலித்து உள்ளாள் (59). அழகிய நெற்றியும் அதன்மேல் திலகமும் அணிந்தவள் (61). தூய நல்ல சொற்களையே - தெய்வம் சார்ந்த சிறந்தவற்றையே பேசும் இந்தத் தையல் (63), ஒரு வகையான இறுமாப்புக் கொண்டவளாகவும் இருக்கிறாள் (64). இளைய கொடி போன்ற இவள் இப்போதுள்ள நிலையில் எல்லை கடந்தவளாக - தாய் தந்தை சொல்லை மீறுபவளாக, இருக்கிறாள் (67). இவளை ஐயுறக் காரணம் இல்லை; பொய் சொல்லாத அரிவை (68).

மென்மையான குணங்களைக் கொண்ட இந்த நங்கையின் அழகுக் கண்கள் குவளை மாமலர்கள் போன்றவை (70). இவளுடைய வாயோ கொவ்வைக் கனிபோலச் சிவந்தது (73). எண்ணெய் பூசப்பட்ட, நீண்ட மொய்குழல் சிறுமியாகவே இன்னும் இருக்கிறாள் (74). மரபையும் மீறித் தன் காதலை ஊராருக்குப் புலப்படுத்துவதற்காக மடலேறவும் துணிந்தவள் (76). அஞ்சி ஓடும் மான்போன்ற விழியுடைய தலைவி (78), "சரிந்த துகில், தளர்ந்த நடை, அவிழ்ந்த குழல் இளந்தெரிவை" யாகவும் இருக்கிறாள் (131).

இப்படி உள்ள ஒரு பெண்தான், 'தலைவன்' மீது பற்று வைக்கிறாள். எந்தத் தலைவன் மீது? தான் யார்? தன் நிலை என்ன என்று நினைத்துப் பார்க்க மாட்டாளோ? 'தெய்வ வாய்மொழியார்... தெய்வக் கோனே' என்று (25) தொழும் உயர் தெய்வம்; குணக்குன்று (23); அமரர் கொழுந்து (27); குணக்கடல் (62); பொருள் நேர்ந்த சிந்தையவர் தொழும் கடவுள் (6), திருமாலும் பிரமனும் தேடியும் காணாத இறைவன் (105), அமரராகிய உம்பர்கள் தம்பிரான் (250), ஞானக் கொழுந்து (260) என்று தலைவனின் பண்பு நலன்கள் பட்டியலிடப்படுகின்றன. இவை மட்டுமே அல்ல: நூல் முழுதும் - பாடல்கள் முழுதும் தலைவன் பெருமையே. வானோரும் ஏனோரும்

வணங்கும் பெருமான்; பிரமனும் திருமாலும் கூடக் காணமுடியாத தெய்வம். அப்படியுள்ள பரம்பொருளின் மீது இந்த ஏழைப் பெண் காதல் கொள்வாளோ? இதென்ன பைத்தியம்?

'நம்பி நின்ற நீதியறிகிலள்' (59). தலைவனுடைய முழுப் பெருமையையும் இவள் அறியாது இப்படி துன்பப்படுகிறாளே? அவனுடைய தோற்றப் பொலிவு எத்தகையது? பொன்னெடும் திண்தோளை உடையவன். அதை இவள் தழுவ நினைப்பது எளிதான செயலா? (59). ஆறாத பேரன்பு உடையவர்களின் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் இறைவன், சிறிய அன்புடையவர்களையும் ஏற்றுக் கொள்வது இயல்புதான். அது பற்றியே இவளும் தனக்கு எப்படியும், அருள் செய்வான் என்று கருதுகிறாள் போலும்! (130). ஆனால் ஆசையை அளவறுத்தார் இங்கு ஆரே! (267). அதுவும் இறைவன் மீதுவைத்த ஆசை சாதாரணமானதா என்ன? எதன்மீது ஆசைப்பட்டாலும், துன்பத்தை ஏற்கவும் துணிய வேண்டும். அதிலும் இது போன்ற கடும்பற்று என வந்துவிட்டால் என்னென்ன நடக்கும்? உடம்பும் உயிரும் ஒரு சேரத் துன்புறும். உறக்கமும் உறவும் ஒன்றாகக் கைவிட்டுப் போய்விடும். தலைவி படக்கூடிய இவ்வகையான துன்பங்களைத் திருவிசைப்பா தெளிவாகவே எடுத்துரைக்கிறது. 'ஆசையை அளவறுக்க முடியாதபோதும் துன்பங்களையும் அளவறுக்க முடியாது. இது நேர்விகிதம் இது அதிகமாகும்போது அதுவும் கூடவே செய்யும்.

தலைவிபடும் வேதனைகள் சொல்லில் அடங்காதவை. அவளுடைய ஐம்பொறிகளும் அவளிடத்தில் இல்லை. அவை தாமாகவே இறைவனிடம் சேர்ந்தனபோலச் செயல்படுகின்றன. மணம் மிக்க பொருள்களைப் பூசவேண்டிய உடலில் திருநீறு பூசி மகிழ்கிறாள். இனிய ஓசைகளைக் கேட்டு மகிழவேண்டிய காதுகள் அவனைப் பற்றிய அறிவு நூல்களையே விரும்பிக் கேட்கின்றன. கண்கள் கோபுர விமானங்களையே மேல்நோக்கிப் பார்க்கின்றன. நெஞ்சு விம்மிப் பெருமூச்சு எடுக்கிறது (104). உள்ளம் அவள் கட்டுப்பாட்டில் கொஞ்சமும் இல்லை. ஊழிக்கால அளவு அவனை உணர்ந்தது போல நெக்குருகிக் கசிந்து கரைந்து உருகுகிறது (105). அவளுக்குப் பகலும் இல்லை; இரவும் இல்லை. எந்நேரமும் தலைவன் நினைப்பே. இரவில் கடல் அலைவீசி ஒலித்துத் துன்புறுவது கண்டு அவள் மயங்குகிறாள் (அமைதி தரவேண்டிய இரவில் கூட இந்த ஆர்பு ஒலியா?) (106). கண்கள் நீரைச் சிந்துகின்றன. இத்தகைய மெய்ப்பாடுகளை எல்லாம் உருவாக்கும் மனத்தை - சிந்தையிடம் - அடைக்கலம் இழந்துவிட்டாள். "செய்வதேன்?" எனத் தடுமாறித் தலைவி நிற்கிறாள் (110). அந்த மனம் எங்கே இருக்கிறது என்பதைத் தலைவனே அறிவான் (110).

இது ஒரு வகையான பித்து. மக்கள் மீது, காதலர்மீது வைக்கும் பெரும்பித்து மண், பொன்மீது வைக்கும் மோகத்தை விடக் கொடுமையானது. இறைவன்மீது வைப்பதோ பெரும்பித்து. இதற்கு ஆட்பட்டவர்கள் எல்லாரும் தாமாகவே பிதற்றித் திரிவதும் இயல்பு. 'பிதற்றும் பித்தனேன்' என்று தலைவி தன்னைத் தானே கூறிக் கொள்கிறாள் (111). ஊரார் எல்லாம் அவளைத் தூற்றுகிறார்கள். அந்தப் பழியையும் அதனால் விளைந்த மனத்துன்பத்தையும் அவள் பொறுத்துக் கொள்கிறாள். அவளுடைய பிறப்பு, வாழ்வு, திறம் எல்லாம் மறந்துபோன நிலை இது. தலைவன்மீது கொண்ட காதல் அவளை முழுவதுமாக ஒழித்துவிடும் போலும்! அவளுக்கு என்ன செய்வது என்று புரியாத நிலை.

இறைவனையே எண்ணி உருகியும் இறையருள் கிட்டாத நிலைக்கு எதை உவமையாகச் சொல்ல முடியும்? தண்ணீரிலே கிடந்தும் தாமரை நீரில் பொருந்தியில்லாதிருப்பது போலத்தான்!

> **நீரோங்கி வளர்கமலம் நீர்பொருந்தாத் தன்மை அன்றே**
> **ஆரோங்கி முகம்மலர்ந்து ஆங்கு அருவிளையேன் திறம்**
> **மறந்து இன்று**
> **ஊரோங்கும் பழிபாராது உன்பாலே விழுந்து ஒழிந்தேன்**

இது தலைவி தரும் வாக்கு மூலம் (122).

கண்கள் நீர் சொரிவதையும், கைகள் கூப்பித் தொழுவதையும் அவள் ஒரு பொழுதும் நிறுத்தவில்லை எப்பொழுதிருந்து? தலைவன் அந்தத் தெருவில் உலா வந்த 'அன்று முதல் இன்று வரை'. அதுவரையிலும் எதற்கும் கலங்காது. வருந்தாது இருந்த மனமும் இப்பொழுது வருத்தத்தின் உச்சத்தில் மருள்கிறது (123). அவளுக்குத் தன் உடம்பே தனக்குப் பகையாய்விட்டது என்று கருதியவளாகச் சரியாக உண்ணவும், நீராடவும், ஒப்பனை செய்யவும், உறங்கவும் செய்யாதவளாகப் படும் துன்பம் சொல்லும் தரமன்று. அழும்போது கூடத் தலைவன் பெயரைச் சொல்லியே அழுகிறாள். அதுதான் அவள் பெறக் கூடிய பெரிய பேறு போலும் (127).

'பித்தா பிறை சூடி' என்று முன்பெல்லாம் இவள் பாடிப்பாடி மகிழ்ந்தவள் தான். ஆனால் இப்பொழுது அந்தத் தண்ணிய பிறை - குளிர் நிலா - நெருப்பைச் சிந்துகிறது. மலர் தூவுவதுபோல அக்கினிக் கதிர்களை வாரி வீசுகிறது. இறைவன் கையில் உள்ள யாழின் இன்னிசை கேட்டு முன்பு மகிழ்ந்தவள் தான். ஆனால் அந்த யாழின் ஒலி இப்போது உயிரை அழிக்கும் வாளின் ஒலிபோலத் துன்புறுத்துகிறது. யாழிடம் இருப்பது நரம்பா? உயிர் ஈரும் வாளா? (129).

நிரம்பாத பிறைதூவும் நெருப்பொடு நின்கையில் யாழ்
நரம்பாலும் உயிர்ஈர்ந்தாய் (129)

இவள் இளம்தெரிவையாக இருந்தது ஒரு காலம். இப்போது 'சரிந்த துகில், தளர்ந்த இடை, அவிழ்ந்த குழல்' உடன் பிச்சியாகிவிட்டாள். இதுதான் அவள் பெற்ற பரிசுபோலும்! (131) இவை எல்லாம் தலைவி பட்ட துன்பங்கள். தன்னுடைய நிலையைத் தானே சொல்லி வருந்துவனவாகச் சில பாடல்கள் திருவிசைப்பாவில் உள்ளன. 23, 25, 26, 27ஆம் பதிகங்களில் அவை இருக்கின்றன.

ஏறக்குறைய தன்னுணர்ச்சிப் பாடல்கள் போல, தலைவியின் உள்ளார்ந்த அனுபவங்களையும் ஏக்கத்தையும், மன வேதனைகளையும் படம்பிடித்துக் காட்டும் சொல்லோவியங்களாக இவை மிளிர்கின்றன. தற்கூற்றாக உள்ளதைப் படர்க்கையில் வைத்துக் காணலாம்.

தலைவி தலைவன்மீது கொண்ட காதலால் நிறையழிந்து விட்டாள். பெண்ணிற்கு அணிகலன் என்று போற்றப்படும் மனஉறுதி இப்படி சிதைந்து போயிற்று (227). அது நெகிழ்ந்து நெகிழ்ந்து நெருப்பில் மெழுகு போல உருகி நிற்கிறது (226). அவளுடைய வேதனையைப் புரிந்துகொள்ளாத மன்மதன், தன் மலர்க்கணைகளை ஏவி மேலும் வதைக்கிறான். அவள் அலந்து போகிறாள் (227). இத்தனை துன்பங்களும் அவளுக்குப் பெரிதல்ல. தாங்கிக் கொள்ளக் கூடிய அளவு எளிமையானவையே! ஆனால் அதற்குத் தலைவன் ஓர் அருள்புரிய வேண்டும். முன்பு மார்க்கண்டனைக் காப்பதற்காக, அவனுயிர்க் கவரவந்த காலனை எட்டி உதைத்து வீழ்த்தினானே? அந்தக் கால்களைத் தன்னுடைய அழகு மார்பில் வந்து ஒற்றவேண்டும்!

உலர்ந்த மார்க்கண்டிக்கு ஆகி அக் காலனை
உயிர்செக உதைகொண்ட
மலர்ந்த பாதங்கள் வனமுலைமேல் ஒற்ற
வந்து அருள்செய் யாயே (228)

இது தலைவியின் வேண்டுதல். காலனையும் வீழ்த்தும் திருவடிகள் காதலிப்பார்க்குப் பூவாக மாறிவிடும்போலும்!

அவள் ஆசை நிறைவேறுமா என்பது பொறுத்திருந்து பார்க்க வேண்டிய ஒன்று. அதற்குள் அவள் மார்பிலும் உடலிலும் பசலை நோய் தோன்றிப் பொன்னிறம் பரவியது (229). பக்திவலைப்பட்டு நிற்கும் அவள் மனம் அது கண்டு அஞ்சவில்லை. ஏனென்றால் எப்படியும் பெருமான் தன்னை ஏற்றுக் கொள்வான் என்ற உறுதி அவள் உள்ளே ஆழமாக வேரூன்றிவிட்டது. அதைப் பெற அவள் கொடுத்த விலை அதிகம். மிக அதிகம். தன்னுடைய அறிவு, மிகுதியாக இருந்த நாணம், நிறைமை எனப் போற்றப்படும் பிறழாமை, பிற

ஆசைகள் இவற்றை எல்லாம் அவன் அருள்பெறலாம் என்பதற்காக விட்டுவிட்டாள். அது கூடப் பெரிதன்று. தன்னைப் பெற்று வளர்த்த தாய் தந்தையரையும், உடன்பிறந்த பாசப்பிணைப்புகளையும், மற்ற உறவினர்களையும் விட்டு, மறந்து, இறைவனையே பெரிதாக மதித்துப் போற்றுகிறாள்.

'முன்னம் அவனது நாமம் கேட்டு' எனத் தொடங்கித் 'தன்னை மறந்து தன் நாமம் கெட்டு நின்ற, திருநாவுக்கரசருடைய தலைவி நிலைதான் இவள் நிலையும். 'உற்றாரை யான் வேண்டேன் ஊர் வேண்டேன் பேர் வேண்டேன்' என்ற திருவாசகத் தலைவி வழியில் வந்தவளாயிற்றே! அரிய பாடல்களில் இதுவும் ஒன்று.

*அறிவும் மிக்க நல்நாணமும் நிறைமையும்*
*ஆசையும் இங்குள்ள*
*உறவும் பெற்ற நல்தாயொடு தந்தையும்*
*பிரியவிட்டு உனை அடைந்தனன் (233)*

காதலே வல்லுணர்ச்சிதான்: இறைவன்மீது வைத்த காதலோ எல்லை தாண்டிய வல்லுணர்ச்சியாகப் பெருகும் நிலையை இங்குக் காண்கிறோம். இத்தனையும் கூறி வருந்துபவள் தலைவி. 'ஈசனைக் காதலித்து இணைபவள் மொழி' என்று அமுதனார் பாடுகிறார் (235).

இறைவனுடைய திருவடிகளைக் காணவேண்டும் என்ற பேராவல் தலைவியை உந்துகிறது. 'எம் இறையை என்று கொல் காண்பதுவே?' (24) என்றும், காண்பது யான் என்று கொல்.... "மறையோன் மலர்ப்பாதங்கள்" என்றும் (248) புலம்புகிறாள். தோழியரிடம் தன்னுடைய குறைகளைச் சொல்கிறாள். எந்நேரமும் அதே நினைவு. இறைவனை நினைத்த பின்னர், அந்த நெஞ்சில் வேறு ஒன்றை இனி வைக்க முடியாது (252). அவனும் பரம்பொருள்; மேலான தலைவன். 'நேசமுடையவர்கள் நெஞ்சுளே இடம்' கொள்பவன் (255).

"இந்த நெஞ்சுக்கு வேறு போக்கிடம் இல்லையா? கொடுமை யானது இந்த மனம். பாவி மனம். கொஞ்சம் கொஞ்சமாக அந்தப் பனிமதிச் சடையான்மீது நேசம் கொண்டு என்னைக் கைவிட்டுப் போயிற்று. கூடவே என்னுடைய நிறையும் போயிற்று. நெகிழ்ந்து துன்புறுகிறேன். உலகத்தவர் பிறர் படும் துன்பங்களைப் பார்த்து இரங்குவார்கள். அது இயல்பு. உடல்படும் வேதனைகள் அவர்கள் கண்களுக்குப் புலனாவதால் வந்த இரக்கம். ஆனால் உள்ளார்ந்து நான் படும் வேதனையை யார் அறிவார்? எனக்காக யார் இரங்குவார்? இது உடல் துன்பம் மட்டுமல்ல: ஆவியின் வருத்தமும் சேர்ந்தது அல்லவா? "ஆவியின் வருத்தம் இது ஆர் அறிவார்?" (258) அற்புதமான கேள்வி. மற்றவர்களால் அறியவோ முடியவோ இரக்கம் காட்டவோ

வழியில்லாத கொடுந்துன்ப நிலை இது. அதைப் புரிந்துகொள்ள மறுப்பவர்களும், இயலாதவர்களும் தலைவியின் பெண்மையைக் கூட எள்ளி நகையாடுகிறார்கள் (261). இந்த நிலை தொடர்ந்து நீடிக்கு மானால் இன்னுயிர் போகாமல் காப்பது கூட அரிது தான் (262).

இது ஒரு தீராநோய். பற்று என்பது இதுதான். எதன்மீது பற்றுக் கொள்கிறோமோ அதை அடைந்தால் அல்லாது நிறைவடையாது. அதுவரை ஆசையின் அளவை நிறுத்தவும் முடியாது. "ஆரே இவைபடுவார்?" (271) என்று தலைவி கேட்பதில் பொருளுண்டு. யாராவது பட்டுத்தான் ஆகவேண்டும். "யாதனின் யாதனின் நீங்கியான் நோதல் அதனின் அதனின் இலன்" என்று திருக்குறள் பேசுகிறது. எதன் எதன் மீது வைத்துள்ள ஆசையிலிருந்து ஒருவன் நீங்கு கிறானோ, அதற்குப்பின் அவற்றால் வரும் துன்பங்களினால் அவன் பாதிக்கப்பட மாட்டான் என்பது பொருள். இதை மாற்றிச் சொன்னால், பெரியதும் அடையக் கடினமானதுமான ஒன்றைப் பெற ஆசைப்பட்டால் அந்த அளவுக்குப் பெரியதான துன்பத்தை அனுபவிக்கவும் தயாராக இருக்க வேண்டும். பிறகு துன்பங்களைக் கடந்த பிறகு - தவம் செய்வதுபோல உடலும் உள்ளமும் உருகிய பிறகு - பெறும் இன்பமும் எல்லை இல்லாததுதான். அது எப்படி இருக்கும்?

இறைவன் திருவருள் இன்பம் பெற்றுவிட்டால், யாரும் எதைப் பற்றியும் கவலைப்பட்டு மெலிந்து விட வேண்டியதில்லை. 'எய்ப்பிலன் காரிகையே' (280). அவளுடைய கல்போன்ற மானுட மனம் கனிந்து விடுகிறது (64). உலகியல் வாழ்வில் ஒருவருக்குப் பலப்பல பேறுகள் பலவகைகளில் கிடைக்கலாம் அவற்றால் விளையும் களிப்புகளும் பலவே. ஆனால் இவை நிலையானவை என்று சொல்ல முடியா. "கூத்தாட்டு அவைக்களத்துக்கு வந்து செல்லுகின்ற மனிதர்போலச் செல்வமும் வரும் போகும் என்கிறது குறள். ஆனால் திருவிசைப்பாத் தலைவி பெற்ற பேறு அப்படியன்று.

> இழிவொன்று இலாவகை எய்திநின்று
> இறுமாக்கும் (65)

எந்த நேரத்திலும் இந்த இன்பம் போகாது; தாழ்வுறாது. இப்படி உயர்ந்த ஒரு பேற்றைப் பெற்றவளுக்கு இறுமாப்பு தோன்றுவது இயற்கைதான்.

பெற்ற தாயும் செவிலித் தாயும் தலைவியின் நிலைகண்டு தடுமாறுகிறார்கள். அவளுக்காக இரங்கியும், அருள் காட்டாத இறைவனைச் சினந்தும் தத்தம் மனவோட்டத்தைப் புலப்படுத்து கிறார்கள். அவர்களுடைய அறிவுரைகளைத் தலைவி கேட்கும் நிலையைத் தாண்டி விட்டாள். "இளவல்லி எல்லை கடந்தனள்" (67)

அற்புதமான தொடர் இது. எந்த எல்லையை இந்த இளங்கொடி தாண்டிவிட்டாள்? இறைக்காதலில் தோய்ந்திருந்தவளுக்கு மானிட வேலிகள் காவலாக முடியுமா என்ன? அந்த எல்லை அத்தகைய தூய காதலர்க்குப் பொருந்தாது. தாயர்க்கும் இது தெரிகிறது. "நன்றே இவள் நம் பரம் அல்லள்" (67). இவள் நம்முடைய பொறுப்பில் இப்பொழுது இல்லை, நம் எல்லையைத் தாண்டிவிட்டாள் ஆனால் அதுவும் நல்லதுதான்" என்று தாயர் போற்றுகிறார்கள்.

மானுடக் காதலை நீத்து, மண்ணக இன்பங்களைத் தூக்கி எறிந்து மாசற்ற மனத்துடன் தெய்வத் திருவடியை நோற்றால் ஒருவன் பெறக் கூடிய பேறு சொல்லால் கூறத்தக்கது அல்ல என்பதைத்தான் 'நம்பரம் அல்லள்' என்ற தொடர் காட்டுகிறது. "எப்பாடு பட்டாவது இறைவன் திருவருள் இன்பத்தைப் பெற்றுத் திளைப்பேன்" எனத் தலைவி தாயர்க்குச் சூள் உரைத்திருப்பாள் போலும்! "அறிந்தோம் அரிவை பொய்யாததே" (68) என்ற சொற்கள் இதைக் காட்டுகின்றன. இதுதான் பக்தி வைராக்கியம். இதுதான் துன்பத்தைத் தாங்கிப் பெறுகின்ற இன்பத் துய்ப்பு; இறையருள் நெறியில் நிற்பவர்கள் சொல்லும் சொற்களும் மெய்ம்மை சார்ந்தவை: அவை ஒரு நாளும் பொய்யாக இருக்கா. வெற்றி பெற, உலகிற்குத் தம் ஆற்றலைக் காட்டக் காலம் ஆகலாம். அதுவரை உலகம் காத்திருக்க வேண்டுமே தவிர, இறையடியார்களுக்கு அதை மெய்ப்பிக்க வேண்டிய தேவையே இல்லை.

இறைவன் திருவிசைப்பாத் தலைவியின் உள்ளே புகுந்த யோகமும் போகமும் ஆகத் திளைப்பில் அவளை ஈடுபடுத்துகிறான். 'பாலும் அமுதமும் தேனுமாய் ஆனந்தம் தந்து உள்ளே பாலிக்கின்றாள்" (68) அப்பொழுது அந்த ஆருயிர் பெறும் போக இன்பத்துக்கு ஈடில்லை. உலகத்தார் பெறாத ஒன்றை, நினைக்கவும் முடியாத ஒருவரின் அருள்பெற்ற பெருமிதம் இது.

"யாதுநீ நினைவது எவரை யாம் உடையது" (109) என்று தோழி கூட இருந்து வியந்து போகிறாள்.

இதற்கு வேறு ஒரு பாடலில் விடை வருகிறது. திருமாலும் பிரமனும் சென்றலைந்தும் காணமுடியாத திருவருட்பேறு எப்படி இவளுக்கும் மட்டும் வாய்த்தது? எளிமையான காரணம். தற்செருக்கு இல்லாமல், யார் தலைவனிடம் அடைக்கலமாகிறார்களோ, அவர்களை அவனே தேடிவந்து ஆட்கொள்வான். இது அவனுக்கு இருக்கும் பெருந்தன்மை. எளிமையை நோக்கி ஓடோடிவரும் கருணைப் பேராறு.

**பாவியேன் ஆவியுள் புகுந்தது**
**என்ன காரணம் நீ ஏழை நாயடியேற்கு**
**எளிமையோ பெருமை ஆவதுவே (114)**

எளிமை தான் பெருமை. ஈர அன்பினராக இருந்தால் போதும். இறைவன் ஓடோடி வந்து இன்பம் தருவான் என்ற உட்கிடங்கை இதனுள் இருப்பது கண்கூடு. "இறைவனே என் கதி. நான் விடுகின்ற மூச்சுக் காற்றும் அவனே. மண், விண், இரு சுடர்கள் எல்லாம் அவன் தோற்றங்களே. இவற்றை உணர்ந்தபின் இனி எனக்கு வேறு என்ன வேண்டும்? எதை எண்ணி என் சிந்தையை 'இனிப் போக்குவேன்?' (251).

வேறு எதுவும் வேண்டாம் என்ற நிறைவு வந்தபின் மண்ணில் வாழும் நாள்வரை என்ன செய்வது என்ற எண்ணம் தோன்றும். "மனம் முழுதும் இறைவன் நிறைந்திருக்கும் முழுமையில் ஒன்று செய்யலாம். சாவு நாமாகத் தேடிக்கொள்வது அல்ல. வரும்போது அது வரட்டும். அந்த நாள்வரை 'அகலிடத்து' - அகன்ற இந்த உலகத்தில் 'இருக்கலாமே'! எப்படி? செங்கயல் பாய்வது போன்ற கண்களுடைய கன்னிமார்களுடன் திருச்சிற்றம்பலத்துள் புகுந்து பணி செய்யலாம். அடியார்களுக்காகப் பல பணிகள் அங்குக் காத்துக் கிடக்கின்றன. அவற்றை நாளும் செய்வோம். அப்படி செய்வதன் மூலம் இறையருள் பெறுவாம்" என்று தலைவிக்கு ஒரு முடிவு புலப்படுகிறது.

செங்கயல் புரைகண்ணிமார்கள் முன்னே
திருச்சிற்றம்பலம் உடனே புகுந்து
அங்குள பணி பலசெய்து நாளும்
அருள்பெறின் அகலிடத்து இருக்கலாமே (265)

'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்ற நாவுக்கரசரின் தொண்டு நெறி தலைவி வாயிலாகத் தென்படுகிறது.

சேந்தனாரின் பல்லாண்டுப் பதிகத்தின் பாடலுடன் இந்தப் பகுதியை நிறைவு செய்யலாம். "ஆரும் பெறாத அறிவு பெற்றேன் பெற்றது ஆர் பெறுவார் உலகில்" என்று தொடங்கும் அந்தப் பாடல் நிறைவுக்காக எடுத்துக் கொள்ளப்படுகிறது. ஏனெனில் தன்னைத் தலைவியாக நினைத்து அடியாள்பாடும் பாடல்கள் அகவகையின என்று முன்னரும் பார்த்தோம். அவ்வகையில் இதன் பொருத்தம் ஏற்றற்குரியதே. "மாலும் அயனும் அறியாத நெறி தந்து மனத்தகத்து வந்து பாலும் அமுதமாக ஒத்து நின்று இன்பம் தந்தவனுக்கு (296) என்ன கைம்மாறு செய்யலாம்?" இந்த ஊரும் உலகும் அறியுமாறு, உலகும் வானும் கேட்குமாறு உமை மணவாளனுக்கு நான் அடிமை ஆனேன்" என்று பறைசாற்றி வருவோம். கூடவே பல்லாண்டும் பாடுவோம் என மகிழ்ச்சித் திளைப்பில் முடிவு செய்கிறாள் தலைவி.

ஊரும் உலகும் கழற உழறி
உமை மணவாளனுக்கு ஆள்

*பாரும் விசும்பும் அறியும் பரிசு நாம்*
*பல்லாண்டு கூறுதுமே* (295)

தமிழ்ப் பக்தி இலக்கியத்தில் ஒரு விரிவான ஆய்வுக்களனாக அகத்துறைப் பாடல்கள் உள்ளன. அனுபூதி நிலையில் வைத்து அவற்றை மேலும் ஆராய்ந்தால் புதிய புதிய கருத்துக்கள் கிடைக்கும். ஐம்புலன் இன்பங்களுக்கு ஆள்பட்டு அல்லலுறும் உடல் ஒரு புறம். இதைத் தாண்டி இவற்றுக்கு அடிமையாகாமல் வானில் பறந்து செல்ல முயலும் உயிர்ப்பறவை ஒரு புறம். இரண்டுக்கும் இடையே நிகழும் முரண் இறுதியில் ஆன்ம வெற்றியாக மலர்கிறது. அஞ்சுமுகம் காட்டியவர்கள் ஓடோடி வந்து ஆறுமுகம் காட்டி அணைக்கிறார்கள். அச்சத்துக்கும் அணைப்புக்கும் இடையேயான இந்த ஆன்மிகப் பயணம் துன்பம் நிறைந்தது. ஆனால் இறுதியில் இன்பம் தருவது. திருவிசைப்பாத் தலைவி பெற்ற வெற்றி போற்றுதற்குரியதே.

# 10. சமுதாயச் செய்திகள்

ஒன்பது அருளாளர்கள் திருவிசைப்பா பாடியகாலம் வளமான காலம். பிற்காலச் சோழப் பேரரசு தென்னிந்தியா மட்டு மல்லாமல், கடல் கடந்தும் தமிழனுடைய வீரத்தை நிலைநாட்டித் தமிழ்ப் பண்பாட்டையும் நாகரிகத்தையும் பரப்பிய காலம். அதைத் தெளிவாகத் தெரிந்துகொண்டால்தான் அன்றைய சமூகம், அங்கு வாழ்ந்த மக்கள் நிலை போன்றவற்றைப் புரிந்துகொள்ள இயலும். மு. அருணாசலத்தின் நூலிலிருந்து கீழ்வரும் பகுதிகள் காலச்சூழலைக் காட்டுவதற்காகத் தரப்படுகின்றன.

> மிகக் குறைந்த பாடல்களையுடைய இத்திருமுறையை நன்கு நோக்கும்போது, இப்பாடல்கள் யாவும் ஒரே காலத்தில் ஒரே சூழ்நிலையில் ஒரே ஆதரவில் தோன்றியன என்று கருதும்படி உள்ளன... இத் திருமுறையில் பதிகம் பாடிய எல்லா ஆசிரியர்களும் இசைப் பாடல்களே பாடியிருக்கிறார்கள். நோக்கம் இசையோடு பாடவேண்டும் என்பதே. எனவே இசையோடு பாடுவதற்கு வாய்ப்பு இருந்தது என்பதும் தெளிவு..... எல்லோரும் தில்லைக்குப் பதிகம் பாடியிருக்கிறார்கள்.
>
> தேவாரம் பாடிய ஆசிரியர் காலத்துக்குப் பின் சைவ மக்கள் தலந்தோறும் தங்கள் தலத்துக்குரிய தேவாரங்களைப் பாடி அங்கு எழுந்தருளிய சிவபெருமானை வழிபட்டு வந்தார்கள். நாடெங்கும் ஒரு பக்தி வெள்ளம் கரைபுரண்டு பொங்கித் ததும்பிப் பெருக்கெடுத்து ஓடிற்று.
>
> விசயாலய சோழ மன்னன் (கி.பி. 845) காலம் முதல் சோழர் ஆட்சி வளர்ந்தது. அதன் ஆதரவில் சைவமும் தமிழும் தழைத்து ஓங்கின. இந்த வளர்ச்சியே பத்தாம் நூற்றாண்டின் இறுதியிலும் அடுத்த நூற்றாண்டின் தொடக்கத்தில் பேரரசனாகிய இராசராச மன்னன் நம்பியாண்டார் நம்பியைத் துணைகொண்டு தேவாரப் பதிகங்களைத் தொகுக்கும்படிச் செய்தது. இக்காலம் சைவத்துக்கு மட்டுமல்லாமல் தமிழுக்கும் ஒப்பற்றதொரு பொற்காலம். இராசராச மன்னனும், அவன்பின் வந்த கங்கை கொண்ட சோழனாகிய இராசேந்திரனும் தமிழ் வழங்கிய நிலம் எல்லாம் ஒரு குடையின் கீழ்க் கொண்டு வந்தனர்.

> சேரபாண்டியர் அனைவரும் ஒடுங்கிவிட்டனர். சோழர் படை கங்கை நதி வரையில் சென்றது. கடல் கடந்து சென்று ஈழம், நக்கவாரம், நாகநாடு, கடாரம் முதலான எல்லா நாடுகளையும் சோழர் குடையில் கீழ்க்கொண்டு வந்து அங்கெல்லாம் தமிழர் நாகரிகத்தையும் சைவ சமயத்தையும் பரப்பியது. இந்தப் பொற்காலத்தில் தமிழ்நாட்டில் ஊற்றெடுத்த புதிய தேனே திருவிசைப்பா என்ற தெய்வ இசைத்தேன் (ப. 108, 109).

இவ்வாறு குறிப்பிடும் மு. அருணாசலம் கி.பி. 940 தொடங்கி 1044 வரையிலான காலத்தில் திருவிசைப்பா பாடப்பட்டது என வரையறை செய்கிறார் (112). இந்தக் காலகட்டத்தில் 9ஆம் திருமுறை ஆசிரியர்களின் ஒருவரான கண்டராதித்தர் மாமன்னராகவும் இருந்திருக்கிறார். இன்னொரு அருளாளர் கருவூர்த்தேவர். இராசராசனின் ஞானகுருவாக இருந்தவர். பின்னாளில் முதலாம் இராசேந்திரன் காலம் முடியவும் வாழ்ந்தவர்.

இந்தப் பின்னணியைச் சற்றுப் புரிந்துகொள்ள வேண்டும். தேவாரத் திருவாசகங்கள் பாடப்பட்ட பிறகு பெரிய பெரிய கற்கோயில்கள் நாடெங்கும் அமைக்கப்பட்ட காலம் சோழப் பேரரசுக் காலம். இன்றுவரை - ஆயிரம் ஆண்டுகள் ஆகியும் தஞ்சை இராசராசேச்சுரமும் கங்கை கொண்ட சோழேச்சுரமும் தமிழ்ப் பண்பாட்டின் அழியாச் சின்னங்களாக இருந்து வருகின்றன. கலை நயமும், தொழில்நுட்பமும் கைநேர்த்தியும் உடையனவாகத் தெய்விக மணம் கமழும் இத்தகைய கோயில்களை உருவாக்கியபோது அந்தச் சமுதாயம் எப்படி ஓர் உன்னதநிலையைப் பெற்றிருக்கவேண்டும் என உணரவேண்டும். செல்வம், வீரம், வளம், கல்வி, கலைகள் என்று எல்லாமும் மேம்பட்டிருந்த சோழப் பேரரசுச் சுமதாயமே திருவிசைப்பா பாடப்பட்ட சமுதாயம். ஆதலால் அந்த அமைதி, கலையுணர்வு, நூலறிவு இவை போன்றவை திருவிசைப்பாப் பாடல்களில் எதிரொலிப்பது இயல்புதான். அரசரும் அமைச்சரும், கலைஞரும் பொதுமக்களும், ஆடவரும் பெண்டிரும் எனப் பொற்காலத்தில் வாழ்ந்து மகிழ்ந்த நேரம் அது. அதற்குப்பிறகு இருநூறாண்டுகள் அந்தப் பொற்காலம் தொடர்ந்தது. பிறகு தமிழன் வீழ்ந்தான். இன்று வரை அந்தக் காலம் திரும்பவில்லை.

சமுதாயத்தைப் பற்றி எண்ணும்போது, அதிலும் சோழர் ஆட்சிக்கால வாழ்வை எண்ணும்போது மிகப்பெரிய கட்டடங்களே நினைவுக்கு வருகின்றன. ஒரு சிறிய மலை கூட இல்லாத சோழ வளநாட்டில், திரும்பிய இடமெல்லாம் மாபெரும் கற்கோயில்கள். அவற்றைக் கட்டிய மன்னர்களின் திருமாளிகைகள் இன்று மறைந்து

அழியாமல் இருப்பது தமிழன் செய்த தவம்தான். ஆண்டுகள் பல கடந்தும் அவை கட்டடக் கலையின் சின்னங்களாகத் திகழ்வது பெருமைக்குரியதே.

என்றாலும் திருமுறைகளில் இந்தக் கலையுருவங்களைப் பற்றியோ நகரமைப்பு பற்றியோ விரிவான குறிப்புகள் குறைவு. பாடுபொருள் இறைமையாகியதால் கவனச்சிதைவு இருக்கக்கூடாது என்பது காரணமாகலாம். மழைதோய் மாடங்கள் முகில்தவழ் மாளிகைகள், வானுயர் பொன்மாளிகை என்பன போல வழக்கமான தொடர்கள் திருவிசைப்பாவிலும் ஆங்காங்கு வருகின்றன. அவையல்லாமல் கருவூர்த்தேவர் பாடிய தஞ்சை இராசராசேச்சுரம் பதிகத்தில் அந்த ஊர், கோட்டை இவற்றின் அமைப்பைப் பற்றிய சில குறிப்புகளைத் தருகிறார். அவற்றில் சில இன்றும் பொருந்துவனவாக இருப்பது வியப்பன்று. மெய்ம்மையே என்பது தஞ்சையை நேரில் பார்த்தவர்களுக்குத் தெளிவாகும்.

> *தஞ்சை: தஞ்சை இராசராசேச்சுரம் மதில்களால் சூழப் பட்டுள்ளது. எத்தகைய மதில்கள்? மதில்கள் மலை போல் உயர்ந்தவை. அந்த மலைமேல் வெண்ணிலா ஒன்றல்ல பல தவழ்ந்து வந்தால் எப்படியிருக்கும்? அதுபோல, வெள்ளித்தகடுகள் பதிக்கப்பட்ட உயர்ந்த மதில்கள். அவற்றின் உள்ளே சென்றால் ஏழு நிலைகளை உடைய மாடங்கள் – 'நெடுநிலை' மாடங்கள். இவை பலவகை உறுதியான பொருள்களைக் குழைத்துச் சமைக்கப்பட்டவை. இப்படி மதிலும் மாடங்களும் அமைந்த கோட்டைகள் பலவற்றை உடையது தஞ்சை (162).*

ஊருக்கு அருகில் வடவாறு ஓடுகிறது. வெள்ளப்பெருக்கு மிகுந்துள்ள காலங்களில் அலைகள் உயர எழுந்து மடிந்து தாழும் இது ஒரு புறம். மதகுகளில் வாழும் முதலைகளோ நீரை உறிஞ்சி வாரி எறியும். இவற்றை ஒட்டிய அகழிகளிலும் இதேகாட்சி (163).

வீதிகளிலும் பெரிய பெரிய மாடமாளிகைகள் தாம். அவற்றில் மகளிர் கூட்டம். அகில் சந்தனம் முதலிய நறுமணப் பொடிகளைத் தூவியும், நறுமணப் பொருட்களை எரித்தும் நகரையே மணத்தில் ஆழ்த்துகின்றனர். ஊரைச் சுற்றிச் செழுமையான வயல்கள், தோட்டங்கள், அவற்றில் பூத்தும் பரவியும் உள்ள மலர்களும் கொடிகளும் ஊரைச் சுற்றிப் பளிங்குச் சுவர் எழுப்பி ஓவியம் தீட்டியதுபோலக் காட்சி தருகின்றன (165).

தஞ்சை வீதிகள் பெரியவை, நீளமானவை. எப்போதும் அங்கு ஆரவார ஒலிகள் கேட்டுக்கொண்டே இருக்கும். கடலின் அலை முழக்கம் போன்றது அது. அந்த வீதிகளில் தாம் யானைகள்

வரிசையாகச் செல்கின்றன. தொலைவிலிருந்து பார்த்தால் மலைக் காடுகளில் ஏறும் யானைக் கூட்டம்போல அது இருக்கிறது. அத்தகைய நகரில் மலைபோல் மதிலும் கோட்டையும் உள்ளன (166).

ஏழுநிலை மாடங்கள் நிறைந்த வீதிகள் என்றோம். அவற்றின் சுவர்களிலும் தூண்களிலும் செல்வ வளத்தைக் காட்டுவனபோலப் பலவகையான மணிகள் பதிக்கப்பட்டுள்ளன. அவை சிந்தும் ஒளிக் கீற்றுகளால் தஞ்சை நகருக்கு இரவு என்பதே இல்லை. இருளும் இல்லை (167). அழகு மட்டுமன்று. வளமும் இருந்தது என்பது குறிப்பு. வீதிகளைச் சுற்றிவரும்போது இசைக்கருவிகள் எழுப்பும் இன்னோசை களையும் நாடக சாலையில் பெண்கள் பாடும் பாட்டொலியையும் கேட்கலாம் (169). ஆடலும் பாடலுமாக மக்கள் மகிழ்ச்சியில் திளைத்த காலம்.

தஞ்சையைப் பற்றி இவ்வளவு பாடும் கருவூரார் கங்கை கொண்ட சோழேச்சுரப் பதிகத்தில் கோயில் பற்றியோ, தலம் பற்றியோ, ஊர் பற்றியோ விரிவாகப் பாடவில்லை என்பதைக் குறிக்க வேண்டும். காரணம் தெரியவில்லை. அதேபோல, தஞ்சையின் அகழி, மதில், கோட்டை, வீதி, மாடம், சுற்றியுள்ள பொழில்கள், வடவாறு இவற்றைப் பாடும் கருவூர்த்தேவர் பெரிய கோயிலின் அமைப்பை - விமானத்தின் இரட்டை மாடிக் கம்பீரத்தை - ஏனோ குறிக்கவில்லை. இத்தனைக்கும் கோயில் கட்டப்பட்ட போது அவர் உடனிருந் திருக்கிறார் என்பது வரலாற்றுச் செய்தி.

### விழாக்கள்

வளமான வாழ்வு, அமைதியான சூழல், எல்லாரும் எல்லாமும் பெற்று வாழ்ந்த நிலையில் ஊரில் திருவிழாக்கள் நடப்பதில் வியப்பில்லை. ஆடியும் பாடியும் மக்கள் பொழுதுகளை மகிழ்ச்சியாகக் கழித்தனர். தேர்கள் கோயில்தோறும் இருந்தன. தேரோட்டம் பெரிய விழாவாக இருந்தது. இன்றும் அதன் மரபு தொடர்வது பெருமைதருவது தான். தில்லையாகிய சிதம்பரத்தில் அப்படி விழா நடந்தபோது மக்கள் வாயால் பாடியும், குழல் கருவிகள் வாசித்தும், ஆடியும் திருமுறைகள் பாடி இறைவனை ஏத்தியும் பேரொலியுடன் கடல்போல முழக்கமிட்டும் மகிழ்ந்தார்கள். கூடவே மந்திரங்களின் வேதமுழக்கமும் ஒலித்தது. (15) அதனால் தில்லைக்கு 'மணம்கொள் சீர்த்தில்லை' என்றே பட்டம் வழங்குகிறார் திருமாளிகைத் தேவர் (35). இங்கு மணம் என்பது பல விழாக்கள் என்றே உரை எழுதுகிறார்கள். 'தேரார் விழவு ஓவாத் தில்லை' (271) என்கிறார் புருடோத்தம நம்பி. 'தேரார் வீதி' (300) என்கிறது திருப்பல்லாண்டுப் பதிகம்.

மக்கள் வாழ்வு பற்றியும் அவர்களுடைய ஆடை, அணிகள், தொழில் பற்றிய குறிப்புகள் அதிகமாகத் திருமுறைகளில் பதிவு

செய்யப்படவில்லை. சங்க இலக்கியம் தொட்டு ஏறக்குறைய இதே நிலை. மன்னன் அரண்மனை, போர், என்பன போலப் பாடுபொருள் அமைகின்றனவே அல்லாமல் எளிய மாந்தர் பற்றிய விரிவான செய்திகள் காணோம். திருவிசைப்பாவும் இதற்கு விதிவிலக்கன்று. இருக்கின்றவற்றைத் திரட்டி ஒருவாறு சமுதாய நிலையை உணர முயல்வோம்.

சோழப் பேரரசுக் காலம் தொடங்கி, இறைவழிபாட்டிலும் கோயில் சார்ந்த பணிகளிலும் அந்தணர்கள் ஆட்சி பெற்றிருந்தனர் என்பது வரலாறு கூறும் உண்மை. பன்னிரு திருமுறைகளிலும் இதற்குப் பல சான்றுகள் உள்ளன. ஒன்பதாம் திருமுறை கோயில் திருமுறை என்றே சொல்லத்தக்கது என முன்னர்க் குறிக்கப்பட்டது. சரிபாதிக்கு மேலான பாடல்களைப் பெற்ற தில்லைக் கோயிலில் இருந்த அந்தணர்கள் பற்றிய பல பதிவுகள் உள்ளன.

நான்கு மறைகளையும் கற்று, முத்தீ வளர்த்து அதையே தொழிலாகக் கொண்ட அந்தணரால் அழகு பெற்றது தில்லை (13). மற்றவரால் அறிய முடியாத மேலான கருத்துகளை எல்லாம் அறிய, வல்ல மறையோரின் சிந்தையில் எப்போதும் வீற்றிருப்பவன் சிவபரம் பொருள் (83). அவர்கள் நாள்தோறும் ஓமகுண்டம் வளர்த்து, நெய் வார்த்துப் பிழையில்லாமல் மந்திரங்களை நாவால் உச்சரித்து வேள்வி செய்கிறார்கள் (86). அந்த வேள்வி ஒரு நாளும் தடைப்பட்டு நின்று போகவில்லை. ‘முடியா முத்தீவேள்வி மூவாயிரர்’ என்று அந்தணர் எண்ணிக்கையையும் தில்லை மூவாயிரவரையும் ஒரு பாட்டு குறிக்கிறது (186). பரம்பொருளும் இவர்களுடன் கலந்து விளையாடுகிறது மகிழ்ச்சி அடைகின்றான் (189).

மற்ற அருளாளர்களை விடக் கண்டராதித்தர் தாம் இந்தத் தில்லை மூவாயிரவர்க்குப் பெரிய தகுதி கொடுத்துப் பாடுகிறார். அந்தணாளர் யார்? என்ற கேள்விக்கு விடை சொல்வது போல ஒரு பாடல். அதில் அவர்களுக்கு இருக்க வேண்டிய இலக்கணங்கள் இன்னின்ன என்று வரையறை செய்யும் பாடல் அது.

**ஓவா முத்தீ அஞ்சு வேள்வி**
**ஆறங்கம் நான்மறையோர்**
**ஆவே படுப்பார் அந்தணாளர்**
**ஆகுதி வேட்டுயர்வார்**
**மூவாயிரவர் தங்களோடு** *(196)*

எப்போதும் அணையாத மூன்று தீக்களையும், ஐந்து வகை வேள்விகளையும், ஆறு அங்கங்களையும், நான்கு வேதங்களையும் முறையே வளர்த்து, அவற்றை முறையே கற்று, முறையே ஓதும் அந்தணர்கள் - பசுக்களின் நெய், பால், தயிர் இவற்றை ஆகுதிகளாகச்

சொரிந்து வேள்விகளைப் பிழையின்றி நிகழ்த்துவதால் மேம்பட்டவர்கள் அவர்கள் ஓதும் வேதமந்திரங்களைக் கேட்டுக் கேட்டு அங்கு இருக்கும் வண்டுகளும் 'தெத்தே' என்று இசை எழுப்பிப் பாடுகின்றன என அழகுக் கற்பனையையும் தருகிறார் கண்டராதித்தர் (195).

இவர்கள் பந்த பாசம் எல்லாம் நீக்கியும், பசுபாசம் நீக்கியும் வாழும் முனிவர்களுடன் தில்லைப் பெருமானை வழிபடும் தகுதி பெற்றவர்கள். மண்ணக வாழ்வோடு ஒட்டிவரும் பந்த பாசங்களையும், பிறவிப்பயனாக வருகின்ற ஆணவ மலத்தையும் அறுத்த நல்ல அந்தணர்கள் அன்று வாழ்ந்திருக்கிறார்கள் (219). நான்கு மறைகளையும் ஆழமாகக் கற்று ஆய்வு செய்யும் முனைப்பும் பெற்ற இவர்கள் (231), வேள்வி செய்வதையே மெய்யான தொழிலாகக் கொண்டவர்கள். வேறு சிந்தை அவர்களுக்கு இல்லை (240). ஆதலால் 'தேறிய அந்தணர் சிந்தை' (262) என்று அவர்களுடைய அருளுள்ளம் போற்றப்படுகிறது.

இவை சிதம்பரத்து அந்தணர் பற்றிய குறிப்புகள், வேறு தலங்களில் வாழ்ந்தவர்கள் பற்றிய செய்திகள் அதிகம் இல்லை. தில்லையில் மூவாயிரம் வாழ்ந்ததுபோல, திருவாவடுதுறைக் கோயிலில் ஆயிரம் பேர் இருந்திருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் தவறாது முறையாக வேதம் ஓதியவர்கள். மேலான புகழை உடையவர்கள். பூசுரர் என்று போற்றப்பட்டவர்கள் (58). திருவிடைக்கழியில் வாழ்ந்த மறையவர்கள் திருவிழாக் காலங்களில் மங்கலச் செயல்களை அழகுபடுத்தியிருக்கிறார்கள் (73). எதை எப்படிச் செய்ய வேண்டும் என முறை 'தெரிந்த வைதிகர்'கள் (75). தங்கள் உறுதிப்பாட்டில் சிறிதும் பிறழாதவர்கள். "திடம்கொள் வைதிகர்" (77). இவை மட்டுமல்ல தாம் கற்றதிலும் தாம் ஓதுவதிலும் தெளிந்த அறிவுடையவர்கள். 'தெருண்ட வைதிகர்' (78), திருக்களந்தை அந்தணர் வேதம் ஓதும் பேரொலி கடலின் அலைகள் முழக்கத்தையும் மிஞ்சியிருக்கும் (91) சாட்டியக்குடி அந்தணர்கள் நான்கு முறைகளையும் முழுவதுமாகக் கற்றவர்கள். 'தங்கள் நான்மறை நூல் சகலமும் கற்றோர்' என்று கருவூரார் போற்றுகிறார் (159). 'சகலமும்' சொல்லில் உள்ள உம்மை முற்றுப் பொருளில் வந்துள்ளது. அவர்கள் அந்நாளில் எவ்வளவு படித்து இருந்தனர் என்பதற்கு இது சான்று.

மக்கள் வளமாகவும் மகிழ்ச்சியோடும் வாழ்ந்தனர் என்பது முன்னரும் குறிக்கப்பட்டது. ஆடலும் பாடலும் ஊரில் எங்கும் ஒலித்தன. அப்போதிருந்த இசைக்கருவிகள் பற்றிய பட்டியலும் ஒரு பாட்டில் உள்ளது. துந்துபி, குரல், யாழ், மொந்தை, முழவு இவை கோயிலில் இசைக்கப்பட்டன. இறைவனின் திருநடனத்தின்போது இவற்றை வாசிப்பது மரபாக இருந்தது (83). சிலம்பு, தமருகம்,

சதங்கைகளும் இருந்தன. கின்னரம், முழவம், யாழ், வீணை என்பனவும் வாசிக்கப்பட்டன.

தன்னக மழலைச் சிலம்பொடு சதங்கை
தமருகம் ..........................
கின்னரம் முழவம் மழலை யாழ் வீணை (108)

என்று பாடலில் வருகிறது. கின்னரம் ஒரு வகையான நரம்புக் கருவி. வீணை கருவூர்த்தேவர் காலத்திலேயே வழிபாட்டுக்குரிய இசைக் கருவி ஆகிவிட்டதை அறிகிறோம். யாழும் அன்று வழக்கத்தில் இருந்திருக்கிறது. இவற்றுடன் திருமுறைகளை வாயால் பாடும் அடியார்களும் இருந்தனர்.

தந்திரி வீணை கீதமுன் பாடச்
சாதி கின்னரம் கலந்து ஒலிப்ப
மந்திர கீதம் தீங்குழல் எங்கும்

என்பது நல்ல அழகான பாடல்.

வீணை முதலில் மீட்டப்படுகிறது. அதைச் சுருதியாகக் கொண்டு அடியார்கள் கீதம் பாடுகிறார்கள். அதற்கேற்பக் கின்னரம் வாசிக்கப்படுகிறது. இடையிடையே மந்திர கீதங்களும் முழங்கு கின்றன. இந்தக் கூட்டிசையுடன் புல்லாங்குழலும் ஊதப்படுகிறது. இவை எல்லாம் எங்குமே நாத இன்பத்தைப் பரப்பும் இடம் திருவிடைமருது என்று பாடுகிறார் கருவூரார் (174).

அன்பர்கள் கூட்டமாக இருந்து பாடியும், இசைக் கருவிகளை வாசித்துமாக இறைவழிபாட்டில் எழுப்பிய பேரொலி விண்ணளவும் சென்று ஒலித்தது.

குழல்ஒலி யாழ்ஒலி கூத்தொலி ஏத்தொலி
எங்கும் குழாம் பெருகி
விழவொலி விண்ணளவும் சென்று விம்மி

என இதைச் சேந்தனார் பாடுகிறார் (299). ஊரெல்லாம் இசை முழக்கம். தெருவெல்லாம் தமிழோசை. 'தென்னன் தமிழும் இசையும் கலந்த சிற்றம்பலம்' எனப் பல்லாண்டு பாடுவது பொருந்துவதே (237).

தெருவெல்லாம் களியாட்டம்; மகிழ்ச்சிக் கூத்து; 'உழவர் ஓதை மதகோதை' எனச் சிலப்பதிகாரம் பாடியது போல, திருவிசைப்பாவும் அத்தகைய சூழலைக் குறிக்கிறது. "நீர்ப்பழனம் கெழுவு கம்பலை' 'கிஞ்சுக மணிவாய் அரிவையர் தெருவில் கெழுவு கம்பலை' (107, 106) என்பன போலக் கருவூர்த்தேவர் திருக்கீழ்க்கோட்டூர் மணியம்பலத் தலத்தின் இன்பப் பெருக்கைப் பதிகம் முழுவதிலும் பாடுகிறார். 'கம்பலை' என்பது ஆரவாரம் என்னும் பொருளில் வரும். வயலில்

ஆரவாரம், தெருவில் ஆரவாரம், மாட மாளிகைகளில் இந்த முழக்கம். ஆடவர் பேரொலி, மகளிர் இன்னொலி எனக் கவலையின்றி வாழ்ந்த மக்கள் மனநிலை திருவிசைப்பாவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இசை, ஆடல், பாடல், கருவிகள் என்ற இவை முறையான பயிற்சி இருந்தால் ஒழிய மேடையேற்றம் பெறமுடியா. ஆதலால் இவற்றைப் பயிற்றுவிக்கச் சாலைகள் இருந்தன. தஞ்சையில் அப்படி இருந்த நாடக சாலைகள் மிகவும் பெரியன. மலை போல அமைப்புக் கொண்டவை. 'விலங்கல் செய் நாடக சாலை' (169) என்று கருவூரார் குறிக்கிறார். தில்லையிலும் அத்தகைய சாலைகள் இருந்ததைக் காடநம்பியன் பதிகம் தெரிவிக்கிறது. அங்கிருந்த மகளிர் மேடை ஏறுவதற்கு முன்னால் பாடகம், நூபுரம் பல வகையான சிலம்புகள் ஆகியவற்றை அணிந்தனர். கைகளில் வண்ண வளையல்களையும் அணிந்துகொண்டு மேடை ஏறி நாடகம் நடித்தனர். இது நாள்தோறும் தவறாமல் நடந்தது.

> பாடகமும் நூபுரமும் பல்சிலம்பும் பேர்ந்தொலிப்பச்
> சூடகக்கை நல்லார் தொழுதேத்தத் தொல்லுலகில்
> நாடகத்தின் கூத்தை நவிற்றுமவர் நாள்தோறும் (192)

என்பது இதைக் காட்டும் ஓவியம்.

கல்வி பற்றிய குறிப்பு ஏதும் காணோம். ஆனால் மறை பொருளாகச் சில சுட்டப்படுகின்றன. உண்மையான கல்வி மெய்ஞ் ஞானத்தையும் மன அமைதியையும் தரவேண்டும். அப்படி தருகின்ற நல்ல நூல்களையே படிக்க வேண்டும். அப்படி இல்லாமல் கூர்மையான அறிவே இருந்தாலும் அது நல்லது இது நல்லது என்று வாதம் புரிந்து வீண் பொழுதுபோக்குவது உண்மையான கல்வி ஆகுமா? அது உண்மையில் மனிதனையும் அவன் மனத்தையும் அலைக்கழித்து துன்பம் தரும் ஒன்றாகவே முடியும்.

'அது மதி இது என்று அலந்து அலைநூல் கற்று' என வரும் சேந்தனார் பாடல் வரி (17) இந்தக் குற்றமுடைய கல்வியைக் குறிப்பாகச் சுட்டுகிறது. 'அறிவிலே தெளி'வை எது தருகிறதோ, இதுவே மெய்ம்மைக் கல்வி என்பது தெளிவு.

திருமாளிகைத் தேவர் நூல்களை இரண்டு வகையாகப் பிரித்துக் கூற எண்ணியிருப்பார் என்று கருத ஒரு பாடல் இடம் தருகிறது. 'பசு நூல் கற்கும் பிச்சர்' (43) என்று அவர் சாடுகிறார். உரையாசிரியர் பசு என்பதைச் சிறு தெய்வம் எனக் கொள்கிறார். சைவ சித்தாந்த மரபில் பசு என்பது உயிரை - ஆன்மாவைக் குறிக்கும் சொல். உயிர் இந்த மண்ணில் இருக்கும்போது, அதனுடைய இன்பத் தேட்டத்துக்கான வழிகளைத் தேடி வருந்துகிறது. இந்த

இன்பங்களைக் காட்டும் நூல்களே பசு நூல்கள் எனக் கொள்ளலாம் என்றால் இதற்கு வேறான வேறு நூல் உண்டோ? உண்டு பதி நூல் என வெளிப்படையாகத் திருமாளிகைத் தேவர் சொல்லாவிட்டாலும் கூட, 'கற்றதனால் ஆய பயன் என்கொல்' என்று குறள் கேட்கும் கேள்வியை அடிப்படையாகக் கொண்டு பார்த்தால், இறைவனை நாடவும் அவனருள் பெறவும் வழிகாட்டும் நூல்களே மெய்யானவை. மேலானவை என்று தெளிவு பெறலாம். இந்த அறிவையே 'பிதுமதி' - மேலான அறிவு - பெருமைக்குரிய ஞானம் என்று திருமாளிகைத் தேவரே பாடுகிறார் (17).

இந்தக் கருத்துகள் மூலம் இன்னொன்றும் தெரியவருகிறது. 'என்தெய்வம் பெரிது' 'உன் தெய்வம் அல்ல' என்று கூறி வீண் சண்டையிட்டுப் பொழுதுபோக்கிய வீணர்களும் அக்காலத்தில் சமுதாய உறுப்பினர்களாக இருந்திருக்கிறார்கள் என்பதே அது. தங்கள் கருத்துகளுக்கு ஒத்துப் போகாத பிற சமயத்தவர்களைக் கடுமையாகச் சாடிய பாடல்களும் திருவிசைப்பாவில் உள்ளன. திருமாளிகைத் தேவரின் நான்காம் பதிகம் முழுதும் இந்த வசவு மொழிகளைக் காணலாம். தமிழ் மொழியில் உள்ள பழிச்சொற்களின் பட்டியலாக நான்காம் பதிகம் உள்ளது. 'நீறணி பவளக்குன்றமே' போன்ற அருட்பனுவல்களை இயற்றிய திருமாளிகத் தேவர் இப்படியும் பாடியிருப்பாரா என்று மு. அருணாசலம் ஐயப்படுவது இசைவானது தான் (70). அது அக்காலச் சமுதாயத்தில் சமயநூல் கற்றவர்களின் தொழிலைக் காட்டுவதாக உள்ளது.

இந்தச் சமயம் அந்தச் சமயம் என்று மட்டும் இல்லை. தமிழ்மொழி பேசியவர்களையும், தமிழில் பாடியவர்களையும் எள்ளி நகையாடிய ஆரியமொழி பேசியவர்கள் அன்று இருந்திருக்கிறார்கள். தெய்வ வழிபாட்டில் பயன்படுத்தச் சிறந்த மொழி தமிழா சமஸ்கிருதமா என்ற பட்டிமண்டபம் அன்றும் நடந்திருக்கும் போலும். தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்து பிழைத்துத் தமிழையே பேச்சு மொழியாகக் கொண்டிருந்தும், ஆரியமொழி மந்திரங்களையே மிகப் பெரிதாக மதித்துத் தமிழைத் தாழ்த்தியவர்களைத் திருமாளிகைத் தேவர். 'அசிக்க ஆரியங்கள் ஓதும் ஆதர்' என்று சாடுகிறார் (39). பிறர் நகைக்கும்படியாக ஆரிய மொழியில் மந்திரங்களை ஓதுகின்ற அறிவிலிகள் என்பது இதற்குப் பொருள். ஆரியமொழி மந்திரங்கள் ஒலிகள் பிறழ்ந்து ஓதப்பட்டால் தீமையே தரும் என்ற செய்தி தெரிய வருகிறது. பொதுவாகத் திருவிசைப்பா முழுவதுமே நான்மறை ஓதும் அந்தணர்கள் பெருமையுடன் காட்டப்பட்டுள்ளனர். அந்தண வெறுப்போ, நான்மறை வெறுப்போ, வேள்விகள் யாகங்கள் வெறுப்போ, பாடல்களில் எங்கும் காணோம். அப்படியிருக்க இந்தப் பாடலில் மட்டும் இந்தக் கண்டனம் வருகின்றது என்றால் சில 'தீவிரவாதிகள்' ஆரியம் பேசிச் சமுதாய

ஒற்றுமையைக் குலைத்திருப்பார்கள் என்றே எண்ணத் தோன்றுகிறது. தாய்மொழியை மறந்து அந்நிய மொழியைப் போற்றும் எல்லாரும் ஆதர்கள் - அறிவிலிகள் தாம் என்பதை இங்குக் காணமுடிகிறது. கூடவே தமிழின் தனித்தன்மையையும் மரபு வழிபட்ட அதனுடைய இலக்கியச் செறிவையும் பேணிக் காத்தது சமுதாயத்தையும் நினைத்து வணங்கத் தோன்றுகிறது.

நிலையான, அழுத்தமான பண்பாட்டு மரபுகளை, இனிவரும் சந்ததியினருக்காகப் பதிவு செய்தவர்கள் முன்னாளில் வாழ்ந்த சான்றோர்கள். அவர்களுடைய வாழ்வும் செயலும் வழிகாட்டும் கலங்கரை விளக்கங்களாக என்றும் திகழ்கின்றன. அவற்றால் அவர்கள் இன்னும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அந்த முன்னோடிகளைப் போற்றி வணங்குவது மரபு வழிபட்ட தமிழ்ப் பண்பாடாகத் தொடர்கின்றது.

திருஞானசம்பந்தர் தம் வாழ்நாளிலும் தமக்கு முன்னாலும் வாழ்ந்த நாயன்மார்களைப் பாடல்களில் குறித்து வணங்குகிறார். 'நற்றமிழ் வல்ல ஞானசம்பந்தனும் நாவுக்கரையனும்' என அவருடன் திருநாவுக்கரசரையும் சேர்த்துச் சுந்தரர் பாடுகிறார். 'கண்ணப்பன் ஒப்பதோர் அன்பு' எனத் திருவாசகம் வேடனைத் தொழுகிறது. இது ஒரு பண்பட்ட மரபு, சாதி, இன, சமுதாய மதிப்பு இந்த எல்லைகளைத் தாண்டி அடியார் ஒருவர் மற்ற அடியார்களை மதித்துத் தொழுவது தான் சமய வாழ்வில் விழுமியம், அதனால்தான் சுந்தரர் திருத்தொண்டத் தொகை பாடி எல்லார்க்கும் - அடியார்க்கும் அடியனாகிறார்.

இப்படித் தமக்கு முன் வாழ்ந்த அருளாளர்களின் வாழ்வைப் போற்றவதும் அவர்கள் பணியைப் பாராட்டுவதும் ஒருவகையான வழிபாடுதான். பூந்துருத்தி நம்பி காடநம்பி தம் பாடல்களில் முன்னோர்களைப் பற்றிய குறிப்புகளைத் தருகிறார். கணம்புல்லர், சுந்தரர் ஆகியோருடைய பெயர்கள் போற்றப்பட்டுள்ளன (186-189). சேக்கிழார் 12ஆம் நூற்றாண்டில் தான் திருத்தொண்டர் புராணம் பாட உள்ளார். அவருக்கும் முன்பே இந்த நாயன்மார்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகளைத் திருமுறைகள் தருகின்றன. வலிய ஊழ்வினையால் வந்து வந்து எனக்குத் துன்பத்தையே தருகின்ற பிறவி நோய்களைக் கூட அறுக்கின்ற வல்லமையுடையவர் சீர்காழிக் குழந்தை திருஞானசம்பந்தர் என்று நம்பி பாடுவது முந்தையோர் பாடல்களில் அவருக்கிருந்த ஆழ்ந்த நம்பிக்கையைக் காட்டும்.

> எம்பந்த வல்வினை நோய் தீர்த்திட்டு எமையாளும்
> சம்பந்தன் காழியர் கோன் (188)

என்பது திருவிசைப்பா.

# 11. தத்துவம்

தத்துவம் என்ற சொல் பல பொருள்களைத் தருகின்றது. இது வடமொழிச் சொல். அதற்கு 'நீயே அது' (தத் - அது: த்வம் - சீ) என்பதே நேரான பொருள். இதனுடன் முன்னிலை ஒருமை வினை முற்று ஒன்று சேர்த்து 'தத்வமசி' நீயே அதுவாக இருக்கிறாய் என்று வேதங்களிலும் உபநிடதங்களிலும் மகாவாக்யமாகப் போற்றப் படுகிறது. தமிழில் வந்து கலந்து இணைந்துவிட்ட வடசொற்களுள் நாள்தோறும் பயன்படுத்தப்படும் சிறப்பிடமும் பெற்றுவிட்டன.

'மேலான ஒன்றை நாடுதல்', 'மனித அறிவுக்கும் அப்பாற்பட்ட ஒன்றைப் பற்றி எண்ணுதல்' என்பன போலத் தத்துவம் பயின்று வருகிறது. தத்துவம் கடவுள், ஆன்மா, வினை சார்ந்துதான் இருக்க வேண்டும் என்பதில்லை. இறைமறுப்பும், பொதுவுடைமையும் கூட ஒருவகையில் தத்துவங்களே. அறிவு கொண்டு ஆராயப்படும் எதுவும் இதன்கீழ் வருகின்றன.

திருவிசைப்பா பக்தி நூலாகவும் சமய நூலாகவும் இருப்பதால் இறைவன் அருள், ஊழ்வினை, பக்திச் சிறப்பு ஆகியவை பற்றிய கருத்துகள் தொடப்பட்ட பெட்டகமாகச் சிறப்பதில் வியப்பேதும் இல்லை. சைவ சமயஞ் சார்ந்த நூலாகையால் சிவபெருமான் திருவருளே விதந்து ஓதப்படுவதும் இயல்பு தான். அறிவுநூல் என்று சொல்லப்படுவது கூடச் சிவபரம்பொருள் சார்ந்ததே என்ற தெளிவில் அருளாளர்கள் இருந்தனர் (104).

### பரம்பொருள் தன்மை

அந்த இறைவன் எப்படிப்பட்டவன் என்ற தத்துவ விசாரம் திருமாளிகைத் தேவருக்கு இருந்தது. ஒளிவளர் விளக்காக வந்து உள்ளே ஒளிரும் சோதி, பிறவி இருளை அறுக்கும் பிழம்பு என்றெல்லாம் மரபுவழிப்படி குறிப்பதோடல்லாமல் நான்காம் பாடலில் அழகிய கருத்தை முன் வைக்கிறார். பெரியதில் பெரியதாகவும் சிறியதில் சிறியதாகவும் பெண்ணினுள் ஆணாகவும் ஆணினுள் பெண்ணாகவும் இருக்கின்ற ஒன்று. கரியதில் வெளுப்பும் அதுவே,

> **பெருமையில் சிறுமை பெண்ணொடு ஆணாய் என்**
> **பிறப்பு இறப்பு அறுத்த பேரொளியே**
> **கருமையின் வெளியே......** (4)

என்று போகிறது பாடல். கூர்ந்து கவனிக்கத்தக்க செய்திகள் உள்ளன. பெருமை என்று எதை எதை எல்லாம் நினைக்கிறாயே அவை

எல்லாமாகத் தானே இருந்து, ஆனால் எளிமையில் சிறியதாகி நிற்கும் பரம்பொருள்; பெண்ணும் ஆணும் என உயிர்ப்பகுதிகள் இருந்தாலும் ஒன்றுக்குள் ஒன்றாகத் தானே ஆனவன்; பிறப்பு இறப்பு என்பன மயக்கங்கள் அவை தொன்றுதொட்டு நடந்துவருவனவே என்று உணர்த்தி அந்த மயக்கங்களை முழுவதுமாக அறுத்தவன், கரியதில் வெண்மை, வெண்மையுள் கருமை என உள்ளேயே இரண்டுமானவன் .இப்படி எல்லாம் விளக்கம் சொல்லப்படும் அளவு கடவுள் தன்மையை - பரத்துவத்தைப் பேசுகிறது இப்பாடல்.

கருவூர்த்தேவர் இதே தத்துவக் கருத்தை உடையவர் என்று தோன்றுகிறது. தில்லைப் பதிகத்தில் ஒரு பாட்டு.

**சீர்த்த திண்புவனம் முழுவதும் ஏனைத்**
**திசைகளோடு அண்டங்கள் அனைத்தும்**
**போர்த்த தம்பெருமை சிறுமைபுக்கு ஒடுங்கும்**
**புணர்ப்புடை அடிகள்** *(87)*

என்று புகழப்படும் இந்த உறுதியான நிலவுலகம் முழுவதுமாகவும், மற்ற எட்டுத் திசைகளில் உள்ளவையும், அவற்றைத் தாண்டி இருக்கும் சுடர்மிகும் அண்டங்கள் அனைத்தையும் தனது ஆற்றலாலே அடக்கி நிற்கும் பெரும்பொருள்; அப்படி அடங்குவதாலே அவையெல்லாம் சிறியனவாகப் போய்விடுகின்றன. காலத்தோடு கற்பனை கடந்து, இடமாகிய எல்லையையும் கடந்து நின்று கண்முன் தெரியும் கண்ணிற்கும் தெரியாத எல்லாப் பேரண்டங்களையும் தாண்டிய ஒன்றின் எல்லையற்ற பேராற்றலை இந்தப் பாட்டு குறிக்கிறது.

அண்டங்கள் சிறிதாகப் போகும் பெருமை படைத்த தெய்வம் என்பது சரி. இது அதனுடைய வியாபகத்தை - அகன்ற பரப்பைக் காட்டுகிறது. அண்டங்கள் அணுக்களாகக் கருதப்படும் அளவு சிறியனவாக ஆகிவிட்டன. இது தெய்வத்தின் பேராற்றலை - பெருமையைக் குறிப்பதே. ஆனால் அதுபோல ஓர் அணுவை அண்டம் எனும்படி பெருமைப்படுத்த முடியுமா? அதாவது அணுவிலும் சிறியதாய், அணுவுக்குள் அணுவாய்க் குறுகிப் போய் அணுவே அண்டம் எனச் சொல்லும்படி இறைவன் சிற்றுருவமும் கொள்வானாம். கங்கைகொண்ட சோழேச்சுவரத்துக் கடவுளின் நுண்ணாற்றலும் பருவாற்றலும் இத்தகையன. பெரியதில் பெரிது; சிறியதில் சிறியது என்ற கடவுள் கோட்பாடு தமிழனின் சமயம் தந்த செல்வம். இதுவே அட்டாங்க யோகத்தில் அனிமா, மகிமா எனக் கூறப்படுகிறது.

**அண்டம் ஓர் அணுவாம் பெருமைகொண்டு அணு ஓர்**
**அண்டமாம் சிறுமை கொண்டு அடியேன்**
**உண்ட ஊண் உனக்காம் வகை எனது உள்ளம்**
**உள்கலந்து எழுபரஞ்சோதீ** *(138)*

இந்தப் பாட்டில் இன்னொரு கருத்தும் ஆழமாகப் பதிந்துள்ளது. சிவனடியார்கள் எதைச் செய்தாலும் 'சிவனுக்கு' என மனத்துள் எண்ணித் தொடங்குவது மரபு. அவ்வகையில் உண்ணும் உணவு கூடச் சிவனுக்குப் படையலாகிறது; ஆக வேண்டும். 'சிவார்ப்பணம்' என்ற கோட்பாடு இதுவே. எல்லாவற்றிலும் 'இறைவனைக் காணவேண்டும், எல்லாவற்றையும் அவனுக்கே படைக்கவேண்டும் என்ற வேட்கை எழுந்த உள்ளத்துள் ஆசைகள், தன்னலம் முதலில் தற்சார்புத் தேடல்கள் அற்றுப்போகும் என்பது முடிவு. ஏனெனில் மிகமிக நுண்ணியதாக இருக்கும் பொருளிலும், இடத்திலும் கூட அவனே பரவி இருக்கிறான் அப்படி இருப்பதாலேயே அவனைச் சிறியவன் என்று மனிதமனம் கருதிவிடக் கூடாது. நுண்ணியது, பெரியது எனக் கணக்கிடும் வல்லமை மனிதனுக்கு ஏது? அதனால் கருவூரார் 'நின் பெருமை நுண்ணிமை இறந்தமை அறிவேன்' என்று கூறித் தொழுகிறார் (147). இது தான் மெய்ம்மை; மெய்ப்பொருள் உணர்வு கைவரப்பெற்ற ஞானநிலை.

அதில் தோய்ந்து இலயித்துப் போனவர்களுக்கு இரவு பகலாக, அருவமும் உருவமுமாக, கல்லால நிழலாக, ஆரா அமுதமும் ஆக இறைவன் வருவானாம்.

> ***அல்லாய்ப் பகலாய் அருவாய் உருவாய்***
> ***ஆரா அமுதாய்க்***
> ***கல்லாய் நிழலாய் கயலைமலையாய்*** *(236)*

ஒன்றே பலவாகும். மேன்மையைத் திருவாலி அமுதனார் பாடி மகிழ்கிறார். 'ஒருமையில் பலபுக்கு உருவி நின்றாய்' எனக் கருவூரார் முன்னர்ப் பாடியதும் இதுவே (4).

சிவபரம்பொருளுக்குத் 'தான்தோன்றி நம்பி' என்பது ஒரு பெயர். வடமொழியில் சுயம்புநாதர் என்று இதைக் கூறுவர். எந்த ஒரு சார்பும் தனக்கில்லாமல், எல்லாச் சார்புகளும் தன்னிடத்து வந்து ஒடுங்குமாறு தானே இருக்கும் பரம்பொருள் நிலை அது. 'தானே வளர்ந்து தானே இருந்த தகைசால் எந்தை' என்று அருணகிரிநாதர் சிவபிரானைப் போற்றுகிறார். 'தான்தோன்றி நம்பி' என்பது பல கோயில்களில் பெருமானுக்கு வழங்கப்படும் பெயர். திருவீழிமிழலைப் பதிகத்தில் இந்தத் தொடர் வருகிறது.

ஏன் இந்தப் பெயர் என்று எண்ணிப் பார்க்கலாம். அழிவு, அழிவின்மை என்னும் இரண்டு பண்புகள் நிலையாமை, நிலைபேறு என்னும் பொருளில் ·வழங்கப்படுகின்றன. உலகத்தில் உள்ள பொருள்கள் இதற்கு முன்பிருந்த ஏதோ ஒன்றிலிருந்தோ, பலவற்றின் கலப்பாலோ தோன்றுவன. எப்படி அந்தந்தப் பொருளின் மூலமோ மூலங்களோ அழிந்து மறைந்தனவோ, அதுபோல இவையும் மறைந்து

போகும். அப்படியானால் எது அழியாமல், மறையாமல் நிற்கும் எனக் கேள்வி எழலாம். தானாகத் தோன்றிய ஒன்று. தன் தோற்றத்துக்கு வேறு ஒன்றை வேண்டாத ஒன்றே அழிவும் இல்லாமல் இருக்கக் கூடியது. 'என்றுமுள தன்மை' என்று இதைத் தத்துவம் கூறும். இந்த நித்தியம் பரம்பொருள் ஒன்றுக்கே உண்டு என்பதே ஞானிகள் கண்ட முடிபு. இதை வலியுறுத்தவே புராணங்களும், தொன்மங்களும் படைக்கப்பட்டன.

தக்கன் செய்த யாகம், சூரபன்மன் அழிவு, இராவணன் வீழ்ச்சி என்பன போன்ற செய்திகள் இறைவன் ஒருவனைத் தவிர யாரும் எதுவும் அழிந்து தான் தீரும் என்பதைக் குறிப்பனவே. முற்றும் உணர்ந்தவனும், இயற்கை உணர்வுடையவனும் பரம்பொருள் ஒருவனே என்பது கண்கூடு.

ஆனாலும் தான் ஒருவனாக நின்று பொலியும் அதே கடவுள்தான் உலகத்திலுள்ள உயிரினங்களையும் படைத்துக் காக்கிறான். முத்தொழில்கள், ஐந்தொழில்கள் எனத் தத்துவ நூல்கள் இதை விதந்து ஓதுகின்றன. எல்லாமும் எல்லாரும் அவனே என்று ஆனபின் - தெளிந்த பின்னர் "எதைப் பற்றி நினைந்துத் தனியாகப் பார்ப்பது? எவர் நமக்கு உரிமையுடையவர் என ஏற்றுக் கொள்வது? எல்லாரும் கடவுள் தன்மையின் வெளிப்பாடுகளே; எல்லாமும் தெய்வத்தின் காட்சிகளே" என்ற தெளிவு பிறந்துவிடுகிறது. அனுபூதி நிலையில் இதை மிக உயர்வாகப் போற்றுகிறார்கள். 'பார்க்குமிடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைந்திருக்கும் பரிபூரண ஆனந்தம்' என்று தாயுமானவர் இதைப் பாடுகிறார்.

கருவூர்த்தேவர் காட்டும் தலைவியின் உளளத்தில் இந்தத் தத்துவச் சிந்தனைகள் அரும்பியதில் வியப்பில்லை. பரம்பொருளை நாயகனாக வரித்த ஆன்மத் தலைவியாயிற்றே! அவள் கேட்கிறாள்.

**யாதுநீ நினைவது? எவரையாம் உடையது?**
**எவர்களும் யாவையும் தானாய்......**
**கண்ணும் நின்றகலான்** (109)

'ஏகம் தத் சத்' - இருக்கும் பொருள் அது ஒன்றே - என்ற வடமொழி வாசகத்தின் மூல ஆணிவேர் திருமுறைகளில் இருக்கிறது என்பதை உணரவேண்டும். ஒன்றுதான் மூலம். அதிலிருந்தே எல்லாம் தோன்றி அழிகின்றன. ஆனால் அது ஒழிவதில்லை என்ற உயர்ந்த பெருங் கோட்பாட்டைக் கருவூரார் காட்டுகின்றார்.

'மூலமாய் முடிவாய் முடிவிலா முதலாய்' (121) என்ற தொடரில் அடிப்படையாக இருப்பன இரண்டே சொற்கள்; மூலம், முடிவு என்பன. அவற்றை மாற்றியமைக்கும்பொழுது எத்தகைய உயர்ந்த தத்துவம் வெளிப்படுகிறது என்று வியப்பு தோன்றுகிறது.

எல்லாவற்றுக்கும் மூலம்
எல்லாவற்றுக்கும் முடிவுண்டு
தனக்கு முடிவில்லை
தானே தனக்கு முதல்

என்பதுதான் கடவுட் கோட்பாட்டின் விழுமிய நிலை. இதுவே சுயம்பு.

**எட்டுருவம்**

சிவபெருமானுக்கு உருவம் இல்லை. ஒன்றாக இருந்து மேம்பட்டவன். தோற்ற ஒழுக்கம் இல்லாத சோதி என்பன போலக் கருத்துகள் இருந்தும்கூட, உருவ அருவ உருஅருவத் திருமேனிகளை வைத்து வழிபடுவது இன்று வரை வழக்கமாக இருந்து வருகிறது. அவ்வகையில் 'அட்டமூர்த்தம்' எனப்படும் எட்டு உருவ வழிபாடு திருமுறைகளில் பரவலாகப் பேசப்படுகிறது. ஐம்பெரும்பூதங்களான நிலம், நீர், தீ, காற்று, வான் இவற்றுடன் ஞாயிறு, திங்கள் என ஒளிதரும் மூலங்கள் இரண்டு; ஆக ஏழு. இவற்றை உணர்க்கின்ற ஆன்மாவாகிய இயமானன் ஒன்று என எட்டு மூர்த்தங்கள்.

அற்புதக் கருத்தேற்றம் இது. நமக்கு மேம்பட்ட பரம்பொருளை எங்கும் தேடிப் போகவேண்டாம். நம்முள், நம்முன் நீராய நிலனாய்....... ஞாயிறாய் திங்களாய் நாமாய் நிற்கிறது என்பது பெரிய தத்துவம். இறைதேடல் என்பது வெளியில் இல்லை. நம்மைச் சுற்றியுள்ள பொருள்களிலேயே உள்ளது என்பது முன்னோர் கண்ட முடிவு. அதனால்தான் 'வானாகி மண்ணாகி' என்று தொடங்கி இறைவனைப் போற்றினர். திருமாளிகைத் தேவர் ஒரே வரியில் இந்தத் தத்துவத்தைப் புரிய வைக்கிறார்.

**எட்டுரு விரவி என்னை ஆண்டவன்** *(36)*

விரவி... ஆண்டவன் என்பது அரிய தொடர். "உள்ளுக்குள் நீ நின்று உலவினதைக் காணாமல் காடுமலை தோறலைந்து காலறுத்தேன் பூரணமே" என்ற சித்தர் பாடல் ஒலிக்கிறது. இதை உணர்ந்த சேந்தனார் அட்டமூர்த்திக்குப் பல்லாண்டு பாடுகிறார். ஏனெனில் எட்டுரு விரவி உள்ளத்தை நெகிழ்வித்துக் கரைத்து அமுதமாக ஊறி நிற்கின்றானாம் ஆடல்வல்லான்'.

**அட்டமூர்த்திக்கு என் அகம் நெக ஊறும்**
**அமிர்தினுக்கு... பல்லாண்டு கூறுதுமே** *(291)*

இந்த எட்டுரு வேறில்லை. நம்மைச் சுற்றியுள்ள இயற்கைப் பொருள்கள். இவற்றைப் போற்றிக் காக்க வேண்டும். இயற்கைச் சூழல் மாசுபடுகிறது என்றும், வளிமண்டலம் துளைவிழுந்து வருகிறது என்றும், உலகம் அழிவின் விளிம்பில் தடுமாறுகிறது என்றும் சான்றோரும் அருளாளரும் உரக்கக் குரல் எழுப்பியும் 'ஆசைகளுக்கு

ஆட்பட்டுப்' போனவர்களின் காதில் விழ மறுக்கிறது. 'எட்டுரு விரவி' இறைவன் நிற்பது ஒரு புறம் இருக்க, வாழ்வின் ஆதாரமாக அவை இருக்கின்றன என்ற மெய்ம்மையே, அன்றே தமிழர் உணர்ந்து போற்றியிருக்கிறார்கள். "மண்ணும் நீ விண்ணும் நீ மறிகடல்கள் ஏழும் நீ''' என்றெல்லாம் தொடங்கி இன்றைய நாமாவளிபோல வணங்கியிருக்கிறார்கள். தேவைக்கு மேலே மண்ணைத் தோண்டுவது கூடப்பாவம். அளவுக்கு மீறிப் பொருளை எரிப்பதும் கேடு; வரம்பு கடந்து நீரை வீணாக்குவது பேரிழப்பு என்ற சிந்தனைகளை எல்லாம் இந்த எட்டுருத் தத்துவத்தில் காணவேண்டும். 'இயற்கையிலே கருத்தாங்கி இனிமையிலே வடிவெடுத்துச் செயற்கை கடந்து இயலிசையில் செய்நடமே வாழியரோ' என்று திரு.வி.க. பாடுவது திருவிசைப்பாவின் இயற்கை வழிபாடு தான். மண்ணைச் சிதைத்தவனைப் புவியதிர்வாக வந்து மண்ணே சிதைக்கும் காற்றை மாசுபடுத்தியவனைப் புயலாக வந்து காற்றே சுழற்றி எரியும். நீரை மாசுபடச் செய்தவனுக்கு ஆழிப்பேரலையே தண்டனையாக வரும். வானம் சிதைந்தால் எரிகற்களும் வால்மீன்களும் தாக்கும் என்ற உண்மைகளைப் புரியவைப்பதே எட்டுருத் தத்துவம்.

*அறிவா? பக்தியா?*

இறைவன் நாடும் தொண்டுநெறி (கர்மயோகம்), யோக மார்க்கம், பக்தி நெறி, ஞான நெறி என்ற நான்கு நெறிகளில் அறிவு, பக்தி ஆகிய இரண்டும் உள்ளன. இரண்டுமே ஒன்றுடன் ஒன்று முரண்பட்டன போன்ற ஒரு தோற்றம் வழிவழியாக இருந்துவருகிறது. தத்துவ வழி நிற்போர் எதைப் பின்பற்ற வேண்டும்? திருவிசைப்பா இதற்குத் தெளிவான விடை கூறுகிறது.

அறிவு வேண்டும். இறைவனை நாடும் மேலான ஞானமாக அது மலரவேண்டும். எது செய்யினும் யாது நினையினும் இறைவனைப் பற்றியதாகவே அது இருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு இது மேல் அது கீழ் என்றோ, அது மேல் இது கீழ் என்றோ வீண்வாதம் புரியச் செய்யும் அறிவு பயனற்றது மட்டுமல்ல; கேடுகள் தருவதும் ஆகும். மெய்ஞ்ஞான நாட்டமுள்ளவன் தனக்குத் தானே கேட்டுக்கொள்ள வேண்டிய ஒரே கேள்வி 'நான் ஆர்?' என்பதே. மணிமேகலை தொடங்கி இதே கேள்வி தொடர்கிறது. 'உயிர்க்கழுதனையா? உடற்கழுதனையா?' என்று சோழமாதேவியைப் பார்த்து அவள் கேட்பது நான் என்பது உயிரா உடலா என்னும் இன்னொரு வினாவை விடையாகக் கொண்டு வருகிறது. 'நான் ஆர் என் உள்ளம் ஆர்' என்று மணிவாசகரும் கேட்கிறார். பின்னாளில் அருணகிரி நாதர்,

நான் ஆர் ஒடுங்க நான் ஆர் வணங்க நான் ஆர் மகிழ்ந்து<br>உனை ஓத

என்று வரிசையாக 'நான்' பற்றி ஐயம் எழுப்புகிறார். அண்மைக் காலத்து வாழ்ந்து மறைந்த ரமணரின் அடிநாத தத்துவ விசாரணை இதுதான் என்று அவருடைய பக்தர்கள் புகழ்கிறார்கள். இந்தக் கேள்வி புதிதில்லை. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாகத் தமிழகத்தில் கேட்கப்படுவதே. 'யானும் நீயும் எவ்வழி அறிதும்?' என்று கேட்ட குறுந்தொகைத் தலைவியின் வினா. மடைமறிமாற்றம் செய்யப் பட்டால் பக்தி இலக்கியத்தில் வரும் கேள்விகளுக்கு விடை கிடைக்கும்.

கருவூர்த் தேவர் திருப்பூவணப் பதிகத்தில் பாடுகிறார்.

**செம்மனக் கிழவோர் அன்புதா என்றுன்**
**சேவடி பார்த்திருந்து அலச**
**எம்மனம் குடிகொண்டு இருப்பதற்கு யான் ஆர்**
**என்னுடை அடிமைதான் யாதோ?** *(149)*

'பெருமானே! உன் மீது அன்பும் பக்தியும் கொண்டவர்கள் பலர் 'அன்புகாட்டு, அருள்காட்டு' என உன்னுடைய சிவந்த திருவடிகளைப் பற்றிக் கொண்டு, செம்மனக்கிழவோர் - செம்மையான மனத்துக்குரிய பலர் - வருந்திக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் ஒரு சிறிய தவறைச் செய்துவிட்டார்கள். மனம் நல்லது தான். கொண்ட அன்பும் நல்லதுதான். இவற்றையும் மீறிய அவர்கள் அறிவு எல்லாவற்றையும் அலசிப் பார்க்கிறது. அவர்களுக்குத் தங்கள் மீதோ, உன் மீதோ முழு நம்பிக்கையும் இல்லை போலும். ஆதலால் அவர்களை விட்டுவிட்டு என் மனத்தில் குடிகொள்ள நீ எழுந்தருளி இருக்கிறாய். எனக்கு இது பெரிதும் மகிழ்ச்சியே!

ஆனால் இந்தப் பெரும்பேற்றைப் பெறும் யான் ஆர்? எத்தகைய தவம் செய்தேன்? எத்தனை எத்தனை பிறவிகளில் எப்படியெல்லாம் அடிமைப் பணி செய்தேனோ? ஒன்று தெரிகிறது. உன்னுடைய இந்தத் திருவருள் பெற நான் என்ன செய்தேன் என்று இப்போது தெரிகிறது. சிலவற்றை நான் விட்டுவிட்டேன். அவை எல்லாம் இறையருள் நாட்டத்துக்குத் தடைகளாக இருந்தன. முதலில் என் அறிவை விட்டேன். பிறகு நாணத்தை ஒழித்தேன். மனத்தை ஒரு வழி நிறுத்தும் தன்மையையும் ஒழித்து அதை உன்னிடம் சரண்புகச் செய்தேன். என்னுடைய ஆசைகள் எல்லாம் ஒவ்வொன்றாகக் கழன்று போயின. வேறு என்ன உள்ளன? என்னுடைய சுற்றம், என்னைத் தவம் செய்து பெற்ற தாய், தந்தை, என்னுடன் பிறந்தவர்கள் இவர்களும் சுமையே என்று விட்டேன் (233). அதற்குப் பிறகு தான் உன்னுடைய தொழுகுல அடிமை ஆனேன்" என்று விரிவாகச் சொல்லும் அளவு கருவூராரின் 'யான் ஆர்' தொடர் போகிறது

தன் முனைப்பு கழன்ற நிலையில்தான் ஞானம் பிறக்கும் என்பதுதான் எல்லாத் தத்துவங்களும் கண்ட முடிவு. அதனைப் பெறுவதற்கான படிநிலைகளைத் திருவிசைப்பா தெளிவாகக் காட்டுகிறது. ஞானநிலையை இப்படி அடைந்தவர்க்கு இன்னொரு மேலான அமைதியும் கிடைக்கிறது. 'அருளைக் கேட்கக்கூட நான் யார்? அருளைப் பெறுவதற்கு என்ன தகுதி எனக்கிருக்கிறது? இறைவன் அருளினும் மறுப்பினும் அதற்கென இன்பமோ துன்பமோ நான் அடையப் போவதில்லை' என்று கருவூரார் பாடுகிறார். 'அருள் செய்வாய் அருள் செய்யாது ஒழிவாய்' (148). இதைத்தான் மெய்ப்பாடுகளின் நிறைவில் சாந்தம் என வைத்துப் பின்னாளில் புகழ்ந்தார்கள். இந்த மன நிலையைப் பெற்ற அருளாளர்கள் வாழ்ந்த மண் இந்தத் தமிழகம்.

**காலச்சூழல்**

இப்படி தத்துவ விசாரணை, திருவிசைப்பாவில் நடந்த காலகட்டம் எண்ணற்குரியது. முன்னரே பலமுறை குறிப்பிட்டது போலச் சோழப்பேரரசின் பொற்காலம் நடந்து கொண்டிருந்தது. தஞ்சைப் பெரிய கோயில், கங்கை கொண்ட சோழேச்சுரம் போன்ற பெரும் பெரும் ஆலயங்கள் கட்டப்பட்ட காலம்; கல்வி, அறிவு, கலைகள் என எல்லாவகையிலும் எல்லாரும் வளமாக இருந்த காலம்; உலகில் இன்பம் மலிந்து கிடந்த நேரத்தில் மக்களின் மனங்களை இறைவன்பால் செலுத்தும் நோக்கில் திருவிசைப்பா எழுந்ததோ என்று கூட ஐயம் ஏற்படுகிறது.

செல்வவளம் சீர்கேட்டுக்கும் ஒழுக்கச் சிதைவுக்கும் வழிவகுக்கும். உலகத்துச் சிறந்த நாகரிகங்கள் இப்படித்தான் அழிந்தன என்பது வரலாறு. சங்ககாலத் தமிழனும் மறைந்து போனது இந்தக் களியாட்டத்தில்தான். இதை மக்களுக்கு உணர்த்தவே வள்ளுவர் திருக்குறள் யாத்தார் என்றும் அறிஞர் கருதுவர். பிற்காலச் சோழப் பேரரசின் உன்னத நிலையைக் கண்டு மகிழ்ந்த அன்றைய முதலமைச்சர் அந்தப் பெரும்பதவியைத் தூக்கி எறிந்துவிட்டுத் திருத்தொண்டர் புராணம் பாடி மக்களை இறைவன்பால் திருப்ப முயன்றார் என்பதும் எண்ணற்கு உரியது.

ஆடலும் பாடலுமாக மக்கள் மகிழ்ச்சியில் வாழ்ந்தனர் என்று முன்னர்க் குறிப்பிட்டோம். அப்படி ஐம்புலன் இன்பங்களுக்கும் செல்வச் செழிப்புக்கும் ஆளாகி அடிமைகளாய் வாழும் நிலை ஏற்படும்போது அவர்களுக்கு அறிவுரை கூறி, இடித்துத் திருத்துவது சான்றோர் பணி. அதைத்தான் திருவிசைப்பா அருளாளரும் செய்தனர் போலும். தத்துவவிசாரம் மண்ணக வாழ்விற்குத் தடையில்லை எனப் புரியச் செய்தனர். 'மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்..... பெண்ணின்

நல்லாளொடு பெருந்தகை இருந்ததே' எனச் சம்பந்தர் வழிகாட்டி இருக்கிறார். சிவபிரானுக்குப் பல பெயர்கள், கருவூரார் 'மங்கையோடு இருந்தே யோகு செய்வான்' என்று புதிதாக ஒரு பெயர் சூட்டுகிறார் (143). பெண்ணின் நல்லாளொடு இருந்தவன்; யோகநிலை கண்டவன் என்பது அற்புதமல்லவா? சேந்தனார் இவ்வழி நின்று 'உறவாகிய யோகமும் போகமுமாய் உயிராளீ' (23) எனக் கட்டுரைக்கிறார். போக நிலையில் உறவாகவந்து உயிரை ஆள்பவன், யோக நிலையிலும் உறவாக வந்து ஒன்றுவிப்பான் என்பது ஆழ் பொருள். ஆதலாலேயே இறைவன் ஏக நாயகன். போக நாயகன், யோக நாயகன் என்றெல்லாம் தொடர்கள் வரிசையாக வருகின்றன (46).

இந்தத் தெளிவு மக்களிடத்தில் பரவவேண்டும் என்று திருவிசைப் பாவாணார்கள் விரும்பினர் போலும். செல்வம் நிலையாமை பற்றியும் யாக்கை நிலையாமை பற்றியும் மக்களை எச்சரித்துப் பாடி இருக்கிறார்கள்.

> **அக்கனா அனைய செல்வமே சிந்தித்து**
> **ஐவரோடு அழுந்தி யான் அவமே**
> **புக்கிடா வண்ணம் காத்துஎனை ஆண்ட**
> **புனிதன் (51)**

இது சேந்தனாரின் திருவீழிமிழலைப் பாடல்.

அந்தக் கனா போன்ற செல்வத்தையே பெரிதாக எண்ணி ஐம்பொறிகளின் ஆசைகளுக்கு ஆளாகித் துன்புறாத வண்ணம் காத்து எனை ஆண்ட புனிதனாகிய இறைவன் 'என்பது இதன் நேர்ப் பொருள்'. 'அந்தக் கனா' என்று வருகிறதே, அது எது? கனா காண்பது இயல்பு. தனிமனிதனுக்கு மற்றவர்களால் பாதிப்பில்லாத ஒரே உரிமை அதுதான். கனவே ஆசைகளின் வெளிப்பாடுகள் என்று ஆய்வாளர்கள் சொல்கிறார்கள். எல்லா ஆசைகளும் நிறைவேறுவது இல்லை. நிறைவேறாதவற்றைக் கனவில் கண்டு மனிதன் மயங்குகிறான். உறக்கம் கலைந்தவுடன் கனவுச் செல்வங்களும் மறைந்து போகின்றன. கண்முன்னால் இருக்கும் செல்வம் மட்டும் மறையாமல் இருக்குமா என்ன? கனவுச் செல்வம் உறக்கம் கலைந்தபின் மறைய, மெய்யான பொருள் செல்வம் சில ஆண்டுகள் கழித்துக் கட்டாயம் மறைந்து விடும். என்றுமே செல்வராக வாழ்ந்தவரும் இல்லை; என்றுமே வறியராகத் துன்புற்றவரும் இல்லை. 'ஆறிடும் மேடும் மடுவும் போலாம் செல்வம்' என்று அவ்வையார் சொல்வது மெய்தான்.

பாட்டின் முதல் இரண்டு வரிகள் இன்றைய இளைஞர் சமுதாயத்துக்காகவே பாடப்பட்டது போல் தோன்றுகிறது. கை நிறையப் பணம். கனவுகளில் மிதக்கும் வாழ்வு, தாய்தந்தையர் உடம்பாலும் அறிவாலும் உழைத்து ஐம்பது ஆண்டுகளில் ஈட்டிய

பணத்தை ஐந்தே ஆண்டுகளுக்குள் ஈட்டி, ஐம்பொறிகளுக்கும் வகை வகையான தீனிகள் போடுகிறார்கள். விளைவு மணமுறிவு. இல்லறச் சிதைவு, பிள்ளைகள் தனித்துப்போதல் இவையே. "ஐவரோடு அழுந்தி" என்ற தொடர் எவ்வளவு பொருத்தமாக அமைந்துள்ளது! அந்த ஐம்பொறிகளுக்கு ஆளாகாமல் இருக்கப் பெரும்போர் புரிய வேண்டுமாம்? எதிரிகள் நமக்குள்ளே! நாமே நமக்கு எதிரி; என்ன கொடுமை இது. நிலையிலாத செல்வத்தைப் பெரிதாகக் கருதி மாயைகளும் மாயங்களும் காட்டும் ஐந்து வேடர்களுடன் செய்ய வேண்டிய கடும்போர் இது! கருவூரார் பாடுகிறார்:

*அக்கனா அனைய செல்வமே சிந்தித்து*
*ஐவரோடும் என்னோடும் விளைந்த*
*இக்காலம் முழுதும் ஒழியவந்து உள்புக்கு*
*என்னையாள் ஆண்ட நாயகனே* (116)

இறைவனருள் இருந்தால் மட்டுமே இப்போரில் வெற்றிபெற முடியும். இதைப் பாடிய கருவூரார் சாதாரண அருளாளர் மட்டும் இல்லை; பெரிய சித்தர். அவற்றோடு மாமன்னர்களான முதலாம் இராசராசனுடைனும் அவன் மகன் முதலாம் இராசேந்திரனுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டவராய் அவர்களால் மதிக்கப்பட்டவர். அவர்தான் மக்களுக்கு இந்தச் செய்தியைச் சொல்லி உரக்கக் கூவுகிறார். 'நான் ஏழை, அறிவில்லாதவன், இறையருள் நாட்டம் கொண்டு மேலே எழலாம் என எண்ணினால் 'என்னுடன் பிறந்த ஐவரும் பகையே'. யாரைத் துணையாகக் கொள்வது? என அவர் கேட்பது (81) சோழ மக்களின் காதுகளில் விழுந்திருக்க வேண்டும்.

அதற்காக மண்ணின் இன்பங்களை எல்லாரும் விட்டுவிட்டுத் துறவு பூண வேண்டும் என யாரும் பாடவில்லை. அந்த நோக்கம் இருந்திருக்குமானால் அகத்துறைப் பாடல்கள் இவ்வளவு இருக்கா. சைவமோ வைணவமோ உமையொடு பாகனாகவும், மலர் மார்பனாகவும் தெய்வங்களை வணங்குவதே இந்த மண்ணின் மரபு. செல்வம் வேண்டும். வளமான வாழ்வு வேண்டும். எல்லாம் சரியே. ஆனால் சிந்தனை முழுதையும் இறைவன்மீது வைத்துவிட்டு வாழ வேண்டும் என்ற தத்துவக் கோட்பாடே திருவிசைப்பா தருகின்ற செய்தி.

இதை எப்போது செய்வது? சிறுவயதிலேயே இந்தச் சிந்தனையைக் குழந்தைகளுக்கு ஊட்ட வேண்டும். தளிரில்தான் மென்மையும் ஈர்ப்பும் இருக்கும். அதை விட்டுவிட்டு முத்தித் தளர்ந்த இலை உதிர்கின்ற காலத்தில் எண்ணி என்ன பயன்? முடியவில்லையே முடியவில்லையே நெஞ்சிடிந்து உருகி அழிவதால் என்ன பயன்? கருவூரார் கேட்கிறார்.

*தனிப்பெரும் தாமே முழுதுறப் பிறப்பின்*
*தளிர்: இறப்பு இலைஉதிர்வு என்றால்*
*நினைப்பரும் தம்பால் சேறல் இன்றேனும்*
*நெஞ்சிறந்து உருகுவது என்னோ! (168)*

யாக்கை நிலைக்காது. எல்லா இன்பங்களையும் ஐம்பொறிகள் கொண்டு முழுதுமாக ஒரு சேரத்துய்க்க யாராலும் முடியாது. ‘அவரவர் போகம் அளந்தன ஆற்றால்’ மட்டுமே வரும்.

**மெய்ஞ்ஞானம்**

யாருக்கு எது எவ்வளவு என்ற கேள்விகள் எழுவது இயல்புதான். ஆனால் அதை நாம் தீர்மானிக்க முடியாது. ‘வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி தொகுத்தார்க்கும துய்த்தல் அரிது! என்று வள்ளுவப் பெருந்தகை கூறுவது எண்ணற்குரியது. தத்துவ ஆய்வில் இதையும் கூர்ந்து நோக்க வேண்டும். பொருள் பெறுவதோ அருள் பெறுவதோ நம் கையில் முழுமையாக இல்லை. நிறைவாக அடைவது என்பது நமக்கும் அப்பாற்பட்ட ஒன்றால் மட்டுமே வருவது.

‘அருளுமாறு அருளி ஆளுமாறு ஆள’ எனத் தஞ்சை இராசராசேச்சுரப் பெரியவரைக் கருவூர்த் தேவர் போற்றுவது இது கருதியே. அருள்வதும் ஆளாகக் கொள்வதும் அவன் செயல். அருளினாலும் அருளே புரியாவிட்டாலும் தெய்வச்சிந்தனையுடன் இருப்பது நம்பணி என்ற உயிரோட்டத்தை இந்தச் சொற்களில் கண்டு உருகுகிறோம். உணர்கிறோம்.

இந்தத் தெளிவைப் பெறத் தத்துவ நூல்கள் உதவி செய்யலாம். அவை ஏணிப்படிகள் போன்றவை. அவையே மெய்ம்மை ஆகமாட்டா. கருவூரார் இரண்டு பாடல்களில் இதை விளக்குகிறார். திருக்களந்தை இறைவனை, ‘கலைகள் தம் பொருளும் அறிவுமாய்’ என்று பாடுகிறார் (91) கலைகள்—> பொருள்—> அறிவு என ஒரு நேர் கோடு தெரிகிறது. கலைகள் இங்கு ஆயகலைகள் அறுபத்து நான்கல்ல. அவை நுண்கலைகள். ஐம்புலன்களுக்கு இன்பம் தருபவை. இங்குக் குறிப்பிடப்படுவன தத்துவ சாத்திரங்கள். கருவூரார் திருவிடை மருதூர்ப் பதிகத்தில் இந்த நூல்களைத் ‘தெரிபொருட் பனுவல்’ என்று கூறுகிறார் (177). அதாவது கட்டு எது? விடுதலை எது? பந்தம் எது? பிரிவு எது? மெய்ம்மை எது? பொய்ம்மை எது? எனத் தெரிந்து காட்டுபவை. பாடல் முழுவதையும் காணலாம்.

பந்தமும் பிரிவும் தெரிபொருட் பனுவல்
படிவழி சென்று சென்று ஏறிச்
சிந்தையும் தானும் கலந்ததோர் கருவி
தெரியினும் தெரிவுறா வண்ணம்

எந்தையும் தாயும் யானும் என்றிங்ஙன்
எண்ணில் பல்லூழிகள் உடனாய்
வந்து அணுகாது நுணுகி உள்கலந்தோன்
மருவிடம் திருவிடை மருதே (177)

தமிழனின் தலைசிறந்த மெய்ஞ்ஞான உணர்வு இந்தப் பாட்டில் பொதிந்து கிடக்கிறது. பின்னால் வந்த சைவ சித்தாந்தத்தின் சில அடிப்படைக் கூறுகள் இதனுள் விரவியுள்ளன. இறைவன் பற்றிய ஞானம்பெறப் பலப்பல அறிவு நூல்களை - பனுவல்களைப் படிக்க வேண்டும். பிறகு பலப்பல ஊழிகள் தோறும் தாய் போல, தந்தை போல என் 'உடனாக' வந்து கட்டு, விடுதலை, பந்தம், பிரிவு என்பன என்ன என்று உணர்த்திய பேரிறைவன் என்னை விட்டு ஒரு கணமும் - ஊழிக் காலம் தோறும் - பிரியாது நின்று என் சிந்தையும் தானும் ஒன்று எனச் சொல்லும் வண்ணம் கலந்து பிரியாது நிற்கிறான். அப்படி கலந்து நிற்கிறானே அவன் யார் என ஆராயப் புகுந்தால்- தெரியினும் - நம் ஆராய்ச்சி அப்பாற்பட்டுத் தெரிவுறா வண்ணம் ஒளிகிறான். என்னை அணுகினான் என்று சொல்லவும் முடியாதவாறு நுணுகி உள்கலந்திருக்கிறான். அப்படி இருக்கிறானே என்று பார்க்கப் புகுந்தால் அணுகாதவனாகவும் தென்படுகிறான். இதுவே பாடலின் அடிநாதக் கருத்து.

இந்தப் பாடலுக்கு மு. அருணாசலம் தரும் விளக்கம் அரிய தத்துவத்தை உட்கொண்டது. 'நுட்பமான சிவானந்த அனுபவத்தையும் அதன் குழூஉக் குறியாகிய பஞ்சாக்கரத்தையும் விளக்குவதாகும். ஞான நூல்களைக் கற்று அவற்றின்வழி குருவருளால் ஒழுகவல்ல ஆன்மாவானது சோபான முறையிலே உலகபந்தங்களை உணர்ந்து அவற்றினின்றும் நீங்குகிறது. நீங்கிச் சிவானுபவம் பெறுகிறது. இந்தச் சிவானுபவம் பெறுகிறோம் என்ற உணர்வும் இல்லாமல் அனுபவிக்கிறது.

இன்றெனக்கு அருளி இருள்கடிந்து உள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்றநின் தன்மை நினைப்பற நினைந்தேன்

என்று மாணிக்கவாசகர் குறிப்பிடும் நிலையும் இதுவே. இவ்வாறு இறைவன் தான்செய்யும் அருளைப் புறத்தே உயிர் உணராதபடி பலகாலம் உள்ளிருந்து உணர்த்துகிறான். அப்போது அவனும் திருவருளும் ஆன்மாவும் தனியே கலந்து நிற்கின்றன. உணர்கிறோம் உணர்த்துகிறான் என்ற நினைப்பு இல்லை... இதே ஆசிரியர் கீழ்க்கோட்டூர் மணியம்பலத்துப் பதிகத்தில் 'சிந்தையால் நினையில் சிந்தையும் காணேன்' என்று குறிப்பிடுவதும் காணத்தக்கது. இதுவே நினைப்பற நினைந்த நிலை. சிந்தையும் தானும் இரண்டறக்

கலந்துவிட்டமையினாலே அந்தக் கலவியைச் சிந்தை உணரவில்லை. அதுவாகவே நிற்கிறது என்பது கருத்து.

இதைவிட வேறு என்ன தத்துவத்தை எந்த நூல் தான் எந்த மொழியில் கூற முடியும்? என்னுள் இருப்பவன்; ஆனால் வேறானவன். காலம் கடந்தவன்; ஆனால் காலந்தோறும் உடன் வருபவன். அவனுக்குத் தாய் தந்தை என்ற உறவுகள் இல்லை. ஆனால் அத்தகைய உறவுகளுடன் வந்த என்னுள் கலந்தவன் என் சிந்தையுள் கலந்து நின்று சிந்தனைகளையும் தாண்டியவன். அவனை அறிய முற்படின் அவனே கருவியாக இருந்து வழியும் காட்டுகிறான். அறிவு தருபவன்; அறிவுக்கு அப்பாற்பட்டவன்; காலக்கணக்கன்; காலம் நீத்தவன்; உறவுகளை வகுப்பவன்; எந்த உறவுக்கும் கட்டுப்படாதவன்; நுணுக இருப்பவன்; பருப்பொருளாகக் காணற்கரியவன்; என்னுள் இருப்பவன்; ஆனால் வேறானவன்; ஆனால் காலம் கடந்தவன்" என்பன போல இறைமைப் பண்புகளைப் பட்டியல் இடும் ஞானப் பெட்டகம் இந்தப் பாட்டு. இதை நுணுகி ஆராய்ந்தால் தேவார, திருவாசகங்கள் கூறும் தத்துவக் கோட்பாடுகளைக் கண்டு அறிய முடியும்.

**புதியன**

திருவிசைப்பாவில் தத்துவம் சார்ந்த வேறு இரண்டு சொற்கள் புதிதாக ஆளப்பட்டுள்ளன. திருமாளிகைத் தேவர் பாடல்களில் 'வேதாந்த நிலைக் குறியே' (26) என்றும், 'நாதாந்தத்து அரையர்' என்றும் (29) இறைவன் துதிக்கப்படுகிறான். முந்தைய திருமுறைகளில் வேதம், நாதம் என்ற சொற்கள் உள்ளன. ஆனால் வேதாந்தம், நாதாந்தம் என்பன காணோம். நாதாந்தம், கலாந்தம், வேதாந்தம், சித்தாந்தம், யோகாந்தம், போதாந்தம் என்று ஆறு அந்தங்களைப் பற்றித் திருமந்திரத்தில் குறிப்புகள் உள்ளன. 'அந்தமோர் ஆறும் அறிவார் அதிசுத்தர்' என்று திருமூலர் பாடுகிறார் (திருமந்திரம் - 2371). பின்னாளில் இதைப்பற்றி விளக்கங்கள் பலவாறாக வெளிவந்தன. வள்ளற்பெருமான் விரிவாகவே அருட்பெருஞ்சோதி அகவலிலும் பிறபகுதிகளிலும் பாடியுள்ளார்.

ஆனால் திருவிசைப்பாவில் இரண்டு அந்தங்கள் பற்றிய குறிப்புகள் பதிவாகியுள்ளன என்பது முதன்மைச் செய்தி. தேவார திருவாசகப் பத்திமைக் கருத்தோட்டம் தாண்டி, சித்தாந்தம் பின்னாளில் தோன்றுவதற்கு முன்னோடியாகத் தத்துவ ஆராய்ச்சிகள் திருமாளிகைத் தேவர் காலத்திலேயே தோன்றிவிட்டது என்பதற்கான சான்றுகள் இவை என்பது சாலும்.

மு. அருணாசலம் திருவிசைப்பாவில் உள்ள சமய, தத்துவம் பற்றிக் கூறிய சில கருத்துகளுடன் நிறைவு செய்யலாம்.

*திருவிசைப்பாப் பாடல்கள் சிவபெருமானுடைய பெருமையை இசையில் பாடுவன. பாடுகின்ற அடியார் சிலசமயம் பெருமானுடைய அருளை வேண்டிப் பாடுகின்றனர். சில சமயம் பெருமானுடைய அருளுக்கு ஏங்கி நிற்கின்ற ஒரு பெண்ணின் நிலையில் தங்களை நிறுத்திக் காதல் பொருள் அமையப் பாடுகின்றனர். அவனுடைய அழகைப் பாதாதிகேசமாகப் பாடி மகிழ்கின்றனர். அவனுடைய திருநடனத்தைப் பார்த்துத் துதிக்கின்றனர். அவனுடைய திருவருளை நிரம்ப அனுபவிக்கின்ற பெருமிதத்திலிருந்து பாடு கின்றனர். தங்களுடைய சிறுமையை எண்ணி அவன் தங்களுக்கு எளிவந்த பெருங்கருணைத் திறத்தை வியந்து போற்றுகின்றனர்.... சமய தத்துவங்களைச் சொல்ல இவர்கள் நினைக்க வில்லை. எனினும் இவர்கள் வாய்மொழியில் பல சமய நுட்பங்கள் வெளிப்படுகின்றன. (ப. 97)*

# 12. முதலும் முடிவும்

ஒன்பதாம் திருமுறையில் இரண்டு பகுதிகள்: திருவிசைப்பா, திருப்பல்லாண்டு எனப்படுவன. சேந்தனார் பாடிய நான்கு பதிகங்களில் ஒன்று திருப்பல்லாண்டு. இன்னொன்று முருகன் பற்றியது; எஞ்சிய இரண்டு சிவபெருமானைப் பற்றியவை. எட்டுத் திருமுறைகள் வரை இறைவனுக்குப் பல்லாண்டு கூறுவதுபோல ஒரு பதிகமோ பாடலோ இல்லை. ஆனால் அப்படி ஒரு வழக்கம் இருந்திருக்கும் என்று எண்ணும்படி அப்பர் தேவாரத்தில் ஒரு குறிப்பு கிடைக்கிறது.

........... தழலாய நம்பானைப்
பாடுவார் பணிவார் பல்லாண்டு இசை
கூறு பத்தர்கள் (iv: 20: 10)

என்பன பாடல் வரிகள். பல்லாண்டு இசை கூறுகின்ற பக்தர்கள் என்று வருவதால் பல்லண்டு கூறும் பழக்கம் இருந்ததை உணர முடிகிறது. ஆனாலும் தனிப் பதிகங்கள் கிடைக்கவில்லை. அதற்குப் பின் வந்த 10, 11, 12 ஆம் திருமுறைகளிலும் பல்லாண்டுப் பாடல்கள் அல்லது பதிகம் இல்லை. பன்னிரு திருமுறைகளிலும் இந்தப் பெருஞ் சிறப்பை ஒன்பதாம் திருமுறை பெற்றுள்ளது. சேந்தனார் பாடிய பல்லாண்டுப் பதிகத்தில் சற்று வேறுபட்டு 13 பாடல்கள் இருப்பதும் குறிக்கத்தக்கது.

சிவாலயங்களில் வழிபாடு முடிந்து நிவேதனம் ஆனபின் பஞ்சபுராணம் பாடுவது ஒரு மரபு. இதில் புராணம் ஏதுமில்லை. திருமுறைகளிலிருந்து ஐந்து பாடல்கள் பாடப்படும். தேவாரம் - 1, திருவாசகம் - 1, திருவிசைப்பா - 1, பெரியபுராணம் - 1, திருப்பல்லாண்டு - 1 ஆக ஐந்து பாடல்கள் ஓதப்பெறும். இந்த ஐந்தில் ஒன்பதாம் திருமுறையில் இரண்டு பாடல்கள் இடம்பெறுவது ஒரு சிறப்பு.

காலத்தொடு கற்பனை கடந்த கடவுளுக்கு, தோற்ற ஒழுக்கம் இல்லாத தொன்மைப் பரம்பொருளுக்கு, ஆதியும் அந்தமும் ஆன பெருந்தெய்வத்துக்குப் பல்லாண்டு பாடுவது சரியா என எண்ணத் தோன்றும். அடியார்கள் வாழ்த்தால் இறைவனுக்குப் பெருமை தனியாகச் சேரப் போவதில்லை. ஆனால் தம் வாழ்வு துன்பம் இன்றி நீண்டதாய் அமைய வேண்டும் என்பதற்காக அவன் அருளைவேட்டு வாழ்த்தி இருக்கிறார்க்ள். இது ஒரு வகையில் தன்னலம்தான். தான் வாழப் பிறரை வாழ்த்துதல் ஒரு கலை. பல மனிதர்கள் இதைக் கைப்பிடித்து உலக வாழ்வில் வசதியாக வாழ்வதாக எண்ணிக்

கொண்டு இருக்கிறார்கள். ஆனால் அந்தப் 'பிறரை' விட்டு விட்டுப் பெருமானை வாழ்த்தினால் பெரும்பேறுகள் தாமே வந்து சேரும் என உணர்த்தவே கடவுள் வாழ்த்து அமைந்தது. மனிதன் வாழ்த்து வதாலோ பல்லாண்டு பாடுவதாலோ இறைமை நிலையில் எம்மாற்றமும் ஏற்படப் போவதில்லை. வாழ்த்துவதன் மூலம் இறைவன் அருளுக்குத் தகுதியுடையவராகலாம் என்பதே குறிப்பு.

முதல்

ஆனால் அப்படி திருப்பல்லாண்டு பாடுவதற்கு முன்னால் அடியாருடைய மனநிலையில் சில முதிர்ச்சிகள் தோன்றவேண்டும். அவை என்னென்ன என்று திருமாளிகைத்தேவர் ஒன்பதாம் திருமுறையைத் தொடங்கி வைக்கும் போதே பாடுகிறார். ஒளிவளர் விளக்கே முதல் மறைகளும் அமரர் கூட்டமும் என்பது வரையிலான பதினொரு பாடல்களிலும் ஈற்றில் வரும் சொற்கள் கூர்ந்து நோக்கற்குரியன.

| | | | |
|---|---|---|---|
| விளம்புமா விளம்பே | (1) | கருதுமா கருதே | (3) |
| உரைக்குமா உரையே | (4) | விரும்புமா விரும்பே | (10) |
| இசைக்குமா இசையே | (5) | நினையுமாறு நினையே | (11) |
| பணியுமாறு பணியே | (2) | நுகருமா நுகரே | (7) |
| நணுகுமாறு நணுகே | (5) | புணருமா புணரே | (8) |
| தொடருமா தொடரே | (9) | | |

இப்படி நான்கு வகையாகப் பகுக்க முடிந்தவை. மரபு வழியாக இறையருள் தேடும் வழிகள் நான்கெனச் சொல்வர். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன அவை. இவற்றை அடிமை நெறி, மகன்மை நெறி, தோழமை நெறி, ஞானநெறி என்று கூறுவதும் உண்டு. இவற்றுள் சரியை புறத்தில் உடம்பால் செய்யப்படும் தொண்டுகள். கிரியை ஐம்பொறிகளை இறைவனிடம் அடைக்கலமாக்குதல். உள்ளத்தில் பட்டது. யோகம் இறைவன் தான் என்ற உணர்வில் எண்ணி எண்ணி ஒன்று படல். அகவழிபாடும் இதற்குள் அடங்கும். ஞானம் தன்னையே சிவார்ப்பிதமாகத் தந்துவிடும் முடிந்த நிலை. சரியையால் இறைவன் உலகம் பெறலாம். கிரியையால் இறைவன் அருகே செல்லலாம். யோகத்தால் இறைவன் மேனி போல ஒளி பெறலாம். ஞானத்தால் இறைவனுடன் கலந்தேவிடலாம். இவை முன்னோர் கூறியவை.

இவற்றையும் பதிகத்தில் வரும் பதினொரு தொடர்களையும் இணைத்துப் பார்க்கும்போது ஒரு தெளிவு பிறக்கிறது. திருமாளிகைத் தேவர் சித்த நெறி நின்று பல அற்புதங்களை நிகழ்த்தியவர் என்று

கூறுவதுண்டு. அவர் அப்படி செய்தாரா இல்லையா என்பது தேவையற்றது. ஆயினும் இந்த முதல் பதிகத்தின் வாயிலாகச் சாதாரண மானிட உயிர் இறைவனுடன் கலக்கும் அற்புதத்தைக் காட்டியுள்ளார் என்பதில் ஐயமில்லை. தொகுத்துப் பார்ப்போம்:

| நெறி | பணி | பயன் | வழிகள் | கருவி |
|---|---|---|---|---|
| 1. சரியை | அடிமை நெறி | இறையுலகு சேர்தல் (சாலோகம்) | பணிதல் நணுகுதல் | மெய் |
| 2. கிரியை | மகன்மை நெறி | இறைவன் அருகில் (சாமீபம்) | விளம்புதல் உரைத்தல் இசைத்தல் | வாக்கு |
| 3. யோகம் | தோழமை நெறி | இறைவன்போல ஒளிமேனி பெறல் (சாரூபம்) | கருதல் விரும்புதல் நினைத்தல் | வாக்கு |
| 4. ஞானம் | ஞானநெறி (சன்மார்க்கம்) | இறைவனுடன் கலத்தல் (சாயுக்கியம்) | நுகர்தல் புணர்தல் | உயிர் |

ஆகவே ஒரு சிவனடியார் சரியையாகிய தொண்டு நெறியில் நின்று தன்னுடைய மெய்வருந்தப் பணிந்து, கோயிலை நெமங்கி, தொடர்ந்து பணி செய்யயவேண்டும். இது முதல் படி. உடம்பால் நடப்பது. எல்லா இடங்களும் தெய்வக் கோயில் எனப் போற்றுவதும், 'ஆலயம் தானும் அரன் எனத் தொழு'வதும் இதனால் செய்யக்கூடியன. நல்லுடம்பும், வலிமையும் இருக்கும் யாரும் செய்யலாம். அல்லது தத்தம் உடம்பின் நிலைக்கு ஏற்பச் செய்யலாம். உழவாரப் பணி என்று நாவரசர் போற்றிய முதல் நிலை இதுவே. சாலோகம் ஆகும்.

இரண்டாம் நிலையில் ஒரு குழந்தை போல ஆடியும் பாடியும் விளம்பியும் இசைத்தும் உரைத்தும் தெய்வ மேன்மைகளைச் சொற்களால், பாமாலைகளால் நாளும் ஓதிக்கொண்டு இருத்தல், தலை வணங்குவது போல, வாயும் இறைவன் திருப்பெயர்களையே ஓயாது ஒலித்துஒலித்து அவ்வப்போது பூசைகளும் புரியும்போது இறைவனுக்கு அருகிலேயே செல்லல்: சாமீபம் எனக் குறிக்கப்படும்.

மூன்றாம் நிலையில், உடம்பு (மெய்), வாய் (வாக்கு), கைவசப்பட்ட நிலையில் மனத்தை ஒரு நிலைநிறுத்தும் யோகநெறி, தோழமை உணர்வுடன் இறைவனைத் தன் உள்ளேயே எழுந்தருளச செய்து, அவனை விரும்பி, நினைத்து, அவன் புகழைக் கருதிக் கருதி வியந்து போதலும், அப்படி மனத்தால் எண்ணுவதாலேயே இறைவனுடைய பொன்னொளியைத் தான் பெறுதலும் ஆம்: சாரூபம் இது.

நிறைவான நிலையில் காயம், வாக்கு, மனம் (உடம்பு, சொல், உள்ளம்) மூன்றும் தெய்வத்துக்குப் படைக்கப்பட்ட பின் ஒருயிர் இறைவனுடன் ஒன்றிப்போன நிலையில் (யோகம் - ஒன்றுதல்), அந்தத் தெய்வத்திருவருளை நுகர்வதும் புணர்வதுமாகத் திளைத்துப் போதல். சாயுக்கியம் இது. இறையருளில் இரண்டறக் கலத்தலாகிய இதுவே நிறைவு நிலை.

இப்படி வரிசையாக அடியார்கள் எக்காலமும் தெய்வப் பணியும் தெய்வ வழிபாடும் தெய்வ நினைவுமாக இருந்து பேரின்பம் பெற்ற பிறகு இந்த விழுமிய நிலையைத் தந்த சிவபரம் பொருளுக்குத் திருப்பல்லாண்டு பாடுவார்கள். இவர்களே மெய்யடியார்கள் (290). இந்தச் சிந்தனைகளை - திருமாளிகைத் தேவர் ஒன்பதாம் திருமுறை முதலில் கூறுவனவற்றைச் சேந்தனார் திருமுறையின் முடிவில் விளக்கமாகப் பாடி நிறைவு செய்வது நூலின் அழகை மேலும் கூட்டுகிறது.

முடிவு

இனிமேல் பிறப்பில்லை என்ற பெரும்பதத்தைச் சிறந்த அடியார்க்கு இறைவன் நல்கிவிட்டான். அதனால் அதற்குக் கைம்மாறாக நாம் என்ன செய்யலாம்? பல்லாண்டு கூறுவோம்.

**பின்னைப் பிறவி அறுக்க நெறிதந்த பித்தற்குப்**
**பல்லாண்டு கூறுதுமே** *(289)*

நால்வகை நெறிகளில் இந்த மெய்யடியார்கள் நின்று மனம் வாக்கு, காயம் என்னும் மூன்று நிலைகளில் பணிபுரிந்தவர்கள். அதனால் பல நன்மைகளையும் பெற்றார்கள். 'கொண்டும் கொடுத்தும் குடிகுடி ஈசற்கு ஆள் செய்மின்' (290) என்ற கட்டளைக்குப் பயந்தவர்களாக வாழ்ந்தவர்கள். அதனால் பல்லாண்டு கூறத்தகுதி பெற்றவர்கள். இந்தத் தூய் மனத் தொண்டர்கள் (292) இறைவனால் ஏற்பளிப்புப் பெற்று உயர்ந்தவர்கள் 'என்னைத் தன்பால் பகுத்தானுக்குப் பல்லாண்டு கூறுதுமே' (291) எனத் திளைப்பவர்கள்.

உலகில் இத்தகைய நற்பேற்றை யார் பெற முடியும்? யாரும் பெறலாம் என்பதும் ஒரு குறிப்பு. மேற்சொன்னவாறு படிநிலை ஏறிவந்து பெறும் ஞானக்காட்சி சொல்லால் சொல்லும் தரமன்று.

**சீரும் திருவும் பொலியச் சிவலோக**
**நாயகன் சேவடிக் கீழ்**
**ஆரும்பெறாத அறிவு பெற்றேன் பெற்றது**
**ஆர்பெறுவார் உலகில்?** *(295)*

நல்ல அடியார், தூய் மனத் தொண்டர், மெய்யடியார், உறைப்புடைய அடியார் வாழ்வில் பெறக்கூடியது இதுதான் எனத் திருவிசைப்பா படிப்பதன், பாடுவதன், ஓதுவதன் பயனைச் சேந்தனார் இப்படிக் கட்டியங் கூறுகிறார். பத்திமை நெறிதரும் பெரும்பதம் அது. சீர் தரும். திருவும் தரும். சிவலோக நாயகனுடைய சிவந்தத் தாமரைத் திருவடிகள் கீழ் இருந்து ஆரும் பெறாத அறிவும் பெறலாம். 'ஆரும் பெறாத அறிவு' என்பது மெய்ஞ்ஞானம். கல்வி, கேள்வி, நூல், படிப்பு என்ற இவை எல்லாம் வயிற்றுப் பிழைப்புக்கு மட்டுமே பயன்படுவன. தெய்வக்காட்சி இவற்றுக்கும் அப்பாற்பட்டது. 'கல்வியில்லை கேள்வியில்லை கைகாட்டும் காரணம் காண் எல்லையளவற்றதடி எங்கும் நிறைந்ததடி' எனச் சித்தர்பாடும் மெய்யறிவு அது. 'கற்றாரையும் கல்வியையும் விட்டுவிட்டு - கல்வி என்னும் பல்கடல் பிழைத்து - இந்த மெய்யறிவைத் தேட வேண்டும். மண்ணில் யாரும் தரமுடியாத கல்வி; இறைவன் ஒருவனே அகமுகமாகத் தரக் கூடிய ஞானம். 'அதை நான் பெற்றேன். ஆர்பெறுவார் உலகில்?' என்று சேந்தனார் பல்லாண்டு கூறி மகிழ்வது இந்த உயர்ந்த நிலையில்தான். அப்படிக் களித்துத் திளைக்கும் சேந்தனார் அடியார்களை வணங்கித் திருப்பல்லாண்டுப் பதிகத்தை நிறைவு செய்கிறார். எந்த அடியார்கள்?

சீரடியார்கள். சிவனுடைய சீரடியார்கள் எல்லாமே அவன்தான் என்று எண்ணிப் புகலிடமாக அவனை அடைந்தவர்கள் எல்லாமா எல்லாருமா? இரண்டும் தாம். 'சீரும் திருவும் பொலிய என் சுற்றமாக வந்துள்ள உறவும் நட்பும் கூட அவன்தான் அமுதம் போல பால் போல - என மனத்தகத்தே பாலும் அமுதமும் ஒத்துநின்ற' - பரமன் அவனே என்பிரான் : தலைவன் அவனையன்றி வேறு ஒரு தலைவனை - கடவுளை எண்ணவும் மாட்டேன். 'சில்லாண்டில் இதையும் சிலதேவர் சிறுநெறி' (292) சேரமாட்டேன், பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள் அது மட்டுமே (290). என்னுடைய ஆவிக்கு அமுதன் அவனே: அது மட்டுமில்லை என்னுடைய ஆசைகளாகிய செல்வங்களை நிறைவு செய்பவன். ஆர்வத்தனத்தன் (294).

இதோ ஆதிரை நாள் வருகிறது. ஊரெல்லாம் தேரோடும். வீதியெல்லாம் இறைவனை வணங்க யார் யார் வந்தார்கள் தெரியுமா? திருமால், நான்முகன், நெருப்புக் கடவுள், கதிரவன், இந்திரன் இவர்களுடன் எல்லாத் தேவர்களும் வந்தனர். (300) அந்தக் காட்சியைக் காணும்பேறு நாய் போன்ற இந்த எளியேனுக்கும் கிடைத்தது. நல்லாரொடு நல்ல அடியரோடு கூட இருந்ததால் வந்த பேறு இது. நான் பல்லாண்டு கூறாமல் - என் நன்றிக்கடனைச் செலுத்தாமல் - எப்படி இருப்பேன்?

எந்தை எந்தாய் சுற்றம் முற்றும் எமக்கு
அமுதாம் எம்பிரான் என்றுஎன்று
சிந்தை செய்யும் சிவன் சீரடியார்
அடிநாய் செப்புரை
அந்தமில் ஆனந்தச் சேந்தன் எனைப்புகுந்து
ஆண்டுகொண்டு ஆருயிர்மேல்
பந்தம் பிரியப் பரிந்தவளே என்ற
பல்லாண்டு கூறுதுமே *(301)*

கட்டுகள் விலக இறைவனின் பரிவு வேண்டும். அதை உறைப்பாக நின்று பெறுவதே பக்தியின் வெற்றி.

# பிற்சேர்க்கை

## ஒன்பதாம் திருமுறையில் குறிக்கப்பட்டுள்ள விலங்குகள் - பறவைகள் - தாவரங்கள்

| விலங்குகள் | பா.எண் | பறவைகள் | பா.எண் | தாவரங்கள் | பா.எண் |
|---|---|---|---|---|---|
| 1. அரவு | 40 | 1. அன்னம் | 289 | 1. அகில் | 166 |
| 2. ஆளி | 64 | 2. கிளி | 234 | 2. ஆல் | 8 |
| 3. ஏறு | 6 | 3. குயல் | 167 | 3. கதலி | 205 |
| 4. களிறு | 166 | 4. குருகு | 109 | 4. கமுகு | 16 |
| 5. கயல் | 68 | 5. கொக்கு | 21 | 5. கரும்பு | 14 |
| 6. குருளை | 73 | 6. கோழி | 71 | 6. குரா | 71 |
| 7. கெண்டை | 110 | 7. மயில் | 71 | 7. குவளை | 226 |
| 8. சிலந்தி | 228 | | | 8. கொக்கிறகு | 21 |
| 9. சே (ஏறு) | 27 | | | 9. கொன்றை | 21 |
| 10. சேல் | 68 | | | 10. கொவ்வை | 247 |
| 11. நாகம் | 176 | | | 11. கோங்கு | 164 |
| 12. நாய் | 28 | | | 12. சண்பகம் | 172 |
| 13. பன்றி | 23 | | | 13. சந்தனம் | 172 |
| 14. பாம்பு | 80 | | | 14. சாதிமரம் | 239 |
| 15. புலி | 9 | | | 15. செஞ்சாலி | 82 |
| 16. மடங்கல் | 77 | | | 16. செங்கழுநீர் | 14 |
| 17. மறி | 26 | | | 17. தாமரை | 9 |
| 18. மான் | 78 | | | 18. தாழை | 241 |
| 19. முதலை | 164 | | | 19. தெங்கு | 16 |
| 20. மேதி | 14 | | | 20. நெல் | 14 |
| 21. வண்டு | 216 | | | 21. பலா | 16 |
| 22. வராகம் | 29 | | | 22. பிரம்பு | 14 |
| 23. வரால் | 112 | | | 23. புன்னை | 241 |
| 24. வாளை | 14 | | | 24. மா | 16 |
| 25. விடை | 2 | | | 25. வாழை | 16 |
| | | | | 26. வேங்கை | 31 |
| | | | | 27. வேம்பு | 205 |

## துணை நூல்கள்

1. ஒன்பதாம் திருமுறை, தருமபுரம் பதிப்பு, 1969.
2. ஒன்பதாம் திருமுறை, தி.வே. கோபாலையர் பொழிப்புரையுடன், 1969.
3. பன்னிரு திருமுறை வரலாறு & இரண்டாம் பகுதி, க. வெள்ளை வாரணன், 1969.
4. ஒன்பதாம் திருமுறை, பாவும் பயின்ற நிலையும், மு. அருணாசலம், 1974.
5. **A History of Tamil Literture,** T.P. Meenakshi Sundaram, 1965.

# உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
# சென்னை - 600 113
## அண்மை வெளியீடுகள்

| | ரூ.பை. |
|---|---|
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 901 - கி.பி. 1300 | 100.00 |
| உலகத் தமிழிலக்கிய வரலாறு கி.பி. 1851 - 2000 | 180.00 |
| தமிழக வானவியல் சிந்தனைகள் | 35.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள்-நாட்டுப்புறவியல்,கலை,பண்பாடு | 90.00 |
| தொல்காப்பியம்-எழுத்ததிகாரம் மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 200.00 |
| வாழிய செந்தமிழ் | 140.00 |
| பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம் | 40.00 |
| தமிழக எல்லைப் போராட்டங்கள் | 60.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - I | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - II | 90.00 |
| திருப்புகழ் ஒளிநெறி பகுதி - III | 80.00 |
| தொல்காப்பியம்-சொல்லதிகார மூலமும் சேனாவரையருரையும் | 200.00 |
| தொல்காப்பியம்-பொருளதிகார மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் | 325.00 |
| தொல்காப்பியம் - பொருளதிகார மூலமும் பேராசிரியர் உரையும் | 300.00 |
| Economic Heritage of the Tamils | 115.00 |
| மலேசியத் தமிழரும் தமிழும் | 100.00 |
| மொழி, சமய, சமுதாயத் தளங்களில் பாவாணர் பங்களிப்பு | 50.00 |
| தமிழ்ப் புனைகதைகளில் உளவியல் | 35.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் - தொல்லியல், வரலாறு, சமூகவியல் | 100.00 |
| கவிதையியல் | 50.00 |
| பண்பாட்டு நோக்கில் திருமுறைகள் | 30.00 |
| கதைப் பாடல்களில் கட்டுப்பாட்டு மீறல்கள் | 95.00 |
| Bibliography on Translations | 175.00 |
| சங்க இலக்கிய ஆய்வு தெ.பொ.மீ.யும் மேலை அறிஞரும் | 60.00 |
| திராவிட மொழி இலக்கியங்கள் | 200.00 |
| வா.கீ.ச. கலாநிதி கி.வா.ஜகந்நாதன் | 60.00 |
| நாசுதிராதிக்-ஞாலமுதன்மொழிஆய்வுகளுக்குப்பாவாணர் தரும் ஒளி | 35.00 |
| தமிழ்ச்சொற் பிறப்பாராய்ச்சி | 45.00 |
| மொழி பெயர்ப்பியல் | 45.00 |
| தமிழில் தத்துவ நூல்கள் | 40.00 |
| சி.வை. தாமோதரம்பிள்ளை | 40.00 |
| சொல்லிலக்கணக் கோட்பாடு தொல்காப்பியம் - முதல் பகுதி | 70.00 |
| இசுலாமியச் சிற்றிலக்கியங்கள் | 40.00 |
| பாவாணர் கடவுள் நம்பிக்கையும் சமயச் சால்பும் | 30.00 |
| மகளிர் முன்னேற்றத்தில் "அவள் விகடன்" இதழின் பங்களிப்பு | 35.00 |
| திருக்குறள் உரைச் சிந்தனைகள் | 50.00 |
| தமிழர் நாட்டு விளையாட்டுகள் | 95.00 |
| தமிழர் பழக்க வழக்கங்களும் நம்பிக்கைகளும் | 120.00 |
| மீனவர் சமுதாய நாட்டுப்புறப் பாடல்கள் | 35.00 |
| A Course in Modern Standard Tamil | 65.00 |
| இசை மருத்துவம் | 45.00 |
| கம்பன் களஞ்சியம் | 550.00 |
| குலோத்துங்கன் பார்வையில் சமுதாயம் | 70.00 |
| மொழியியல் நோக்கில் தொல்காப்பிய, சங்க இலக்கிய ஆய்வுகள் | 40.00 |

**631 நீறணி பவளக் குன்றம் (ஒன்பதாம் திருமுறை ஆய்வுநூல்) 35.00**